ANGLO ASIAN MINI MART
513 High Road
Wembley,
Middx
Hao 4 ag
Tel: 0181-900 2451
தரமான இலங்கை Groceries
கடலுணவு வகைகள், மரக்கறி
வகைகள் அனைத்தையும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.
Pub.

Euro 1.55 France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

# ஈழமுரசு

பிரித்தானியா

Eelamurasu Weekly

முரசு: 5 04 – 10 நவம்பர் 1999 முழக்கம்: 251

CAR CHECK
Mot & Repair Center
உங்களுடைய சகல திருத்த
வேலைக்கும், M.O.T க்கும்
தொடர்புகொள்ளவேண்டிய இடம்:
(Honda & Nisson Dealer க்கு அருகாமையில்)
Unit 17 Stonefield Close.
Off Stonefield Way
Ruislip - Middx.
தொடர்புகளுக்கு: 0181-841 1880
(சுகுமார்)
Pub.

# ஆனையிறவு படைத்தள வைத்தியசாலை புலிகளின் தாக்குதலில் அழிப்பு

## 544வது பிரிகேட் தலைமையகத்தின் மையப்பகுதி தாக்குதல்

(01.11.99)

ஆனையிறவு, படைத்தளத்தின் வைத்தியசாலை விடுதலைப் புலிகளின் 140 மி. மீ, 120 மி.மீ பீரங்கிகளின் தாக்குதலில் முற்றாக அழிக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் மேற்படி தாக்குதலில் வைத்தியசாலைக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக சிறீலங்கா இராணுவ தலைமையகம் தெரிவித்த போதும், 54ம் படைப்பிரிவின் பொதுக்கட்டளை அதிகாரியான மேஜர் ஜெனரெல் சரத் முனசிங்க புலிகளின் தாக்குதலில் இவ் வைத்தியசாலை அழிக்கப்பட்டதை ஏற்றுக் கொண்டதுடன் பாதுகாப்பான மாற்று வைத்திய சாலை ஒன்றினை உடனடியாக அமைத்துத் தருமாறு இராணுவப் பொறியியல் பிரிவிற்கு அவசர கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த 28ம் திகதி 'வோட்டர் சேட்-2' இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட சிறிது நேரத்தில் ஆனையிறவு படைத்தளத்தின் மீது விடுதலைப் புலிகள் தமது பீரங்கித் தாக்குதலை நடாத்தியுள்ளனர். இத் தாக்குதலினால் 544ம் பிரிகேட் தளப் பகுதியில் மிகப் பாதுகாப்புடன் அமைக்கப்பட்டிருந்த வைத்திய சாலை முற்றாக அழிக்கப்பட்டுள்ளது. இத் தாக்குதலில் ஐந்து சிப்பாய்கள் கொல்லப்பட்டு 30 பேர்

(☞ 2ம் பக்கம்)

# பாலம்பிட்டி–அம்பகாமத்தில் பெரும் சமர்

## உயரதிகாரி உட்பட 30 படையினர் பலி - 200ற்கு மேல் படுகாயம்

(01.11.99)

சிறீலங்கா ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னால் வன்னி பெருநிலப்பரப்பின் பெரும்பாலான பகுதிகளை கைப்பற்றி அவ் வெற்றியின் மூலமாக சிங்கள மக்களின் வாக்குகளை கவர்வதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் முடிவு செய்துள்ளதை தெளிவாக்கும் நோக்குடன் வன்னியில் வாட்டர்சேட்—2 என்ற குறியீட்டுப் பெயருடன் மீண்டும் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றினை கடந்த 28ம் திகதி வியாழக்கிழமை படையினர் ஆரம்பித்தனர். இந் நடவடிக்கையின் ஆரம்பம் முதலே இரு தரப்பினரும் மிகக்கடுமையான தாக்குதலை மேற்கொண்டு வருகின்றனர். விடுதலைப் புலிகளின் பீரங்கிப் படைப்பிரிவினர் இடைவிடாத தாக்குதலை மேற்கொண்டு படையினரின் நகர்வினை தடுத்து நிறுத்துவதற்கு கடுமையாக போராடி வருகின்றனர்.

இராணுவத்தினரும் கிபீர் குண்டுவீச்சு விமானங்களின் மூலம் விமானத் தாக்குதல்களையும் மற்றும் பீரங்கித் தாக்குதல்களையும் மேற்கொண்ட வண்ணம் உள்ளனர். நேற்று முன்தினம் இரவு வாட்டர்சேட்—2 இராணுவ நடவடிக்கையின் அதியுச்ச சமர் பாலம்பிட்டி, அம்பகாமம் ஆகிய பகுதிகளில் வெடித்தது. இச் சமரில் சிறீலங்காவின் படைநடத்து உயரதிகாரி ஒருவர் உட்பட 30ற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் பலியாகி 200 இற்கும் மேற்பட்ட படையினர் படுகாயப்படுத்தப்பட்டுள்ளனர். மோதல் இச் செய்தி எழுதப் படும்வரை தொடர்ந்து நடை

(☞ 2ம் பக்கம்)

# சிறீலங்காவில் ஜனாதிபதி தேர்தல்

## புலிகளின் நிலைப்பாட்டினை மாவீர்தின உரை தெளிவாக்கும்

(01.11.99)

சிறீலங்காவின் ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் உத்தியோக பூர்வ நிலைப்பாடு மாவீரர் தின செய்தியில் அறிவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுவதால் இவ்வருட மாவீரர் தின உரை குறித்து சர்வதேச செய்தி நிறுவனங்கள் மீண்டும் தமது ஆவலினை வெளிப்படுத்தியுள்ளன. வடக்கு கிழக்கு பகுதிகளில் வாக்களிப்பினை மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் குறித்து சிறீலங்கா அரசு ஆலோசனை செய்து தனக்கு சார்பான சில நடவடிக்கைகளை மேற்கொள்ளமுயலும் இவ்வேளை சிறீலங்கா அரசிற்கு தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் என்ன செய்தியினை மாவீரர் தின உரையில் வழங்குவார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

(☞ 2ம் பக்கம்)

# தேர்தல் வெற்றிக்காக பெரும் படையெடுப்பு நடக்கலாம்

## – ஹரிகுணதிலக

(01.11.99)

வன்னியில் ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு பாரிய படையெடுப்பினை நடாத்த இராணுவத்தினர் முயலமாட்டார்கள் என்ற கருத்தினை ஒரு சாரரார் தெரிவித்து வருகின்ற போதிலும் தேர்தல் வெற்றியை நோக்காக வைத்து பாரிய படை நகர்வொன்றினை வன்னியில் மேற்கொள்ள சந்திரிகா உத்தரவிடலாம் என சிறீலங்காவின் முன்னாள் விமானப்படை அதிகாரியான எயார் மார்சல் ஹரிகுணதிலக கொழும்பில் இருந்து வெளியாகும் சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து அவர் தனது செவ்

(☞ 2ம் பக்கம்)

# வம்மிவெட்டுவான் படைமுகாம் மீது தாக்குதல்

## வாகரையில் இருந்து முன்னேறிய படையினர் விரட்டியடிப்பு

(01.11.99)

மட்டக்களப்பு வாகரை பிரதேசத்தில் இருந்து வம்மிவெட்டுவான் நோக்கி முன்னேறிய படையினர் விடுதலைப் புலிகளின் கடும் தாக்குதலால் விரட்டியடிக்கப்பட்டனர். நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு வாகரையில் இருந்து கவசவாகனங்கள் சகிதம் முன்னேறிய படையினரை இடைமறித்த விடுதலைப் புலிகள் அவர்கள் மீது கடுமையான தாக்குதலை நடாத்தி வாகரை முகாமிற்கு விரட்டியடித்துள்ளதாக மட்டக்களப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வம்மிவெட்டுவானில் உள்ள படைநிலைகள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டதையடுத்து முகாமைத் தாக்கி கைப்பற்றப் போகிறார்கள் எனக் கருதியே மேலதிக படையினர் வாகரையில் இருந்து வம்மிவெட்டுவானுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். எனினும் அவர்கள் புலிகளின் எதிர் தாக்குதலினால் விரட்டியடிக்கப்பட்டனர். இதன்

(☞ 2ம் பக்கம்)

## தமிழீழம் இன்றும் நாளையும்

(01.11.99)

தமிழீழம் இன்றும் நாளையும் என்ற தலைப்புடனான சிறப்புக் கண்காட்சி ஒன்று நேற்று காலையில் இருந்து இன்று மாலை வரை இரண்டு நாட்களாக பாரிசில் உள்ள நாதன் - கஜன் அரங்கில் இடம்பெற்றது. தமிழீழத்தின் இன்றைய நிகழ்வுகளையும் நாளை விடுவிக்கப்படும் தமிழீழத்தின் கட்டுமானங்களையும் இக்கண்காட்சி சிறப்பாக விளக்கியிருந்தது. ஏராளமான மக்கள் இக் கண்காட்சியை பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

இச் செய்தி பற்றிய விரிவான கட்டுரையும் புகைப்படங்களும் அடுத்தவார ஈழமுரசில் இடம்பெறும்.

தமிழினி
பல்பொருள் அங்காடி
TAMILINI Cash and Carry
195-197 The Broadway, Southall
Middx Ub1 1LZ
Tel: 0181-606 9900 Fax: 0181-813 8269

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
P. Sivaguru

**Impression:**
IMPRIMERIE MEAULLE
27 BERNAY, FRANCE.

நிர்வாகி:
ப. வேலுப்பிள்ளை

நிறுவக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்

ஆசிரியர்:
பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris, France
E.Mail-eelamurasu@aol.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பாரிஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி:
**Leama**
**Tel: 0208 2053650**
**Fax; 0208 2053651**

டென்மார்க்:
T. சுரேஸ்காந்த்
Møller vcj - 23
5800 Nyborg, Denmark.
Tel: 65316155 - Fax: 65302588

சுவிஸ்: மக்கள் கடை
EELA MURASU
Postfach 238, 4313 Möhlin,
Swiss.
Natel: 079 635 02 16

லண்டன்:
ஜெயந்தன்: - Tel: 0956908145
ஹரி - Tel: 07887874177

இத்தாலி:
மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD -
Tel: 22425527

நெதர்லாந்து:
த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

அவுஸ்திரேலியா:
'EELAMURASU'
P.O Box S-109
Homebush South
N.S.W 2140, Australia.
E-Mail:tccsydney@one.net.au

குறிப்பு:
இவ் இதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.

## இந்து சமுத்திரத்தில் வந்த ஜப்பான் கப்பல் மாயம் சிறீலங்கா கடற்படை தேடுகிறது

*(01.11.99)*

7,000 தொன் அல்மீனியப் பாளங்களை ஏற்றிக்கொண்டு இந்தோனேசியா துறைமுகத்தில் இருந்து ஜப்பானை நோக்கி சென்ற ஆடீ அலோன்ரா றெயின்வோ என்ற சரக்கு கப்பல் இந்து சமுத்திர பிராந்தியத்தில் பயணம் செய்தவேளை அதன் 17 சிப்பந்திகளுடன் மாயமாக மறைந்துள்ளது. இக் கப்பல் எவ்வாறு மறைந்தது என்ற விபரங்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. ஆயினும் இக் கப்பலை யாராவது கடத்திச் சென்றிருப்பார்களா என்பது குறித்தும் சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.

இக் கப்பலை கண்டுபிடிக்க உதவுமாறு ஜப்பானிய அரசாங்கம் சிறீலங்கா அரசினை கேட்டுக்கொண்டதை அடுத்து, சிறீலங்கா கடற்படையின் ரோந்துப் படகுகள் இக் கப்பலைத் தேடி வருகின்றன.

கடந்த மாதம் 22ம் திகதி இக் கப்பல் காணாமல் போனதாகத் தெரிவிக்கப்படுகிறது. பனாமா நாட்டு கொடியின் கீழ் சேவையில் ஈடுபட்ட இக் கப்பல் 7,760 தொன் எடையானதும் 113 மீற்றர் நீளமானதும் ஆகும். அலுமீனியப் பாளங்களை இக் கப்பல் ஏற்றி வந்ததால் ஆயுத தளவாடங்களின் தயாரிப்பு நோக்கத்தோடு இக் கப்பல் கடத்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகமும் சிறீலங்கா கடற்படை வட்டாரங்களில் நில்வி வருகின்றது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### சிறீலங்காவில்...

இவ்வருட மாவீரர் தின உரையில் இந்த நிலைப்பாடு வெளியாகலாம் என விடுதலைப் புலிகளின் மட்டு, அம்பாறை அரசியல்துறை பொறுப்பாளர் திரு. விசுவும் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார். சிறீலங்காவின் எந்த தேர்தல்களையும் அங்கீகரிக்கும் நிலையில் விடுதலைப் புலிகள் இல்லையென சுட்டிக்காட்டிய விசு, தேசியத் தலைவர் தனது மாவீரர் தினச் செய்தியில் இதுபற்றி மேலும் தெளிவாக்குவார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### பாலம்பிட்டி...

பெற்று வருகிறது. கொல்லப்பட்ட படையினரது சடலங்கள் உலங்குவானூர்திகள் மூலமாக கொழும்புக்குக் கொண்டுசெல்லப்பட, காயமடைந்த படையினர் அநுராதபுரம் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இம்முறை காயமடைந்த படையினரை கொழும்புக்கு எடுத்துச் செல்வதை இராணுவத்தரப்பு தவிர்த்துவருகிறது. இச் சமரில் விடுதலைப்புலிகளின் தரப்பில் 24 போராளிகள் வீரச்சாவை தழுவிக்கொண்டனர். வீரச்சாவை தழுவிக்கொண்ட 24 போராளிகளின் விபரங்களையும் புலிகளின் குரல் வானொலி அறிவித்துள்ளது.

இதேவேளை சிறீலங்கா விமானப்படையின் கிபீர் குண்டுவீச்சு விமானங்கள் மன்னார் மாவட்டத்தில் பல பகுதிகளிலும் குண்டு வீச்சினை நடாத்த இராணுவத்தினர் பாண்டியன்குளம் பகுதியை நோக்கி எறிகணை தாக்குதலை நடாத்தி வருகின்றனர். பாலம்பிட்டி பகுதி முனையில் எழுந்த சமரில் விடுதலைப் புலிகளும் இராணுவத்தரப்பும் மிகக் குறுகிய அளவு தூரத்தில் நின்றே போரிட்டுள்ளனர்.

## திருமலையில் சூறைக்காற்று

திருமலை நகரப் பகுதி மற்றும் அதன் சுற்றாடல் பகுதிகளில் கடந்தவாரம் திடீர் சூறைக்காற்றொன்று வீசியதனால் அப் பகுதியில் உள்ள பாரிய மரங்கள் முறிந்து வீழ்ந்ததுடன் வீடுகளுக்கும் சேதமேற்பட்டுள்ளது. உப்புவெளி அலஸ்தோட்ட அகதிமுகாம் பகுதியிலும் பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### தேர்தல்...

வியில், இன்று இராணுவம் பயன்படுத்தப்படுவது யுத்தத்தில் வெல்வதற்கு அல்லவே. தேர்தலில் வெல்வதற்கு தானே? அரசியல் கால அட்டவணைப்படி தேர்தலை வெல்வதற்கு இன்னும் ஒன்று அல்லது இரண்டு பெரும் இராணுவ நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள முயல்கின்றது. அதுகூட நடக்கலாம். ஆனால் அப்படி ஒன்றிற்கு விடுதலைப் புலிகள் இடம் வைப்பார்களா என்பது சந்தேகம்தான் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### வம்மிவெட்டுவான்...

போது படைத்தரப்பிற்கு பலத்த சேதம் ஏற்பட்டிருக்கலாம் என நம்பப்படகிறது.

வம்மிவெட்டுவான் முகாம் மீது தாக்குதல் நடாத்திய அதே வேளை கதிரவெளி படைமுகாம் மீதும் விடுதலைப் புலிகளின் பீரங்கிப் படையணி எறிகணைத் தாக்குதலை நடாத்தியுள்ளனர். இதன்போது படையினருக்கு பலத்த இழப்புக்கள் ஏற்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்ற போதிலும் இராணுவத் தரப்புச் செய்திகள் எவையும் இதுவரை வெளிவரவில்லை.

விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையிலான மோதல்கள் ஞாயிறு அதிகாலை ஐந்துமணிவரை நீடித்ததாகவும் துப்பாக்கி வேட்டுச்சத்தங்களும், எறிகணை குண்டுவெடிப்புகளின் சத்தங்களும் தொடர்ந்து கேட்டவண்ணமே இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பரதநாட்டிய அரங்கேற்றம்



மண்டைதீவு-பாஷையூரைச் சேர்ந்த திரு.திருமதி கிளமென்ற் ஜெரா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், பாரிஸ் 'சோதியா' கலைக் கல்லூரியின் நடன ஆசிரியை நாட்டியக் 'கலைமாமணி' திருமதி **இரத்தினலட்சுமி சோமசுந்தரம்** அவர்களின் மாணவி **செல்வி ஷொபித்தா துஷ்யந்தி கிளமென்ற்** அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் 07.11.99 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெற இருப்பதால் தாங்கள் அனைவரும் வருகை தந்து, நிகழ்ச்சியைச் சிறப்பித்து நல்லாசி வழங்குமாறு வேண்டி நிற்கும்

அன்புடன்
திரு.திருமதி-கிளமென்ற் ஜெரா தம்பதிகள்
தங்கை-யூடித் (நிருஜா)
நடன ஆசிரியை-திருமதி இரத்தினலட்சுமி சோமசுந்தரம்

**அரங்கேற்ற மண்டபம்:**
**Espace Amorc**
199,bis rue saint martin.75004 paris
(M°: Etinne Marcel - Ligne - 4)

Pub

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### ஆனையிறவு...

காயமடைந்ததாக தெரியவருகிறது. தள வைத்தியசாலை பீரங்கித் தாக்குதலினால் அழிக்கப்பட்டதனால் படைத்தளத்தினுள் பீதியும் அதிர்ச்சியும் நிலவியதாக உயர் இராணுவ அதிகாரியொருவர் ஒப்புக்கொண்டுள்ளார். உடனடியாக 54ம் படைப்பிரிவின் கட்டளை அதிகாரியான பிரிகேடியர் எகோடாவல உடனடியாக ஆகாய மார்க்க உதவி கோரி இராணுவத் தலைமையகத்திற்கு செய்தியனுப்பினார். ஆயினும் விடுதலைப்புலிகளின் தாக்குதல் தொடர்ந்து மேற்கொள்ளப்படலாம் என்ற அச்சத்தில் சுமார் ஒரு மணி நேரமாக உலங்குவானூர்திகள் தளத்தினுள் தரையிறங்கவில்லை. அதன் பின்னரே அவை தரையிறங்கி காயமடைந்தவர்களை ஏற்றிக்கொண்டு பலாலி படைத்தள வைத்தியசாலைக்கு விரைந்தன. இத் தாக்குதலின் காரணமாக அதிர்ச்சியடைந்த இராணுவத் தலைமையகம் உடனடியாக சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திற்கு தாக்குதலுக்கு உள்ளாகி அழிக்கப்பட்ட வைத்தியசாலையை பார்வையிட வருமாறு அழைப்பு விடுத்தது. முதலில் இது இராணுவ வைத்தியசாலை என்ற படியினால் இவ்விடயத்தில் தம்மால் ஒன்றும் செய்ய முடியாது என செஞ்சிலுவை சங்க அதிகாரிகள் மறுத்தபோதும் இராணுவ அதிகாரிகளின் தொடரழுத்தம் காரணமாக அழிக்கப்பட்ட வைத்தியசாலையை பார்வையிட்டு திரும்பியுள்ளனர். தற்பொழுது குடாநாட்டில் பலாலி படைத்தள வைத்தியசாலை மாத்திரமே இயங்குவதால் இராணுவத் தரப்பினர் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர். தமிழ் மக்களின் குடிசார் வைத்திய நிலையங்கள் இராணுவத் தாக்குதலின் மூலம் அழிக்கப்படும்போது அது பற்றி செஞ்சிலுவை சங்கம் குரல் கொடுத்தபோது எதிர்ப்புத் தெரிவித்த சிறீலங்கா அரசு தற்போது தனது இராணுவ வைத்தியசாலை தாக்கப்பட்டதும் செஞ்சிலுவை சங்கத்தின் உதவியை நாடியது குறிப்பிடத்தக்கது. இதற்கு முன்னர் வந்த செய்தியில் வைத்தியசாலைக்கு சேதம் மட்டுமே ஏற்பட்டதாக படைதரப்பு தெரிவித்திருந்தது. அச் செய்தி 3ம் பக்கத்தில் வெளிவந்துள்ளது.

ERRANCES TRAVELS

**Tel: 01 42 09 70 00**
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle *ou* Louis Blanc

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900Frs. |
| Delhi | - | 3,900Frs. |
| Bangkok | - | 3,400Frs. |
| Colombo | - | 3,900Frs. |
| Singapour | - | 3,980Frs. |
| Madras | - | 4,300Frs. |
| Londres | - | 790Frs. |
| New york | - | 2,300Frs. |
| Montreal | - | 2,800Frs. |
| Oslo | - | 2,010Frs. |
| Toronto | - | 2,800Frs. |
| Nepal | - | 4,820Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

Li: 075 95 01 37

(ADV)

# சுய இலாபத்திற்காக தமிழ் வாக்காளர்களைப் பயன்படுத்தாதீர் கொழும்பு வாழ் தமிழர் பணிக்குழு வேண்டுகோள்

தமது சொந்த சுய இலாபங்களுக்காகவோ அல்லது பொதுஜன ஐக்கியமுன்னணி, ஐக்கிய தேசியக்கட்சி ஆகியவற்றின் கருவிகளாக செயற்படுவதற்காக வடக்குக் கிழக்கிற்கு வெளியே வாழும் மக்களைத் திசைதிருப்பி குழப்பமான நிலையை ஏற்படுத்த வேண்டாமென கொழும்புவாழ் தமிழர் பணிக்குழு தமிழ்க் குழுக்களிடம் வேண்டுகோள்விடுத்துள்ளனர். இப் பணிக்குழு விடுத்துள்ள அறிக்கையொன்றிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது

தமிழ் மக்களின் மரணங்கள், அழிவுகள், சித்திரவதைகள், பாலியல் வல்லுறவுகள் போன்றவை பெருமளவு ஏற்படுவதற்கு இரு பிரதான சிங்களக் கட்சிகளுமே காரணம். வடக்குக் கிழக்கில் தற்பொழுது ஏற்பட்டிருக்கும் அழிவுகளுக்கு ஐ.தே.க.வும் சிறீலங்கா சுதந்திரக்கட்சியைத் தலைமையாகக்கொண்ட பொதுஜன ஐக்கிய முன்னணியுமே பொறுப்பாகும். இவ்விரு கட்சிகளும் இந்த நாடு சிங்கள பௌத்த நாடு என்ற கொள்கையையே கொண்டிருக்கின்றன. எனவே எதிர்வரும் தேர்தலில் இவ்விரு கட்சிகளுக்கும் முண்டுகொடுப்பதன்மூலம் தமிழ் மக்களுக்கு மேலதிக அவலத்தைத் தேடிக் கொடுக்க வேண்டாமென தமிழ் குழுக்களை நாம் கேட்டுக்கொள்ளுகின்றோம். வடக்குக் கிழக்கைப் பொறுத்தவரை அகதிகள், இடம்பெயர்ந்தோர் நிலவரம் தொடர்பாக கற்பனை கூடச் செய்யமுடியாத நிலையே காணப்படுகிறது. இந்த நிலையில் அப்பகுதிகளுக்கும் தேர்தலை நடாத்த எத்தனிப்பது நிச்சயமாகக் கேலிக்கூத்தாகத்தான் முடியும் எனவும் அவ் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## பாதாள உலகக் கும்பலைத்தேடி கொழும்பில் பாரிய தேடுதல்

கொழும்பு நகரில் இயங்கிவரும் பாதாள உலகக் கும்பலைக் கைதுசெய்யும் நோக்குடன் கடந்த புதன்கிழமை அதிகாலை முதல் கொழும்பு மாளிகாவத்தைப் பகுதியில் பாரிய சுற்றிவளைப்புத் தேடுதல் ஒன்றை சிறீலங்கா இராணுவத்தினரும் பொலிசாரும் கூட்டாக மேற்கொண்டிருந்தனர். இத்தேடுதலின்போது 800 இற்கும் மேற்பட்டவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அதிகாலை 3.30 மணிக்கு இத் தேடுதல்வேட்டை ஆரம்பமானது. கொழும்பு நகரில் இருக்கும் சகல பொலிஸ் நிலையங்களிலிருந்தும் 200 இற்கும் மேற்பட்ட பொலிசாரும் 300 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினரும் இத்தேடுதல் வேட்டையினை நடாத்தினர். 8 மணிவரை இத் தேடுதல் வேட்டை நடைபெற்றது. கைதுசெய்யப்பட்ட அனைவரும் மைதானம் ஒன்றிற்குக் கொண்டுசெல்லப்பட்டு தீவிர விசாரணைகளுக்கு உள்ளாகினர். முகம்மூடி அணிந்த தலையாட்டிகளும் இச்சோதனையின் போது காணப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் தலையாட்டிகளுக்கு முன்னால் நிறுத்தப்பட்டு அடையாளம் காணப்பட்டனர். பாதாள உலகக் கோஷ்டியினரை கைதுசெய்யவென இத்தேடுதல் வேட்டை நடைபெற்றபோதிலும் வழமை போலவே தமிழர்களும் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுக்கொண்டு செல்லப்பட்டனர். மேற்கொள்ளப்பட்ட இந் நடவடிக்கையில் பாதாள உலகக் கோஷ்டியின் முக்கிய தலைவர்கள் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளதாகக் கொழும்புப் பிராந்திய பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

## யாழில் சதோஷ முகாமையாளர் சுட்டுக்கொலை

யாழ். பிரதான வீதியில் வைத்துக் கடந்த 27-ம் திகதி மாலை சிறீலங்காவின் சதோஷ விற்பனை நிறுவனத்தின் முகாமையாளர் இனந்தெரியாத ஆயுதபாணிகளினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். கொல்லப்பட்டவர் சிங்களவராவார். சதோஷ அலுவலகம் முன்பாக இவர் நின்றவேளை அவ்விடத்திற்கு மிதிவண்டியில் வந்த இரு இளைஞர்கள் இவர் மீது தாக்குதலை நடாத்திவிட்டு அவ்விடத்திலிருந்து தப்பிச் சென்றுவிட்டனர். துப்பாக்கிப் பிரயோகத்திற்கு உள்ளானவர் அவ்விடத்திலேயே மரணமடைந்துவிட்டார்.

## பிரதேச உறுப்பினர்கள் பதவி விலகினர்

யாழ். மாவட்டம் வலிகாமம் மேற்கு பிரதேச சபையில் உறுப்பினராக இருக்கும் செல்லையா நடராஜா என்பவர் தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார். அதேவேளை நெடுந்தீவுப் பிரதேச சபையின் உறுப்பினர்களில் ஒருவரான கந்தையா நவனீதனும் தமது பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். இவ்விருவரும் ஈ.பி.டி.பி குழுவினைச் சேர்ந்தவர்கள். அண்மைக் காலமாக யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளால் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரங்களில் பிரதேச சபை உறுப்பினர்களைப் பதவி விலகுமாறு கேட்டிருந்தனர். அத்துடன் பிரதேச உறுப்பினர்களும் இனந்தெரியாத ஆயுதம் தாங்கியவர்களால் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர். மேற்கண்ட நிலைமைகளினால்தான் இவ்விருவரும் தத்தமது பதவிகளில் இருந்து விலகியிருப்பார்கள் எனக் கருதப்படுகிறது.

## ஆனையிறவுத் தளம்மீது வீழ்ந்த புலிகளின் எறிகணைகள்

ஆனையிறவு இராணுவத் தளத்தின் மீது கடந்த 28-ம் திகதியன்று விடுதலைப் புலிகளின் பீரங்கிப் படையணியினர் திடீர் எறிகணை வீச்சொன்றினை நடாத்தியுள்ளனர். இத்தாக்குதலில் 5 படையினர் கொல்லப்பட்டு 30 பேர் காயமடைந்ததாகத் தெரியவருகிறது. ஆயினும் சிறீலங்கா தரப்பு இரு சிப்பாய்கள் உயிரிழந்து 20 பேர்வரை காயமடைந்ததாகத் தெரிவித்துள்ளது.

புலிகளால் ஏவப்பட்ட எறிகணைகள் தளத்தினுள்ளே வீழ்ந்து வெடித்துள்ளன. இத்தாக்குதலின்போது படைத்தளத்தினுள்ளே அமைக்கப்பட்டிருந்த சிகிச்சைப் பிரிவு சேதமடைந்துள்ளதாகத் தெரியவருகிறது. படுகாயமடைந்தவர்கள் உலங்குவானூர்தி மூலமாக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

## பொதுஜன முன்னணியை ஆதரிப்பதாக ஈ.பி.டி.பி தெரிவிப்பு

ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர் சந்திரிகா குமாரதுங்காவை ஆதரிப்பதாக ஈ.பி.டி.பி தெரிவித்துள்ளது. ஈ.பி.டி.பி.யுடன் இலங்கைத் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் மலையக மக்கள் முன்னணி சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் ஆகிய நான்கு கட்சிகளும் சந்திரிகாவினை ஆதரிப்பதாகத் தெரிவித்துள்ளனர். கடந்த 25-ம் திகதி இரவு இக் கட்சிகளுக்கும் சந்திரிகாவிற்குமிடையே சந்திப்பொன்று நிகழ்ந்துள்ளது. அப்போதே இவர்கள் இவ்வுறுதிமொழியினை அவருக்குத் தெரிவித்துள்ளனர். அக்கூட்டத்தில் உரையாற்றிய சந்திரிகா முன்னர் வழங்கிய ஆதரவினைப்போலவே மீண்டும் நீங்கள் எனக்கு ஆதரவு தரவேண்டுமென இக் குழுவினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். இதனையடுத்தே இக்கட்சியினர் சந்திரிகாவிற்கு ஆதரவு தருவதாகப் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளனர்.

## எனது விசுவாசத்திற்குரியவர்கள் சம்மதித்தாலே தேர்தலில் போட்டியிடுவேன் – குமார் பொன்னம்பலம்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் என்னை வேட்பாளராக நிற்குமாறு பலரும் என்னிடம் கோரிக்கைவிடுத்து வருகின்றனர். இவ்வேளை நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். நான் பலருக்கு விசுவாசமாக இருப்பவன். எனவே எனது விசுவாசத்திற்குரியவர்கள் தேர்தலில் ஈடுபடுமாறு கூறும் பட்சத்தில்தான் நான் தேர்தலில் போட்டியிடுவேன். இவ்வாறு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

கடந்த 29-ம் திகதி கொழும்பில் தமிழர் தரப்பில் பொது வேட்பாளர் நிறுத்துவது தொடர்பாக தமிழ் குழுக்களும், கட்சிகளும் நடாத்திய கூட்டமொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இக்கூட்டத்தில் ஆரம்பத்தில் 5 கோரிக்கைகளை முன்வைத்த குமார் பொன்னம்பலம் அக் கோரிக்கைகளை ஏற்று தமிழ் கட்சிகள் கைச்சாத்திடாவிட்டால் அவர்களைத் துரோகிகள் எனவே தான் வர்ணிப்பாரெனவும் தெரிவித்திருக்கிறார்.

## பண்டார வன்னியனின் 196வது நினைவு தினம்

வன்னி இராச்சியத்தை ஆட்சி செய்த கடைசி தமிழ் மன்னனும், ஆங்கிலக் குடியேறிகளை எதிர்த்துப் போராடி வீர மரணமடைந்தவனுமாகிய மாவீரன் பண்டாரவன்னியனின் 196வது நினைவுதினம் கடந்த ஞாயிற்றுக் கிழமையாகும். 1803-ம் ஆண்டு வஞ்சகத் தனமாகக் காட்டிக் கொடுக்கப்பட்டு பண்டாரவன்னியன் கொல்லப்பட்டான். இன்றும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தைக் காட்டிக்கொடுக்கும் வகையில் புல்லுருவிகள் செயற்படுவது இடம்பெறுகிறது. வன்னியில் இம் மாவீரனின் நினைவு தினம் பரவலாக அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

## மடுவில் பொலிசார் மீது தாக்குதல்

விடுதலைப் புலிகளின் கைத்துப்பாக்கி அணியினரால் சுடப்பட்டு இரு சிறீலங்காப் பொலிசார் படுகாயப்படுத்தப்பட்டுள்ளனர். கடந்த 27-ம் திகதி மாலை மடுப் பகுதியில் இத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. கடையொன்றில் பொருட்களை வாங்கிவிட்டு பொலிசார் இருவரும் வெளியே வந்தபோதே அவர்கள் மீது இத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

## சஞ்சீவன் கொலை தொடர்பான விபரம் ஐ.நா. குழுவிடம் சமர்ப்பிப்பு

சிறீலங்காப் படையினரால் மிக மிருகத்தனமான சித்திரவதைகளுக்கு இலக்காகிக் கொல்லப்பட்ட கல்முனை மாணவன் சதாசிவம் சஞ்சீவனின் கொலை தொடர்பான விபரங்கள் ஐ.நா குழுவினரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சிறீலங்காவின் காணாமல் போனோர் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொள்ளவந்த ஐ.நா குழுவிடமே மேற்படி விபரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்டத்தரணிகள் ஐ.நாக் குழுவினருக்கு சஞ்சீவனுக்கு நடந்த சித்திரவதைகளை ஆதாரத்துடன் எடுத்துரைத்தனர்.


2000ம் ஆண்டில் காலடிபதிக்கவிருக்கும் இலாபநோக்கமற்ற 13வது வருட சேவையின் தொடர்ச்சி.... (1986 – 1999)

பாரிஸ் தமிழர் கல்வி நிலையம்

Centre Parisien d'Education pour les Tamouls

பிரெஞ்சு அரசால் அங்கீகரிக்கப்பட்டது No d'Ordre 86-3394

புதிதாக பிரான்சுக்கு வந்ததால் பிரெஞ்சு மொழி அறிவின்மை உங்கள் அன்றாட அலுவல்களுக்கு தடையாக உள்ளதா?
ஏற்கனவே பல பாடசாலைகளில் பிரெஞ்சு கற்றும் சரளமாக உரையாட எழுத முடியாமல் உள்ளதா?

- இலாப நோக்கமற்ற பொது ஸ்தாபனம்,
- 13 வருட நிறைந்த கல்விச் சேவை,
- ஆற்றல், அனுபவமுள்ள ஆசிரியர்கள்,
- காலத்திற்கேற்ப மாற்றி அமைக்கப்பட்ட பாடத்திட்டங்கள்.

ஏற்கனவே கல்வி கற்ற பல்லாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுடன் நீங்களும் ஏன் பயன்பெறக் கூடாது? குறுகிய காலத்தில் உங்களைத் தயார்செய்ய ஆரம்பமாகிறது.

1999 - 2000

காலம் 06/11/99
நேரம் 14:30 - 16:00 (சனி)

- உச்சரிப்பு (*La phonétique*)
- அடிப்படை இலக்கணம் (*La grammaire*)
- உயர் இலக்கணம் (*La grammaire*)
- உரையாடல் (*Les conversations*)
- கடிதம் எழுதுதல் (*Les lettres*)

ஆசிரியர் கஜன்

ஏற்கனவே நடைபெறும் வகுப்புக்களில் புதிய பாடங்கள்
மாலை 13 : 00 - 14 : 30 *Le Subjonctif Passé*
மாலை 16 : 30 - 17 : 30 *Les Semi - auxiliaires*
மாலை 17 : 30 - 19 : 00 *Le Passé Composé*

- உச்சரிப்பு
- உரையாடல்
- பொதுப்பரீட்சைக்கு தயார் செய்தல்
- ஆங்கில நாடுகளில் சரளமாக ஆங்கிலத்தில் உரையாட

14:30–16:00 அமல்
16:00–17:30 ஜெனி

- உங்கள் வீட்டு சுபகாரியங்களுக்கு நீங்களே கேக் தயார் செய்ய.
- பிரெஞ்சு, ஆங்கில முறைப்படி கேக் தயார் செய்ய.

(சனி) 13:00–15:00 செல்வி சுதா

அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும் (சனி, ஞாயிறு 13:00–21:00) 165, Rue de Charonne, 75011 Paris.
Tél : 01.43.56.17.91 E-Mail: assptec@aol.com M° : Charonne ou Alexandre Dumas
- நிர்வாகம்

# எந்தத் தேர்தல்களையும் அங்கீகரிக்கத் தயாரில்லை மட்டக்களப்பு, அம்பாறை அரசியல் பொறுப்பாளர் விசு

சிறீலங்காவின் ஜனாதிபதித் தேர்தல் குறித்து விடுதலைப் புலிகள் பெரிதாக எதனையும் கருதவில்லை. வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக முடிந்த முடிவான கொள்கையை முன்வைத்தே போராடி வருகின்றோம். இந்த நிலையில் நடைபெறும் எந்தத் தேர்தல் தொடர்பாகவும் எமது தலைமையகம் ஏற்கனவே தீர்மானித்த விடயமே முடிந்த முடிவாகும். இவ்வாறு விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு- அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் விசு தெரிவித்துள்ளதாக கொழும்பு நாளிதளொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வடக்குக் கிழக்கு வாழ் மக்கள் விடுதலைப் போராட்டத்திற்குச் சிறந்த தீர்வு எட்டப்படும் வரை எந்தத் தேர்தல்களையும் விடுதலைப்புலிகள் அங்கீகரிக்கத் தயாரில்லை. கடந்த 5 வருடங்களாக வடக்குக் கிழக்கு வாழ் தமிழ் மக்கள் வரலாறு காணாத அளவு துன்ப துயரங்களை அனுபவித்து வருகின்றார்கள். சமாதானத்தைக் கொண்டுவருவதாகக் கூறி ஆட்சிக்கு வந்தவர்களினாலேயே மனி உரிமை மீறல்களும், அடக்குமுறைகளும் மிக மோசமாகக் கட்டவிழ்த்து விடப்பட்டன. நடைபெற உள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக விடுதலைப் புலிகளின் தெளிவான நிலைப்பாடு பற்றி விரைவில் எமது தேசியத் தலைவர் தெளிவாக விளக்குவார் எனவும் அவர் தெரிவித்ததாகவும் அச்செய்திகள். குறிப்பிட்டுள்ளன.

## யாழ்.பல்கலைக்கழக மாணவனுக்குத் தொடர்ந்தும் தடுப்புக்காவல்

கடந்த மாதம் 25-ம் திகதி கைது செய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவனான செல்வநாயகம் சுகந்தன் கடந்த 29-ம் திகதி யாழ்.நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார். அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் இவரை மூன்றுமாத காலம் தடுப்புக் காவலில் வைக்குமாறு சிறீலங்காப் பொலிஸ் அதிகாரி ஜெயத்திலக விடுத்த கோரிக்கையை யாழ். மேலதிக நீதவான் இ.ஏகநாதன் ஏற்றுக்கொண்டு எதிர்வரும் ஜனவரி மாதம் 27-ம் திகதிவரை இம் மாணவனை தடுப்புக் காவலில் நிற்குமாறு உத்தரவிட்டுள்ளார். பல்கலைக் கழகத்தின் 3-ம் வருட மாணவனாகிய இவர் பரீட்சைக்குத் தோற்றவேண்டியிருந்தாலும் இவருக்கான தடுப்புக் காவல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இதே வேளை இம் மாணவனின் கைதிற்கு கண்டனம் தெரிவித்து யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடர்ந்தும் நடைபெறுகிறது.

## அதிபர்கள் ஆசிரியர்களுக்கு ‘வாய்ப்பூட்டு’ச் சட்டம்

சிறீலங்காவின் கல்வி நடவடிக்கைகள் பற்றி அதிபர்கள் ஆசிரியர்கள் மற்றும் அதிகாரிகள் பத்திரிகைகளுக்கும் ஏனைய செய்தி ஊடகங்களுக்கும் செய்திகள், அறிக்கைகள் மற்றும் தகவல்களை வழங்குவது சிறீலங்கா உயர்கல்வி அமைச்சினால் தடைசெய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான சுற்றறிக்கையொன்று மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர்களுக்கும், கல்விப் பணிப்பாளர்களுக்கும் உயர் கல்வி அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட விதிகளை மீறி நடப்பவர்கள் தண்டனைக்குள்ளாவார்கள் எனவும் அவ் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அண்மைக் காலமாக தமிழ் மக்களுக்கு இளைக்கப்பட்டுவரும் கல்வித்துறைப் பாரபட்சங்கள் பற்றி இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் சர்வதேசத்திற்கும் அம்பலப்படுத்திய தன் காரணமாகவே புதிதான இச் சட்டம் உயர்கல்வி அமைச்சினால் பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## கொழும்பில் நான்கு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் ஒரேநாளில் கொள்ளை

கொழும்பு நகரிலும் அதற்கு வெளியேயுமுள்ள நான்கு எரிபொருள் நிரப்பு நிலையங்களை இனந்தெரியாத ஆயுதக்கோஷ்டி ஒன்று கொள்ளையிட்டுள்ளது. கடந்த 28-ம் திகதி அதிகாலை வேளையில் இக்கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. முதலில் மாளிகாவத்தையிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்குச் சென்று அங்கு கொள்ளையை நடாத்திய கோஷ்டி அங்கிருந்த வாகனத்தைக் கடத்திக்கொண்டு தெமட்டக்கொடவிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்குள் நுழைந்து கொள்ளையடித்த பின்னர் கந்தானை, சீதுவ ஆகிய பகுதியளில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் கொள்ளைகளையும் மேற்கொண்டுள்ளனர். காலை 10.00 மணிவரை இக் கொள்ளைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. கொள்ளையர்களால் பயன்படுத்தப்பட்ட வாகனமொன்று நீர்கொழும்பு கடை வீதியில் அநாதரவான நிலையில் கண்டெடுக்கப்பட்டது.

## வன்னியில் ‘வாட்டர் சேட் -2’ ஆரம்பம் புலிகளின் பதிலடியில் திணறும் இராணுவம்

கடந்த 28-ம் திகதி வாட்டர் சேட் -2 என்னும் குறியீட்டுப் பெயருடன் சிறீலங்காப் படையினர் ஒட்டுசுட்டான் மற்றும் ஒலுமடுப் பகுதியிலிருந்து இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர். நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதும் புலிகளின் பதிலடியும் மிக உக்கிரமாக இருந்தது. படையினருக்கு உதவியாக சிறீலங்கா விமானப் படையினரும் தாக்குதல்களை நடாத்தினர். எனினும் விடுதலைப்புலிகளின் பீரங்கிப் படையணியினர் முன்னேற முயன்ற படையினருக்கெதிராக கடும் தாக்குதலைத் தொடுத்தனர். இத் தாக்குதல்களில் 29 படையினர் கொல்லப்பட்டு 60 பேர்வரை காயமடைந்துள்ளதாக வன்னிச் செய்திகள் தெரிவிக்கின்றன. பலியான, காயமடைந்த படையினரில் பெரும்பாலானோர் புலிகளின் பீரங்கித் தாக்குதலுக்கு இலக்கானவர்களாவர்.

## முறிவில் ஆற்றுப்பகுதியில் சிங்களவர்கள் குடியேற்றம்

அம்பாறை மாவட்டத்தின் முறிவில் ஆற்றுப் பகுதியில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளில் சிங்களவர்கள் அத்துமீறிக் குடியேறியுள்ளனர். ஏற்கனவே இங்கு குடியேறிய சிங்களவர்களே புதிய குடியேற்றங்களுக்கு ஊக்குவிப்பு வழங்கிச் செங்கல் உற்பத்தியிலும் அவர்கள் ஈடுபட உதவிகளும் செய்துள்ளனர்.

இது தொடர்பாக தமிழ் மக்கள் உயரதிகாரிகளுக்கு முறையீடு செய்தபோதிலும் குடியேற்றப்பட்ட சிங்களவர்கள் விடயத்தில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

## ஜனாதிபதி பதவி சிவாவிற்கு வேண்டாமாம்

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம்.சிவசிதம்பரத்தை சிறீலங்காவின் ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளராக நிறுத்த தமிழ் கட்சிகள் மேற்கொண்ட முயற்சிகள் யாவும் தோல்வியில் முடிவடைந்துள்ளன. எதிர்வரும் தேர்தலில் எந்த ஒரு வேட்பாளரையும் ஆதரிப்பதில்லை எனக் கூட்டணியினர் வெளிப்படையாகத் தெரிவித்தாலும் சந்திரிகாவிற்கு ஆதரவளிப்பதற்கான திட்டத்தையே உள்ளார்த்தமாக அவர்கள் கொண்டிருக்கின்றார்கள். எனவே சந்திரிகாவை எதிர்த்துப் போட்டியிட சிவசிதம்பரத்திற்கு விருப்பமில்லாததால் இத் தேர்தலில் பொதுவேட்பாளராக நிற்பதற்கு அவர் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

## கல்கிசைப் பகுதியில் முஸ்லீம் மாணவி கடத்தல்

கொழும்பு கல்கிசைப் பகுதியில் முஸ்லீம் மாணவி ஒருவர் இனந்தெரியாத கோஷ்டி ஒன்றால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். கடந்த 25-ம் திகதி மாலை தனிப்பட்ட வகுப்புகளுக்குச் சென்றுவிட்டு இம்மாணவி வீடு திரும்பிக்கொண்டிருந்தபோதே இக் கடத்தல் இடம்பெற்றுள்ளது. கல்கிசை நவீன சந்தைக்கு முன்னால் காலி வீதியில் வைத்துக் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். இவரைக் கடத்திச் சென்ற கோஷ்டி சிங்களவர்களே என இம் மாணவியின் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறையீடு செய்துள்ளனர். இதுவரை இம் மாணவி மீட்கப்படவில்லை.

## தமிழகத்திற்கு மேலும் அகதிகள்

தலைமன்னாரிலிருந்து பன்னிரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 34 பேர் தமிழகத்திற்கு அகதிகளாகச் சென்றுள்ளனர். இவர்கள் தனுஷ்கோடி அருகேயுள்ள அரிச்ச முனைப் பகுதியில் வந்திறங்கியுள்ளனர். ஆரம்ப விசாரணைகளின் பின்னர் இவர்கள் அனைவரும் மண்டப முகாமிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

மண்டப முகாமில் வைத்து தமிழகத்திற்கு தாங்கள் வரவேண்டிய காரணம் பற்றி குறிப்பிட்ட இவர்கள் மீண்டும் தமிழகத்திற்கு அகதிகளாக வரவேண்டிய சூழ்நிலை வடக்குக் கிழக்குப் பகுதியில் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.


தமிழ்ச்சோலை

ஆசிரியர்கள் தேவை

பிரான்சில் வளரும் நம் சிறார்களின் எதிர்கால நலனைக் கருத்தில்கொண்டு நம் அடுத்த தலைமுறை வரும் நூற்றாண்டில் தலை நிமிர்ந்து வாழ்ந்திட வழிகோல சமூக ஆர்வலர்களும் தமிழ் ஆர்வலர்களும் உருவாக்கிய தொண்டு நிறுவனம் தமிழ்ச்சோலை. தன் பணிகளின் விரிவாக்கத்திற்கு பின்வரும் துறைசார்ந்த ஆசிரியர் வழிகாட்டிகளிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றது.

**மொழியியல்:** தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு, ஜேர்மன்.

**நுண்கலை:** நடனம், சங்கீதம், இசைக்கருவிகள்....

**கணினியியல்:** பள்ளிப்பாடங்களுக்கான மீட்டல்

விண்ணப்பங்களுடன், சுய விபரக்கோவை (C.V) இணைத்து அனுப்பவேண்டிய முகவரி:

தமிழ்ச்சோலை

22, Rue Perdonnet, 75010 Paris.

Pub Gra

தமிழர் வித்தியாலயம்

75, rue Philippe de Girard, 75018 Paris - Tel: 01 40 05 11 16

Mětro: Marx Dormoy அல்லது La Chapelle அல்லது Bus: 65

இந்த ஆசிரியரிடம் பிரெஞ்சு கற்றவர்கள் கல்விநிலையங்கள் நடாத்துகிறார்கள். பிரெஞ்சு படிப்பிக்கிறார்கள். மொழி பெயர்ப்பாளராகப் பணி புரிகிறார்கள். பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி கற்கிறார்கள். உரியவர்களிடம் உசாவிப் பாருங்கள். இலைமறைகாய் உண்மை வெளிவரும்.

★ தகைமை + அனுபவம் உள்ள ஆசிரியர்கள். தரமான கல்வி. கூடிய நேரம். குறைவான கட்டணம்

தரமான கல்வியைத் தேடுவோர் நாடும் ஆசிரியர் ச.சச்சிதானந்தம் (10 நூல்களின் ஆசிரியர்)

இங்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் கற்பதையும், கற்பிப்பதையும் தொழிலாக உடையவர்கள் என்பதை பெற்றோர்களின் கவனத்திற்கு அறியத்தருகின்றோம்.

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்: 23.10.1999

பிரெஞ்சு மொழிப் பயிற்சி வகுப்பு Cours de français

வேலை, மருத்துவம், கடிதம், குடியுரிமை போன்ற எதுவாக இருந்தாலும் உங்கள் காரியங்களை நீங்களாகவே செய்வதற்கு ஏற்ப கற்பிக்கப்படும் பிரெஞ்சு வகுப்புக்கள் ஆரம்பம் ஆகின்றன.

- ஆறு மாத கால சனி-ஞாயிறு வகுப்புக்கள்.
- திங்கள் -புதன்-வியாழன்-வெள்ளி இடம்பெறும் மூன்று மாத கால வகுப்புக்கள், காலை: 10.00 மணி–12.00 மணி அல்லது மாலை: 15.00 மணி –17.00 மணி

இதைவிட, கற்பவர்களின் நேரம்–தரம் என்பவற்றிற்கேற்ப குறுகிய காலத்தில் பேச – எழுத கற்றுக்கொள்வதற்கான தனி வகுப்புகளும் உண்டு.

நல்ல ஆங்கிலம் Good English

Toefl க்குத் தயார்செய்து பரீட்சைக்குத் தோற்ற ஒழுங்கு செய்யப்படும்.

டியூசன் வகுப்புக்கள் Soutien Scolaire (CP தொடக்கம் Terminal வரை)

ஒரு பாடம் வாரத்தில் இரு தடவைகள். வகுப்பில் படித்த பாடங்களை மீட்டு, வீட்டு வேலைகளைச் செய்வதற்கு உதவி செய்வது முதல் பாடநேரத்திலும், அடுத்து படிக்க இருக்கும் பாடங்களை முன்கூட்டியே தயார் செய்வது இரண்டாம் பாடநேரத்திலும் இடம்பெறுகிறது.

பிரெஞ்சு மூலம் கம்பியூட்டர் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

சனி, புதன், பிற்பகல், மாலை, ஞாயிறு காலை வகுப்புகள்

ஆரம்பமாகும் பிற வகுப்பு: ★ நல்ல தமிழ்

Pub

# டிசம்பர் 21 ஜனாதிபதித் தேர்தல் வேட்டு மனுக்களைத் தாக்கல் செய்ய கட்சிகள் தயார்

சிறீலங்காவின் ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்புத் தினமாக டிசம்பர் மாதம் 21-ம் திகதியை சிறீலங்காவின் தேர்தல் ஆணையாளர் முடிவுசெய்துள்ளார். இத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யும் திகதி இம்மாதம் 16-ம் திகதியாகும். 21-ம் திகதி முற்பகல் 7 மணிக்கும் பிற்பகல் 4 மணிக்குமிடையே தேர்தல் நடைபெறும் எனவும் இத்தேர்தலில் 1,18,00000 பேர் வாக்களிப்பார்கள் எனவும் தேர்தல் திணைக்களம் எதிர்பார்க்கின்றது. இதேவேளை தேர்தல் வேட்டு மனுக்களைத் தாக்கல் செய்வதற்காக அரசியல் கட்சிகள் தயாராகி வருகின்றன.

இத்தேர்தலில் 7 அல்லது 8 வேட்பாளர்கள் போட்டியிடலாமென கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதுவரை வெளியாகியுள்ள வேட்பாளர்களின் தகவல்களின் அடிப்படையில் சந்திரிகா பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பிலும் ரணில் விக்கிரமசிங்க ஐ.தே.க சார்பிலும் நந்தன ஜெயதிலக ஜே.வி.பி. சார்பிலும் வாசுதேவ நாணயக்கார இடதுசாரி வேட்பாளர்கள் சார்பிலும் ஹரிச்சந்திர விஜயதுங்க பூமிப் புத்திரக் கட்சியின் வேட்பாளராகவும் ஆரியவன்ச ஜனநாயக முன்னணி வேட்பாளராகவும் போட்டியிடுவார்களென எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழ் குழுக்களும் கட்சிகளும் தமது சார்பில் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. இதற்கான கூட்டமொ-ன்று கடந்த 29-ம் திகதி கொழும்பில் நடைபெற்றுள்ளது. இக் கூட்டத்தில் கலந்துகொண்ட அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் 5 கோரிக்கைகளை கூட்டத்தில் முன்வைத்ததுடன் அக்கோரிக்கைகளை எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில்தான் பொதுவேட்பாளர் நிறுத்துவது தொடர்பான தீர்மானத்தில் தான் கைச்சாத்திடுவேன் எனத் திட்டவட்டமாகக் கூறிவிட்டு கூட்டத்தில் இருந்து எழும்பிச் சென்றுவிட்டார்.

# 12 வயதிற்கு மேற்பட்டால் இராணுவ அடையாள அட்டை

திருமலை மாவட்டத்தில் வசிப்பவர்களில் 12 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் புதிய இராணுவ அடையாள அட்டையைப் பெறவேண்டுமென கிழக்குப் பிராந்திய இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இவ் அடையாள அட்டை பெறுவதற்கான' விண்ணப்பப் படிவங்களை சிறீலங்காப் பொலிசார் தற்பொழுது விநியோகித்து வருகின்றனர். முன்னதாக இரு தடவைகள் திருமலை மாவட்ட மக்களுக்கு இராணுவ அடையாள அட்டைகள் வழங்கப்பட்டபோதிலும் இப்போது மூன்றாவது தடவையாக புதிய இராணுவ அடையாள அட்டைகள் பற்றிய அறிவிப்பு வெளியாகியுள்ளது. அண்மைக் காலமாகவே திருமலை நகரினுள் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்து வருவதால் தமது பாதுகாப்புக் குறித்து அச்சம் காரணமாகவே புதிய இராணுவ அடையாள அட்டைகளை வழங்க இராணுவம் முடிவுசெய்துள்ளது.

எனினும் திருமலை இராணுவத்தினர் இவ் அடையாள அட்டை வழங்குவது தொடர்பாக வெளியிட்ட அறிவிப்பில் திருமலை சமாதானக் குழுவின் வேண்டுகோளின் நிமித்தமே இந்த அடையாள அட்டை வழங்கப்பட இருப்பதாகத் தெரிவித்திருந்தது. ஆனால் சமாதானக் குழுவின் தலைவரோ இராணுவத்தின் இக் காரணத்தை மறுத்துள்ளதுடன் இராணுவத் தரப்பே அடையாள அட்டை வழங்கத் தீர்மானித்துவிட்டு தற்பொழுது அதனை சமாதானக் குழுவின் மீது போட முயற்சிப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார். இது குறித்ததான கடிதமொன்றினையும் அவர் இராணுவ தரப்பிற்கு எழுதியுள்ளார்.

# பிரதேச உறுப்பினர்கள் பதவி விலகினர்

யாழ். மாவட்டம் வலிகாமம் மேற்கு பிரதேச சபையில் உறுப்பினராக இருக்கும் செல்லையா நடராஜா என்பவர் தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார். அதேவேளை நெடுந்தீவுப் பிரதேச சபையின் உறுப்பினர்களில் ஒருவரான கந்தையா நவனீதனும் தமது பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். இவ்விருவரும் ஈ.பி.டி.பி குழுவினைச் சேர்ந்தவர்கள். அண்மைக் காலமாக யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளால் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரங்களில் பிரதேச சபை உறுப்பினர்களைப் பதவி விலகுமாறு கேட்டிருந்தனர். அத்துடன் பிரதேச உறுப்பினர்களும் இனந்தெரியாத ஆயுதம் தாங்கியவர்களால் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர். மேற்கண்ட நிலைமைகளினால்தான் இவ்விருவரும் தத்தமது பதவிகளில் இருந்து விலகியிருப்பார்கள் எனக் கருதப்படுகிறது.

# காணாமல் போனோர் பட்டியலில் சிறீலங்காவிற்கு மூன்றாம் இடம் – ஐ.நா.

சர்வதேச ரீதியில் காணாமல் போனோர் சம்பந்தமான குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகியிருக்கும் நாடுகளில் சிறீலங்காவே மூன்றாம் இடத்தை வகிப்பதாக கொழும்பிற்கு வருகை தந்த ஐ.நா. விசேடகுழு தெரிவித்திருக்கிறது. இக்குழுவில் பிரதிநிதியான மாவ்பிறட் நோபேக் கொழும்பில் நடாத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே இதனைத் தெரிவித்துள்ளார். குடிமக்களில் 25000 பேர் வரை காணாமல்போன யூகோஸ்லாவிய முதலாமிடத்தையும், 16,000—17,000 வரை காணர்மல்போன ஈராக் இரண்டாம் இடத்தையும் 12,000-13,000 பேர் வரை காணாமல் போன சிறீலங்கா மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

குடிமக்கள் காணாமல் போதலுக்கு சிறீலங்கா இராணுவம் தான் பொறுப்பென சர்வதேச ரீதியில் ஏற்கனவே இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் எழுந்தது குறிப்பிடத்தக்கது.


## உங்கள் தலைமுடி உதிர்கின்றதா? கவலை வேண்டாம் இதோ ஜேர்மனியின் புதிய கண்டுபிடிப்பு

தலைமுடி உதிர்வு, கணைவெடிப்பு, இளநரை, மற்றும் முடிவளர்ச்சி நிறுத்தம் போன்றவற்றால் விரக்தியடைந்து போயுள்ளவர்களுக்கு ஓர் நற்செய்தி!

இந்தப் பிரச்சினைகள் வயதானவர்களுக்கும் ஏற்படலாம். இள வயதினருக்கும் ஏற்படலாம். ஆனால் இக் குறைபாடுகளை Naturina® வை தொடர்ந்து உபயோகிப்பதன் மூலம் தடுத்து நிறுத்தலாம்.

இத் தயாரிப்பு நீண்டகாலமாக ஆய்வுகளில் ஈடுபட்டுவந்த ஜேர்மனி முன்னணி நிறுவனத்தின் கண்டுபிடிப்பு.

**Naturina® இயற்கையான மருத்துவத்தின் கலவைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் உயிர்ப்புக் கலவையாகும்.**

இத் தயாரிப்பு எந்தவித பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாது.

எமது புதிய தயாரிப்பைப் பயன்படுத்துவதன் மூலம் சர்மம் பளபளப்புத் தன்மையையும், ஆரோக்கியமான தோலினையும், பலமான நகங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

எமது Naturina®தயாரிப்புக்களான கூட்டுக்குளிகைகள், ஷம்பு, கூந்தல் தைலம் (Capsules. Shampoo, Hair tonic) ஆகியவற்றை ஏக காலத்தில் 3 மாதங்களுக்குத் தொடர்ச்சியாக பயன்படுத்தினால் பயன் நிச்சயம்.

***இன்றே பாவியுங்கள் Naturina® உங்களை நிச்சயம் திருப்திப்படுத்தும்!***




தற்போது மாபெரும் மலிவு விற்பனையில்

மேலதிக விபரங்களுக்கு:
**Intercare Handels GmbH**
Munster str 5, 59065 Hamm-Germany
Tel: 0049 2381 688347 / Fax: 0049 2381 688349
Internet: http://www.intercare-naturina.com

நாம் தமிழும் கதைப்போம்
(பிற்பகல் 2 மணியிலிருந்து)



எமது ஸ்தாபனத்தின் தயாரிப்புக்களை உபயோகித்து பலன் பெற்றோர் கூறுவதைக்கேட்டு நீங்களும் பயன்பெறுங்கள்.

**சுவிற்சலாந்திலிருந்து: திரு. ராஜன்.**
*நான் இந்த Naturina® தயாரிப்புக்களைக் கடந்த 3 மாதங்களாகப் பாவித்து குறுகிய காலத்தில் எனது தலைமயிர் உதிர்வைக் குறைத்துக்கொண்டேன்.*

**டென்மார்க்கிலிருந்து: திருமதி துரைராஜா.**
*நான்Naturina® மாத்திரைகளைப் பயன்படுத்தி எனது தோல் பிரச்சினைகளையும் நக அழகையும் பேணிக்கொண்டுள்ளேன்.*

**இங்கிலாந்திலிருந்து: திருமதி ரேணுகாதேவி.**
*இந்த Naturina® தயாரிப்புக்களைப் பற்றி பத்திரிகையில் படித்தபோதும் அதன் பிரதி பலன்களை நான் முழுமையாக நம்பவில்லை. இருந்தும் இவற்றை பயன்படுத்தியதில் முழுப் பலனையும் அடைந்துள்ளேன்.*

# தமிழ்க்குழுக்களின் 'வெட்டிக்கிழிப்பும்' பொது வேட்பாளர் கனவும்

**கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக்கொண்டு கொடுக்கும்**

இந்தப் பழமொழி கொடுக்கும் சந்தோசத்தில் இருப்பவர்கள் யாரென்று சிறீலங்காவின் அரசியல் களத்தைச் சற்று நோக்கினால் தமிழ் குழுவினரே என்பதைப் பதிலாகக் கொடுத்தால் அது ஒன்றும் மோசமான பதிலாக இருக்காது. தமிழினம் சுயமாக வாழமுடியாது நிழலிலேதான் குளிர்காயவேண்டும் என்பதைச் சிங்களப் பேரினவாதம் தெட்டத்தெளிவாகக் கூறினாலும் ஆகா, இதுவல்லவோ உதவியென கோரசாகப் பாடும் நிலைக்கு வந்துவிட்ட தமிழ் குழுவினருக்கு அடுத்தமாதம் 21-ம் திகதி சிறீலங்காவின் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்ற அறிவிப்போ என்னவோ இனம் புரியாத ஒரு மகிழ்வினைத்தான் கொடுத்துள்ளது. எரிகிற வீட்டில் பிடுங்கியது இலாபமாக தமிழ் தேசியத்தின் அவலங்களை முதலீடாக வைத்து தமிழ் குழுவினர் நடத்தி வரும் அநாகரிக அரசியல் ஏதோ இன்று எழுந்த ஒரு விடயமல்ல.

டிசம்பர் 21-ம் திகதி தேர்தல் நடைபெறும் என்ற அறிவிப்பை அடுத்து தமிழ் கட்சிகளும் தமது அரசியல் கடையினைத் திறந்துவைத்து இலாப நட்ட வியாபாரத்தினை மும்முரமாக்கி இருக்கின்றனர். சிறீலங்காவின் ஜனாதிபதித் தேர்தலினூடாக ஏதோ 'வெட்டிக்கிழித்து'விடலாம் என்ற நோக்கில் தம்மிடையே இருந்து பொதுவேட்பாளர் ஒருவரை நியமிப்பதற்கும் இவர்கள் முயற்சிகளை மேற்கொள்ளுகின்றார்கள். இன்னுமொரு சாராரும் மதில்மேல் பூனைகளாக எப்பக்கம் சாய்ந்தால் எவ்வளவு கிடைக்கும் என்ற கணக்குப் போடுதல்களுடன் தமது நிலைப்பாட்டினை பகிரங்கமாக அறிவிக்கமுடியாத ஊமைக்கோட்டான்களாக இருக்கின்றனர். கொழும்பில் அரசியல் நடாத்தும் தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற கட்சி தனது வழமையான இரட்டை முகத்துடன் இத் தேர்தலில் பங்கேற்கின்றது. வெளிப்படையாக எக்கட்சிக்கும் ஆதரவில்லை. எல்லாக் கட்சிகளும் தமிழினத்தை ஒடுக்கும் கட்சிகள்தான் எனக் கூக்குரலிடும் கூட்டணி. மறைமுகமாக சந்திரிகாவினையே இத் தேர்தலில் ஆதரிப்பதற்கு முடிவுசெய்து அதற்கான காய் நகர்த்தல்களில் ஈடுபடுவது இப்போது வெளிச்சத்திற்கு வந்துவிட்டது. பேரினவாதக் கட்சிகள் எவ்வளவுதான் குட்டுக்களைப் போட்டாலும் குட்டினை வாங்குவது எமக்குச் சலுகைகளைத் தரும் கரங்களினால்தானே என்று ஆசுவாசமடையும் போக்கே இன்று தமிழ் கட்சிகளிடையே வேரூன்றியிருக்கின்றது. ஆனால் ஒரு மேடையையும் ஒரு ஒலிவாங்கியினையும் இவர்கள் கைகளில் இன்று கொடுத்தால் தமிழினத்தின் வீரமென்ன, விவேகமென்ன என்கின்ற பாணியிலான உரையினை நிகழ்த்திவிட்டு மேடையை விட்டு இறங்கிச் சென்றுவிடுவார்கள். இச் செயற்பாடு இக் கட்சிகள் காலங்காலமாகக் கொண்டிருக்கும் உருத்திராட்சப் பூனை வேடத்தின் ஒரு பிரதிபலிப்புத்தான்.

தமிழ் கட்சிகளின் தேர்தல் கூத்து இவ்வாறிருக்க, களத்திலிருக்கும் இரு பேரினவாதக் கட்சிகளும் ஒன்றை ஒன்று குழிபறிப்பதற்கு ஏதுவாக தமது தேர்தல் வியூகங்களை அமைத்து வருகின்றன. அதன் முதற்கட்டமாக ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் புத்தி ஜீவியுமான சரத் அமுனுகம ஐக்கிய தேசியக் கட்சி மீது அதிருப்தி கொண்டு பொதுஜன ஐக்கிய முன்னணியில் இணைவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்கிறார் என்ற ஒரு செய்தியினை பொதுஜன ஐக்கிய முன்னணியினரும் அரச சார்பு செய்தி ஊடகங்களும் கட்டவிழ்த்து விட்டனர். ஆயினும் இந்த செய்திகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதுபோல கடந்த வார இறுதியில் கொழும்பிலிருந்த வெளியாகும் ஆங்கிலவார இதழ் ஒன்றில் இந்தச் செய்திகளை சரத் அமுனுகமவே மறுத்திருந்தார். ஐக்கியதேசியக் கட்சியிலிருந்து விலகி பொதுஜன ஐக்கிய முன்னணியில் சேரும் எண்ணம் தனக்கு இல்லையெனத் தெரிவித்த அவர் இது பொதுஜன ஐக்கிய முன்னணியினரின் ஊகமே எனக்குறிப்பிட்டார். சரத் அமுனுகமவின் இந்தக் கட்சி மாறும் செய்தி வெறுமனவே கிழம்பிய ஒன்றல்ல. இதற்கு ஒரு பின்னணி இருக்கின்றது.

சிறிது காலத்திற்கு முன்னர் பொதுஜன ஐக்கிய முன்னணியில் இருக்கும் சந்திரிகாவின் அதிருப்தியாளர்களை வளைத்துப்பிடித்து பாராளுமன்றத்தினை கலைக்கும் முயற்சியில் ஈடுபட ஐக்கியதேசியக் கட்சி திட்டமிட்டது. அதற்கான வழிவகைகளைத் தேடியது. ஆயினும் நினைத்தபடி கட்சிக்கு அதில் வெற்றி கிடைக்கவில்லை. தற்பொழுது இதே காரியத்தை பொதுஜனஐக்கிய முன்னணியினர் ஐக்கியதேசியக் கட்சிக்கெதிராக சமயம் பார்த்து கட்டவிழ்த்து விட்டுள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சியில் ரணியின் தலைமைக்கு எதிரானவர்களை வளைத்துப்பிடித்து எதிர்வரும் தேர்தலில் ரணிலின் வெற்றியை பிசுபிசுக்கச் செய்ய வேண்டும் என்பது பொதுஜன ஐக்கிய முன்னணியின் திட்டம். இதற்காக ரணிலின் மீது அதிருப்திகொண்டவர்கள் யார் என்பதை அறிவதற்கு பொதுஜனஐக்கிய முன்னணியினர் ஆர்வம் காட்டினார்கள். அவர்களின் பார்வையில் சரத் அமுனுகம தட்டுப்படவே சரத் அமுனுகமவும் அவருடன் சேர்த்து ஏழு பாராளுமன்ற உறுப்பினர்களும் ஐக்கியதேசியக் கட்சியைவிட்டு பொதுஜன ஐக்கிய முன்னணியில் இணையப் போவதாகச் செய்திகள் பரவின. ஆனால் சரத் அமுனுகமவே வார இறுதியில் வாயைத் திறந்து இச்செய்தியினை பிசுபிசுக்கப் பண்ணிவிட்டார்.

> **பேரினவாதக் கட்சிகள் எவ்வளவுதான் குட்டுக்களைப் போட்டாலும் குட்டினை வாங்குவது எமக்குச் சலுகைகளைத் தரும் கரங்களினால்தானே என்று ஆசுவாசமடையும் போக்கே இன்று தமிழ் கட்சிகளிடையே வேரூன்றியிருக்கின்றது.**

ஜனாதிபதித் தேர்தலையொட்டி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இரு தரப்பினரும் மாறி மாறி வலை வீசுவதில் விசயமில்லாமல் இல்லை. இத் தேர்தலில் சந்திரிகா வெற்றிபெற்றால் பாராளுமன்றத்தினைக் கலைக்க வேண்டிய தேவையில்லை. ஆனால் மாறாக ரணில் வெற்றியீட்டினால் பாராளுமன்றம் உடனடியாகக் கலைக்கப்படும். எனவேதான் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இருதரப்பினரும் மாறிமாறி பாராளுமன்ற உறுப்பினர்களைக் குறிவைத்து வலைவீசுகிறார்கள். எதிர்வரும் தேர்தலில் ஏழெட்டுப் பேர் களத்தில் இருந்தாலும் பிரதான போட்டி பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் ஐக்கிய தேசிக் கட்சிக்குமிடையிலேதான். எனவே இரு தரப்பினரும் தமது தேர்தல் அறிக்கைகளைக் கவனமாகத் தயாரித்து வருகின்றனர். எப்படியிருந்தாலும் தமிழர்களின் வாக்குகளைக் கவரும் வாக்கில் சில சூட்சுமங்கள் இவ்விரு கட்சிகளினதும் தேர்தல் அறிக்கைகளில் இடம்பெற்றுத்தான் ஆகும். அமெரிக்கக் கறுப்பினத் தலைவர் மாட்டின் லூதர் பாணியில் 'என்னிடம் திட்டமொன்று இருக்கிறது. பதவிக்கு வந்ததும் அதனை வெளியிடுவேன் என ரணில் கூறுகின்றார். இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக கருத்துக் கேட்டபோதே அவர் இப் பதிலினைத் தெரிவித்திருந்தார். மறுபுறத்தே சந்திரிகாவோ உங்களின் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள எனக்கு ஆதரவு தாருங்கள் என்ற பாங்கில் தமிழ் மக்களிடம் கோரிக்கையை விடுத்துள்ளார். இனப்பிரச்சினைத் தீர்வு காண்பதற்கும் யுத்தத்தினை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும் தனக்கு அரசியல் வலுவைத் தருமாறு சந்திரிகா கேட்பது போரினை இன்னும் வீச்சாக நடத்துவதற்கே தவிர பிரச்சினையைத் தீர்த்துக்கொள்வதற்கேயல்ல. உண்மையில் சந்திரிகாவிற்கு பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள விருப்பமிருந்திருக்குமேயானால் அதனை அவர் 5 வருடங்களிற்கு முன்னரே செய்திருக்கலாம். ஆனால் தமிழ் மக்கள் முன்னெப்போதும் அனுபவித்திராத அவலங்களை சந்திரிகா இன்று தனது வெறித்தனமான போர்மூலம் அவர்களுக்குக் கொடுத்துவருகின்றார். ஜனாதிபதி தேர்தலில்கூட தமிழ் மக்களின் வாக்குக்களை கவருவதற்காகப் பேச்சுக்காக சமாதானம் பற்றிக்கூறினாலும் அவரது கட்டுப்பாட்டில் இருக்கும் படையினருக்கு வன்னி மீதான போர் வெறியில் தளர்வு ஏதும் கிடையாது. ஆக மொத்தம் சந்திரிகாவின் பாணி பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டுவதுதான். இந்தவேளை, அப்படியானால் ஐக்கியதேசியக் கட்சியின் நிலைப்பாடு சமாதானத்திற்குரியதாகத்தான் அமையுமா? என்ற கேள்வி ஒன்று எழக்கூடும் அல்லவா? உண்மையில் ஐக்கியதேசியக் கட்சியும் போர்வெறிகொண்ட ஒரு பேரினவாதக் கட்சிதான். நாளுக்கு நாள் பல முகங்களோடு வெளிப்படும் பௌத்த சிங்களப் பேரினவாதத்தின் முகங்களுக்கு ஒப்பனை தீட்டி களத்தில் உலாவர விடுவதே ஐக்கிய தேசியக்கட்சிதான். பேரினவாத அமைப்பான வீரவிதானவிற்கும் ஐக்கியதேசியக் கட்சிக்கும் தொடர்பு இல்லையெனக் கூறமுடியாது. ஐக்கியதேசியக் கட்சிக்கு வீரவிதானவுடன் தொடர்பில்லையென அக் கட்சியின் பொதுச் செயலாளர் காமினி அத்துக்கோரளை அண்மையில் தெரிவித்திருந்தாலும் வீர விதானவின் தமிழ் மக்களுக்கெதிரான போக்கினை ஐக்கியதேசியக் கட்சி இன்றுவரை கண்டிக்கவுமில்லை, அவ்வமைப்பு இதுவரை புரிந்த நாசகாரச் செயல்களுக்கெதிராக ஒரு வார்த்தையைக்கூட அது பிரயோகிக்கவுமில்லை. இதிலிருந்து அவர்களின் உள்நோக்கு என்ன என்பது புலப்படுகின்றது.

**பேம்பி**


## தமிழர் தொலைவபேசி நிலையம்




வர்த்தகர்களுக்கு விசேட கழிவு உண்டு!

itineris

SFR

Bouygues Telecom

1 Card - 90 Frs

Numéro Vert (Min)

இலங்கை - 42

இந்தியா - 42

ALLO BOX

59, Rue d'Avron,
75020 Paris

Tel: 01 43 73 76 83 - Fax: 01 43 73 96 31

M°: Maraîchers / Buzenval

Bus: 26

புதிய படப் பிரதிகளை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்

Pub. Fra

# ‘ஜயசிக்குறுய்’ முதல் ‘வோட்டர் ஷெட்’ வரை நாம் செலவிட்ட பணத்தை ‘பேர்ச்’ இற்கு 15 ஆயிரம் கொடுத்து வடக்கை விலைக்குவாங்கியிருக்கலாம்

## சிங்களம் கூறும் சில...

- மாந்தன் -

ஜயசிக்குறுய் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது வவுனியா யாழ்ப்பாணம் பிரதான பாதையை விடுதலைப் புலிகளிடம் இருந்து மீட்டு தரைவழியான தொடர்பொன்றை அங்கு ஏற்படுத்துவது என்ற நோக்கத்துடன்தான் 1997 மே மாதம் 13-ம் திகதி அதிகாலை ஆரம்பமாகிய ஜயசிக்குறுய் நடவடிக்கை இராணுவ சரித்திரத்திலேயே இடம் பெற்ற ஒன்றாக கணிக்கப்பட்டது. இந்த இராணுவ நடவடிக்கையின் பிரதான நோக்கத்தை அடைய இராணுவத்தால் முடியாமல் போனது மாத்திரமன்றி இடைவழியிலே நிறுத்தவும் பட்டது. வவுனியா-யாழ் பாதையில் 90 மைல்களில் ஒன்றரை வருட கால நடவடிக்கைகளின் மூலம் 30 மைல்களை மாத்திரமே இராணுவத்தால் கடக்க முடிந்தது. வவுனியாவில் இருந்து மாங்குளம் வரையிலான இந்த 30 மைல்களை அடைவதற்குள் இராணுவம் 4000 படையினரை இழந்தது. அத்துடன் ஆறாயிரத்துக்கு மேற்பட்ட இராணுவத்தினர் காயமடைந்தனர். பலகோடி ரூபாய்கள் பெறுமதியான நவீன ஆயுத தளவாடங்கள் விடுதலைப் புலிகளுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது. அதேபோல் மேலும் பல ஆயிரம்கோடி பெறுமதியான ஆயுதங்கள் நாசமாகியன.

இப்படி மிகப் பெரும் முதலீட்டுடன் நடந்த இராணுவ நடவடிக்கையினால் 30 மைல்களை இராணுவம் கைப்பற்றிக்கொண்டபோதிலும் வடக்கு மக்களுக்கு இதனால் எந்தவித இலாபங்களும் ஏற்படவில்லை. 1999 ஒகஸ்ட் மாதம் ஒரு தரைவழியான வழியொன்று திறக்கப்பட்டபோதிலும் இன்றுவரை அது முழுமையாக முடக்கப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றது.

இப்போது ஜயசிக்குறுய் நடவடிக்கையின் மூலம் கைப்பற்றப்பட்ட முப்பது மைல்கள் விஸ்தீரணம்கொண்ட பகுதியில் 30,000 இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். நிலப் பகுதி விடுதலைப்புலிகளிடம் இருந்து மீட்கப்பட்டுவிட்டது என அரசு கூறினாலும் அப்பகுதிக்குள் விடுதலைப்புலிகள் தாக்குதல்கள் பலவற்றை நடத்திவருகிறனர். அதேபோல் இராணுவத்தின் பாதுகாப்பு வலையப் பகுதிகளுக்குள் விடுதலைப் புலிகள் மேற்கொள்ளும் மோட்டார் எறிகணைத் தாக்குதலால் அங்குள்ள இராணுவத்தின் உயிர்களுக்குப் பேராபத்து ஏற்பட்டுள்ளது. இந்த ஜயசிக்குறுய் தோற்றுவித்த ஒரு இலட்சத்துக்கும் அதிகமான அகதிகள் பெரும் சிரமங்களுடன் முகாம்களில் வாழ்கின்றனர் என்பதுவும் குறிப்பிட வேண்டியுள்ளது. இடைவழியில் நிறுத்தப்பட்ட ஜயசிக்குறுய் நடவடிக்கையின் பின் 1999-ம் ஆண்டு மார்ச் மாதம் 6-ம் திகதி 'ரணகோச I' எனும் இராணுவ நடவடிக்கையை இராணுவம் ஆரம்பித்தது. வவுனியா, மன்னார் பிரதேசங்களில் உள்ள விடுதலைப் புலிகளின் பலத்தை அழிப்பதே இதன் பிரதான நோக்கமாக இருந்தது. இன்றுவரை இப்பகுதியில் எட்டு இராணுவ நடவடிக்கைகள் முடிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் பல இழப்புக்கள் இல்லாமலேயே இலக்கினை அடைந்தன.



> **ஆனால் 1999-ம் ஆண்டு செப்டெம்பர் 12-ம் திகதி ஆரம்பமாகிய ரணகோச-5 இராணுவம் எதிர்பார்த்திராத மிகப்பெரும் தோல்வியைப் பெற்றுக்கொடுத்தது. இலகுவாக சொல்வதானால் பிறந்தவுடனேயே மரணமடைந்த இராணுவ நடவடிக்கை இது என இராணுவ வரலாற்றில் இணைந்து கொண்டுள்ளது.**

ஆனால் 1999-ம் ஆண்டு செப்டெம்பர் 12-ம் திகதி ஆரம்பமாகிய ரணகோச-5 இராணுவம் எதிர்பார்த்திராத மிகப்பெரும் தோல்வியைப் பெற்றுக்கொடுத்தது. இலகுவாக சொல்வதானால் பிறந்தவுடனேயே மரணமடைந்த இராணுவ நடவடிக்கை இது என இராணுவ வரலாற்றில் இணைந்து கொண்டுள்ளது. ரணகோச-5 இராணுவ நடவடிக்கை இரண்டரை நாட்களுக்கு இடம் பெற்றதானாலும் ஆரம்பமாகிய முதலாவது நாளிலேயே இரவாகியபோது நடவடிக்கை முடக்க நிலையை அடைந்தது. அந்த இராணுவ நடவடிக்கையை அப்போது நடத்துவது சாத்தியமற்றது என்றும் சிறிது காலத்திற்கு பிற்போட வேண்டும் என்றும் களத்தில் இருந்த இராணுவ தளபதிகள் கூறியபோதும் அரசியல் இலாபங்களைக் கருத்தில் கொண்டு உடனடியாக நடத்த வேண்டும் என்று அரசியல் தலைவர்கள் நெருக்கியுள்ளனர். இதனாலேயே அப்போது அவசர அவசரமாக ரணகோச-5 நடத்தப்பட்டது. இதன் திட்டமிடல் கொழும்பில் மேற்கொள்ளப்பட்டு, அது பின்னர் வன்னிக்கு அனுப்பப்பட்டு இதன்படி நடக்கும்படி அறிவிக்கப்பட்டது. கள நிலைமையை கருத்தில்கொள்ளாது களத்தில் திட்டமிடப்படாத ஒரு இராணுவ நடவடிக்கை என்கின்ற ரீதியில் சிறீலங்காவின் இராணுவ வரலாறு இதையும் பதிவுசெய்துகொள்ளும். 130 இராணுவத்தினருக்கு மேல் பலியாகி, 500 வரையான படையினர் காயங்களுக்கு உள்ளாகி, 15 இராணுவத்தினர் காணாமல் போய், முடிவடைந்த இந் நடவடிக்கையால் அரசுக்கு எந்த இலாபங்களும் கிடைக்கவில்லை.

ரணகோச-5 இன் தோல்வியின் வடுவை மறைக்க வோட்டர் ஷெட் எனும் நடவடிக்கையை இராணுவம் ஆரம்பித்தது. ஆனால் இந்த இராணுவ நடவடிக்கையை இராணுவம் ஆரம்பிக்க முன்னரேயே விடுதலைப்புலிகள் 'வோட்டர் ஷெட்டின்' தலைவிதியை நிர்ணயிக்க முடிவு செய்தனர். அந்த வழியில் ரணகோச-5 எப்படி முடிவடைந்ததோ அதேபோல் 'வோட்டர் ஷெட்டும்' முடிவடைந்தது. ஏராளமான படையினர் இறந்தும் காயமடைந்தும் இராணுவம் இலாபம் எதனையும் அடையவில்லை.

இப்படியாக 'ஜயசிக்குறுய்' முதல் 'வோட்டர் ஷெட்' இராணுவ நடவடிக்கை வரை இராணுவம் பயணம் செய்த தூரத்திற்கு அரசிற்கு இலாபங்களை விட பெரு நட்டங்களே அதிகளவில் ஏற்பட்டுள்ளன. கூறப்படக்கூடிய மூன்று இராணுவ நடவடிக்கைகளிலும் புலிகள் மிகப் பலத்துடன் இராணுவத்துக்கு முன்னால் தோன்றி அதன் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

நவம்பர் மாதம் வெளியிடவுள்ள வரவுசெலவில் நாலாயிரம் கோடிக்குமேல் பாதுகாப்பிற்கு ஒதுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. யுத்தத்துக்கு எனச் செலவிடப்படும் இப்பணம் எம்முடையதே தவிர வேறு யாருடையதும் அல்ல. எமது பணத்தினைச் செலவழித்து நடக்கும் யுத்தத்தில் இலாபத்தினை எதிர்பார்ப்பது சாதாரணமானதே. அப்படி இலாபங் கிடைக்காது எனத் தெளிவாகும்போது பல ஆயிரம் கோடிகளை செலவழித்து யுத்தம் செய்வதை விடுத்து அவற்றை வேறுவழியில் பயன்படுத்தலாமே.

ஜயசிக்குறுய் முதல் வோட்டர்ஷெட்வரை செலவிடப்பட்டுள்ள பெருந்தொகைப் பணத்தை கணக்குப் பார்த்தால் ஒரு 'பேர்ச்' இற்கு 15 ஆயிரம் படி கொடுத்து முழு வடக்கையும் விலைக்கு வாங்கியே இருக்கலாம். ஒருவரும், இருபதுபேர் கொண்ட குழுவினரும் மோதிக் கொண்டால் யார் வெல்வார்கள் என இரண்டாம் வகுப்பு மாணவர்களிடம் கேட்டால் இருபது பேர்தான் என்று கூறுவார்கள். சிறீலங்காவில் விடுதலைப் புலிகளின் எண்ணிக்கையுடன் இராணுவத்தின் தொகையை ஒப்பிட்டால் மேலே கூறிய உதாரணம் சரியாகிறது. ஆனால் மோதலின் முடிவுகள் அப்படியில்லையே.

> **இப்படியாக ‘ஜயசிக்குறுய்’ முதல் ‘வோட்டர் ஷெட்’ இராணுவ நடவடிக்கை வரை இராணுவம் பயணம் செய்த தூரத்திற்கு அரசிற்கு இலாபங்களைவிட பெரு நட்டங்களே அதிகளவில் ஏற்பட்டுள்ளன. கூறப்படக்கூடிய மூன்று இராணுவ நடவடிக்கைகளிலும் புலிகள் மிகப் பலத்துடன் இராணுவத்துக்கு முன்னால் தோன்றி அதன் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தியுள்ளனர்.**

நவீன ஆயுத தளவாடங்கள் வாங்க அரசுக்குப் பணம்கிடைக்கிறது. அத்துடன் உயர் இராணுவ அதிகாரிகள் குறைவில்லாமல் சம்பளம் பெறுகிறார்கள். இவை போதாதென்று எமது இராணுவம் பல வருடங்கள் யுத்த அனுபவத்தைக்கொண்டுள்ளது. அப்படியிருந்தும் எம்மால் வெற்றி பெற முடியவில்லை என்றால் அதுபற்றி நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் யோசிக்கவேண்டும்.

*- பெரமுன பத்திரிகையில் வெளிவந்த கட்டுரையிலிருந்து*


## சுவிஸ் வாழ் தமிழ் மக்களே!

சிறீலங்காவில் உள்ள தேவையான உங்கள் ஆவணங்கள் சம்பந்தமான அலுவல்களை செய்ய பெற்றுத்தர உறுதியான முகவர் சேவை இங்கும்!

* பிறப்பு / இறப்பு பதிவு ஆவணங்களை பெற்றுத்தர
* திருமணப் பதிவு, திருமணமாகாத சான்றுப் பத்திரம்
* அடையாள அட்டை தொலைந்த / புதிதாக எடுக்க
* உறவினர்களை அழைப்பதற்கான சிறீலங்காவில் சுவிஸ் தூதரக ஆவண ஏற்பாடுகள் (இலங்கையில்)
* கடவுச்சீட்டு பெறத் தேவையான ஒழுங்குகள்

மற்றும் இவை சம்பந்தமான பலசேவைகளை (விரும்பினால் சுவிஸ் தூதரக உறுதிச்சான்றுடன்) வழங்க காத்திருக்கின்றோம்

* தொடர்புக்கு (சுவிஸ்) 076-5450938 ராம்

*திங்கள் - வெள்ளிக்கிழமைகளில் 14h - 17h30-வரையும் சனி ஞாயிறு 24 மணி நேரமும்*

sw 23043

# ஒரிசா–மேற்கு வங்கத்தில் கடும் புயல் 200 பேர் பலி என அச்சம்

மேற்கு வங்கம், ஒரிசாவின் பல பகுதிகளிலும் கடந்த 29-ம் திகதி வீசிய கடும் புயலினால் அப்பகுதிகளில் பேரளிவு ஏற்பட்டுள்ளது. இப்புயலுக்கு 200 இற்கும் மேற்பட்டவர்கள் பலியாகியிருக்கலாமென ஆரம்பச் செய்திகள் அச்சம் தெரிவித்துள்ளன. குறிப்பாக மேற்கு வங்கத்தில் இருந்து மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் கடலிலேயே பலியாகியிருக்கலாமெனவும் அஞ்சப்படுகிறது. இப் புயலினால் 10 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் பாதிப்படைந்துள்ளனர். மணிக்கு 250 கிலோ மீற்றர் வேகத்தில் வீசிய இப் புயலினால் 2000-ற்கும் மேற்பட்ட வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. அத்துடன் பல பகுதிகளிலும் மின்சாரம் தொலைத்தொடர்பு, தொடருந்து, சாலைப் போக்குவரத்துக்கள் முற்றாகச் சீரிகுலைந்துள்ளன. புயல் காற்றுடன் கனத்த மழையும் அப்பகுதிகளில் பொழிந்ததால் வெள்ளத்தின் சீற்றத்திற்கும் மக்கள் பலியாகியுள்ளனர். தற்பொழுது இப் பகுதிகளில் நிவாரணப்பணிகளில் ஈடுபடுத்தவென இராணுவத்தினர் அனுப்பப்பட்டுள்ளனர். அத்துடன் பாதிப்படைந்த மக்களுக்கு நிவாரணம் அளிக்குமாறு ஒரிசா முதல்வர் பகிரங்க வேண்டுகோளை விடுத்துள்ளார்.

# மஹராஸ்ரா கூட்டணி அரசில் சிக்கல்

மஹராஸ்ரா மாநிலத்தில் காங்கிரஸ்-தேசியவாதக் காங்கிரஸ் கூட்டணி அமைச்சரைப் பதவியேற்ற பதினொரு நாட்களில் இரு தரப்பினர்களுக்குமிடையே சிக்கல் எழுந்ததால் மஹராஸ்ரா அரசு கவிழும் அபாயம்வரை அது சென்றுள்ளது. ஆயினும் இருதரப்பினரும் மேற்கொண்ட கடுமையான பேச்சுக்களின் முடிவில் அவ் அபாயம் தவிர்க்கப்பட்டுள்ளது. முன்னதாக அமைச்சரவையில் காங்கிரஸ் மட்டும் அதிகளவில் அமைச்சர்களை நியமித்துக்கொண்டு தேசியவாத காங்கிரசிற்கு சரியான பங்கினை அளிக்கவில்லை என்பதால் இருதரப்பினருக்குமிடையே முறுகல் நிலை எழுந்தது.

கடந்த 28-ம் தியதியன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தேசியவாத காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் அமைச்சரவையில் கலந்துகொள்ளாமல் புறக்கணிப்புச் செய்தனர். தமது கட்சிக்கு தகவல்கூடத் தெரிவிக்காமல் காங்கிரஸ் அமைச்சர்கள் நியமிப்பு விடயத்தில் ஒரு தலைப்பட்சமாக நடந்துகொண்டதாக தேசியவாதக் காங்கிரஸ் குற்றஞ்சாட்டியது. இதனையடுத்து இருதரப்பினருக்குமிடையே நடைபெற்ற பேச்சுக்களின் முடிவில் அமைச்சர்களின் எண்ணிக்கையை 61-ல் இருந்து 55 ஆகக் குறைப்பதற்கு இருதரப்பினரும் ஒப்புக்கொண்டனர். தற்பொழுது இம்முறுகல்நிலை ஓரளவு தீர்க்கப்பட்டதாகத் தோன்றினாலும் மீண்டும் இரு தரப்பினருக்குமிடையே பிரச்சினைகள் தலைதூக்குமெனவே மஹாராஸ்ரா அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# தமிழக பேருந்துகள் ஆந்திராவில் தடுத்துவைப்பு

காய்கறிகொண்டு வருவதற்காக விழுப்புரத்தில் இருந்து ஆந்திரா சென்ற 6 பேருந்துகள் ஆந்திர மாநிலம் அனந்தபூரில் தடுத்து வைக்கப்பட்டன. டீசல் விலை உயர்வை கண்டித்து இந்தியா முழுவதும் பாரவண்டி உரிமையாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் உணவுத் தானியங்கள், காய்கறிகள் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் ஒரு மாநிலத்தில் இருந்து மற்றொரு மாநில்த்துக்கு எடுத்துச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால், விலைகள் உயர்ந்துள்ளன.

விழுப்புரம், பாண்டிச்சேரியைச் சேர்ந்த 2 வியாபாரிகள் 3 அரசு பேருந்துகளை வாடகைக்குப் பெற்று காய்கறி எடுத்துவர ஆந்திராவிற்கு அனுப்பி வைத்திருந்தார்கள்.

இந்த பேருந்துகளையும் ஆந்திர மாநிலம் அனந்தப்பூரில் பாரவண்டி உரிமையாளர்கள் சங்க போராட்டத்தைச் சேர்ந்தவர்கள் வழி மறித்து சிறை பிடித்து வைத்துள்ளனர். இதுபற்றி உடன் நடவடிக்கை எடுத்து உதவுமாறு வியாபாரிகள் விழுப்புரம் மாவட்ட பொலிஸ் தலைமையகத்திடம் தகவல் தெரிவித்து உள்ளார்கள்.

# போர்பஸ் குற்றப் பத்திரிகையில் ராஜீவ் பெயர்: போராட்டம் நடத்தப்போவதாக சோனியா அறிவிப்பு

போர்பஸ் பீரங்கி ஊழல் வழக்குத் தொடர்பான குற்றப் பத்திரிகையில் ராஜீவ் காந்தியின் பெயரைச் சேர்த்திருப்பது அரசியல் பழி தீர்க்கும் நோக்கம் கொண்டதாகும் என சோனியா காந்தி தெரிவித்துள்ளார். போர்பஸ் ஊழல் வழக்குத் தொடர்பான குற்றப் பத்திரிகை சுமார் 13 வருடங்களிற்குப் பிறகு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இக் குற்றப்பத்திரிகையில் ராஜீவ் காந்தியின் பெயர் 20 இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்குக் காங்கிரஸ் கட்சி கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதுடன், நாடளாவிய ரீதியில் இதற்கெதிராகப் போராடப் போவதாக காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி தெரிவித்துள்ளார்.

இதேவேளை மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் அருண்ஜேட்லி நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது ராஜீவ் கொலைவழ்க்கின் பிரதான குற்றவாளியான தனு, மற்றும் இந்திரா கொலைவழக்கின் பிரதான குற்றவாளியான பியான்சிங் ஆகியோருடன் ராஜீவ்காந்தியை ஒப்பிட்டுக் குறிப்பிட்டதற்கும் சோனியாகாந்தி கண்டனம் தெரிவித்துள்ளார்.

# போஃபர்ஸ் விசாரணையை எதிர்கொள்ள காங்கிரஸ் அச்சம்

## – ப.ஜ.க. –

போர்ஃபர்ஸ் ஊழல் விசாரணை எப்போதெல்லாம் வேகப் படுத்தப்படுகிறதோ. அப்போதெல்லாம் சோனியா காந்தியின் அரசியல் நடவடிக்கைகளும் வேகமாகின்றன என்று பா.ஜ.க. தமிழ் மாநிலப் பொதுச் செயலாளர் இல. கணேசன் கூறினார். புதன்கிழமை சென்னை நிருபர்கள் சங்கத்தில் அவர் அளித்த பேட்டி: நீதிமன்ற விசாரணையைத் தடுப்பதில் வல்லவரான ஜெயலலிதாவுடன் சேர்ந்து இவ் விசாரணையைத் தடுக்கும் முயற்சியில் காங்கிரஸ் ஈடுபட்டுள்ளது.

வழக்கில் ராஜீவ் பெயர் வந்தால் வரட்டும். அதை எதிர்கொண்டு, அவர் குற்றமற்றவர் என்பதை நிரூபிப்போம். என்றல்லவா காங்கிரஸ் கூற வேண்டும்? ராஜீவ் இருந்தபோது இவ் விசாரணை நடைபெற அனுமதிக்கவில்லை. விசாரணையை நடத்த முனைந்த தேவகௌடவின் ஆட்சி கவிழ்க்கப்பட்டது எனவும் அவர் தெரிவித்தார்.

**பெண்களுக்கான இலவச பிரெஞ்சு வகுப்புகள்**

பாரிஸ் 10-ல் அமைந்திருக்கும் ATF சங்கம் பெண்களுக்கான இலவச பிரெஞ்சு வகுப்புகளை ஆரம்பிக்கவுள்ளது.

வகுப்பு நேரம் காலை 9 மணி முதல் 11 மணி வரை.

மேலதிக விபரங்களுக்கும், தொடர்புகளுக்கும்:

Mme. NADIA

130, Rue du Faubourg St. Poissonniere,

75010 Paris.

Tel: 01 45 96 04 06

## இந்தியச் செய்திகள்

# நாடு முழுவதும் பாரவண்டி வேலை நிறுத்தம் முடிவு

நாடு முழுவதும் கடந்த ஒருவாரகாலமாக பாரவண்டி உரிமையாளர்கள் நடத்தி வந்த வேலை நிறுத்தம் புதன்கிழமை நள்ளிரவு விலக்கிக்கொள்ளப்பட்டது. அகில இந்திய மோட்டார் வாகன போக்குவரத்து காங்கிரசுக்கும் மத்திய அரசுக்கும் இடையில் நடந்த பேச்சில் உடன்பாடு ஏற்பட்டதையடுத்து, வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

மத்திய தரைவழிப் போக்குவரத்து அமைச்சர் நிதீஷ் குமாரும், அகில இந்திய மோட்டார் போக்குவரத்து காங்கிரஸ் தலைவர் ஓ.பி.அகர்வாலும் இத் தகவலைக் கூட்டாக நிருபர்களிடம் நள்ளிரவில் அறிவித்தனர். டீசல் விலையை, மத்திய அரசு 35 சதவீதம் உயர்த்தியது. இதை எதிர்த்து, இந்த வேலைநிறுத்தத்தைப் பாரவண்டி உரிமையாளர்கள் மேற்கொண்டனர். ஆனால் டீசல் விலையைக் குறைக்க அரசு மறுத்துவிட்டது.

இதனிடையில் பாரவண்டி உரிமையாளர்களுக்கும் அரசு தரப்பினருக்கும் இடையில் நடந்த முதல் பேச்சுவார்த்தையில் தேக்கநிலை இருந்தது. போக்குவரத்துத் துறைச் செயலர் அசோக் ஜோஷியுடன் மோட்டார் வாகன காங்கிரஸ் தலைவர் ஓ.பி. அகர்வால் உள்ளிட்டோர் 2 மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தினர். உடன்பாட்டின் அம்சங்கள் பேச்சுவார்த்தையின்போது மோட்டார் வாகனப் போக்குவரத்தை ஒரு தொழிலாக அங்கீகரிப்பது என்ற கோரிக்கை குறித்து பரிசீலிக்கப்படும் என்று நிதீஷ்குமார் அறிவித்தார். இதற்கு நாடாளுமன்றத்தின் அனுமதி பெறப்படும் என்றார் அவர். உடன்பாட்டின் அம்சங்கள்: வாகனங்களுக்கான உரிமம், பதிவு, தகுதிச் சான்றிதழ் ஆகியவற்றுக்கான கட்டணங்களை உயர்த்தி அரசு கடந்த 11-ம் திகதி பிறப்பித்த அரசு ஆணை திரும்பப்பெறப்படும்.

போக்குவரத்துத் தொழிலில் உள்ளவர்களின் குறைகளைத் தவிர்க்க மாதந்தோறும் அதிகாரிகள் கூட்டம் நடத்துவர். சரக்குக் கட்டணத்தை நிர்ணயிக்க மாநில அரசுகளிடம் கேட்டுக் கொள்ளப்படும். வேலை நிறுத்தம் குற்ற வழக்குகள் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட போக்குவரத்து சங்கத்தினரை விடுவிக்கவும் வழக்குகளைக் கைவிடவும் மாநில அரசுகள் அறிவுறுத்தப்பட்டுள்ளன. இது விடயத்தில் தமிழக முதல்வர் கருணாநிதியுடன் நிதீஷ் குமார் பேசினார். அதற்கு முதல்வர் இசைவு தெரிவித்தார்.

சுங்கத் தீர்வை வசூல் புகார்களை விசாரிக்க தனிக் குழு அமைக்கப்படும். அதுபோல், அனுமதி கட்டணம் குறித்து அடுத்த மாதம் நடைபெறும் போக்குவரத்து அபிவிருத்தி சபைக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்படும்.

# தூக்கில் தொங்கும் போராட்டத்திற்கு வந்த வழக்கறிஞர் கைது

தூக்கில் தொங்கும் போராட்டத்திற்கு வந்த திருச்சி வக்கீல் கைது செய்யப்பட்டார். இந்தச் சம்பவம் பற்றிய விவரம் வருமாறு:

திருச்சி ஜெசிறீபால் ஒரு வழக்கறிஞர். இவர் மரண தண்டனையை இந்திய அரசியல் தண்டனைச் சட்டத்திலிருந்து நீக்கக் கோரி திருச்சியில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு தூக்கில் தொங்கும் போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்திருந்தார்.

இதையடுத்து வக்கீல் சிறீபாலைக் கைதுசெய்ய பொலிசார் வலைவீசித் தேடிவந்தனர். ஆனால் நாள்தோறும் ஒவ்வொரு மாறு வேடத்தில் சிறீபால் சுற்றி வந்தார்.

இதையொட்டி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஏராளமான பொலிசார் குவிக்கப்பட்டிருந்தனர். இதனால் அப்பகுதியே பெரும் பரபரப்பாகக் காணப்பட்டது. அவ்வழியே வந்து செல்வோர் மீது பொலிசாரின் கண்காணிப்பும் இருந்தது.

இதற்கிடையில் காலை 10.00 மணியளவில் மாவட்ட அலுவலகத்திற்கு வெள்ளை ஜிப்பா தாடியுடன் மதானி போல் வேடமணிந்து வக்கில் சிறீபால் கையில் கயிற்றுடன் ஓடிவந்தார். இதைக் கண்ட பொலிசார் அவரைக் கைதுசெய்தனர். விசாரணைகள் நடைபெறுகின்றன.



# தமிழக தமிழர்களைவிட வெளிநாட்டு தமிழர்களுக்கே மொழிப்பற்று அதிகம்

## – தமிழ்க் குடிமகன்

தமிழை 'பின்பற்றாத அரசு அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று நெல்லையில் நடைபெற்ற ஆட்சிமொழிக் கருத்தரங்கில் தமிழக தமிழ் ஆட்சிமொழி, தமிழ் பண்பாட்டு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் தமிழ்க்குடிமகன் குறிப்பிட்டார். தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் நெல்லை மாவட்ட ஆட்சிமொழி கருத்தரங்கம் பாளை. தூய சவேரியார் கல்லூரி 'இலெபோ' அரங்கில் நடைபெற்றது.

இவ்விழாவில் அமைச்சர் தமிழ்க்குடிமகன் பேசியதாவது:

எனக்கு முன் பேசியவர்கள் அனைவரும் ஆட்சிமொழி சிக்கலை எடுத்துச் சொன்னார்கள். 43 ஆண்டுகளில் தட்டுத்தடுமாறி ஒரு வழியாக கரையேறி இப்போது தலைமைச் செயலகத்தில் இருந்து, கீழ் இயங்கும் அரசு அலுவலகங்கள்வரை தமிழில் அனைத்து கோப்புகளும் இயங்க ஆணையிடப்பட்டுள்ளது. 1968-ல் அறிஞர் அண்ணா இருமொழிச் சட்டத்தைக்கொண்டுவந்தார். 1973-ல் தான் அவர் கனவு நிறைவேறியது. தமிழில்தான் எல்லா கோப்புகளையும் வெளியிட வேண்டும். தமிழில்தான் கையெழுத்துப் போடவேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்த பின்பும் சொன்னபடி அதிகாரிகள் கேட்பது இல்லை. இனி அவர்கள் அரசின் ஆணைக்கு விரோதமாகச் செயல்பட்டால் தண்டனை உறுதி, அரசு அதிகாரிகளுக்குக் கேட்க நாதி இல்லை என்ற மதப்பு. பின் எளிதில் மன்னிப்புக் கேட்டு தப்பித்துக்கொள்வார்கள். 1998-ல் தேர்தல் அறிக்கையில் தமிழ்மொழியை முழுமையாக ஆட்சி மொழியாக்குவோம் என்று மக்களுக்கு வாக்குறுதி அளித்தோம். அதை இன்று செய்து காட்டுகிறோம்.

தமிழ்நாட்டில் உள்ள தமிழர்களைவிட வெளிநாட்டு தமிழ் மக்கள் நல்ல பற்று உள்ளவர்களாகக் காணப்படுகிறார்கள். சிங்கப்பூரில் நம்மைவிட 1.2.56ல் தமிழ் ஆட்சிமொழிச் சட்டத்தைக்கொண்டு வந்தார்கள். 5 சதம் தமிழர்கள் வசிக்கும் அங்கு, சம ஆட்சிமொழி தந்துள்ளார்கள்.

சிங்கப்பூர் பாராளுமன்ற கட்டடத்தில் முதலில் மலேசிய மொழியிலும், அடுத்து சீன மொழியிலும், 3-வதாக தமிழ் மொழியிலும், 4-வதாக தான் ஆங்கிலத்தில் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. ஆனால் தமிழ்நாட்டில் உள்ள கடைகளில் ஆங்கிலத்திற்குத்தான் முக்கியத்துவம் கொடுத்து விளம்பரம் செய்கிறார்கள்.

தமிழ்மொழியை யாரும் கையாலாகாத மொழி என்று நினைக்காதீர்கள். தமிழ்நாட்டில் உள்ள விமான நிலையங்களில் தமிழில் அறிவிப்பு வெளியிட் முயற்சி மேற்கொள்ளப்படும்.

அரசு அதிகாரிகள் சொந்தத்தில் தமிழில் கோப்புகள் எழுத முயற்சிக்கவேண்டும். ஒரு விவசாயி என்னிடம் ஒரு மனுவை கைநாட்டு போட்டு எழுதிக் கொடுத்திருந்தார். அந்த மனுவில் தனக்கு மின்வாரியத்திலிருந்து வரும் கடிதங்கள் அனைத்தும் ஆங்கிலத்தில் வருவதாக குறிப்பிட்டு எழுதியிருந்தார். இத்தகைய தவறுதல்களை அதிகாரிகள் தவிர்க்கவேண்டும்.

அடுத்த ஆண்டிலிருந்து அனைத்து துறைகளின் கோப்புகளும், தமிழில்தான் இயங்க வேண்டும். இல்லையேல் அந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். தமிழ்நாட்டில்தான் தமிழ் உணர்ச்சி மிகவும் குறைந்துவருகிறது. எனக்குக் கற்றுக்கொடுத்த தமிழ் ஆசிரியர் ஒரு விழாவிற்கு வரச்சொல்லி ஆங்கிலத்தில் அழைப்பிதழ் அனுப்பி இருந்ததால் நான் அங்கு செல்லவில்லை. தமிழகத்தில் இனி தமிழ்வழி கற்றவர்களுக்கு முன்னுரிமை அளித்து அரசு பணியில் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். ஹிந்தி படித்தால்தான் வடமாநிலத்தில் வேலை கிடைக்கும் என்று சொல்வது தவறு. உத்திரப்பிரதேசத்தில் 45 இலட்சம் ஹிந்தி படித்தவர்களுக்கு வேலை இல்லை. பீகாரில் 38 இலட்சம் ஹிந்தி படித்தவர்களுக்கு வேலை இல்லை. தமிழகத்தில் 35 இலட்சம் பேருக்கு வேலை இல்லை. இதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். இவ்வாறு அமைச்சர் தமிழ்க்குடிமகன் பேசினார்.

# ஜெயலலிதா வலையில் மூப்பனார் சிக்கக்கூடாது – இல.கணேசன் பேட்டி

ஜெயலலிதா வலையில் மூப்பனார் சிக்கக்கூடாது என்று இல. கணேசன் கூறினார். பா.ஜ.க பொதுச்செயலாளர் இல.கணேசன் நேற்று நிருபர்கள் சங்கத்தில் பேட்டி அளித்தார் அப்போது அவர் கூறியதாவது:

தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெற்றுள்ளது. 99-ம் ஆண்டு தேர்தல் வித்தியாசமான தேர்தலாகும். யாரும் விரும்பாத தேர்தல் என்றாலும் கூட எல்லாம் நன்மைக்கே 98-ல் ஆட்சி நிலைத்திருந்தால் ஒரு வாக்கில் ஊஞ்சலாடும் அச்சுறுத்தல் தொடர்ந்து கொண்டிருக்கும் ஆட்சியைக் கவிழ்த்தார்கள். தீமையிலும் நன்மை கிடைக்கிறது.

99-ம் ஆண்டு தேர்தலில் பெரும்பான்மை கிடைத்துள்ளது. 98-ல் வாஜ்பாய் மக்களை நினைக்க முடியவில்லை. ஆனால் இப்போது மக்களை நினைக்கக் கூடிய அளவிற்கு நிம்மதியான ஆட்சி நடைபெறுகிறது.

காபந்து அரசை ஒரு நிமிடம் கூட நடத்த விடமாட்டேன் என்று டெல்லிக்கு படையெடுத்தார்கள். அவர்களுக்கு 18 எம்.பி. சீட்டிலிருந்து 10 எம்பியாக எண்ணிக்கை குறைந்துள்ளது. எங்கள் கூட்டணிக்கு அதிக இடங்கள் கிடைத்துள்ளன. வாழப்பாடியைத் தவிர பா.ஜகவுடன் தி.மு.க. சேரலாமா என்றார்கள். மக்கள் எங்கள் கூட்டணியை அங்கீகரித்துள்ளார்கள். மக்கள் நிலையான ஆட்சியை விரும்பியதால் வாஜ்பாயைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

இந்தநிலையில் த.மா.கா, தலைவர் மூப்பனார் அனுபவமிகுந்த அரசியல்வாதி. அவருக்கு நான் அபிப்பிராயம் சொல்வது நல்லதல்ல. இருந்தாலும் அவருக்கு ஒரு வகையான வலை விரிக்கப்பட்டுள்ளது.

அ.தி.மு.க. விரிக்கும் வலையில் அவர் சிக்கக்கூடாது. அப்படி சிக்கினால் அவருக்குள்ள மதிப்புக் குறைந்துவிடும். தி.மு.க., அ.தி.மு.க. வை எதிர்ப்போம் என்று கூறி தனியாக நின்றார். ஜாதிக் கட்சிகளை தன்னுடன் சேர்த்ததால்தான் அவரது மதிப்புக் குறைந்தது எனவும் அவர் தெரிவித்தார்.

# வாஜ்பாய்க்கு வைகோ பாராட்டு

பாராளுமன்றத்தின் மக்களவை மற்றும் மாநிலங்களவையில் ஜனாதிபதியின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் நேற்றுத் தொடங்கியது. மக்களவையில் இந்த விவாதத்தை பாரதிய ஜனதா கட்சி உறுப்பினர் விஜய் மல்கோத்ரா துவக்கி வைத்துப் பேசினார். மாற்று அரசு அமைக்க இயலாத நிலையில் வாஜ்பாய் அரசைத் தேவையில்லாமல் கவிழ்த்த காங்கிரசுக்கு மக்கள் பலத்த அடிகொடுத்துள்ளனர் என்று அவர் அப்போது கூறினார். கடந்த 13 மாதகால ஆட்சியில் செய்த சாதனைகளுக்கும், கார்கில் பிரச்சினையை வெற்றிகரமாகக் கையாண்டதற்காகவும் வாஜ்பாயை மீண்டும் மக்கள் பதவியில் அமர்த்தியுள்ளனர் என்றும் அவர் கூறினார். 114 வருடம் பழமை வாய்ந்த காங்கிரஸ் கட்சியால் சாதாரண பெரும்பான்மைகூட பெற இயலவில்லை என்றும் மல்கோத்ரா கடுமையாகத் தாக்கினார்.

இதனையடுத்து வழிமொழிந்து பேசிய ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, கார்கிலில் மரணமடைந்த வீரர்களின் ஈடிணையற்ற தியாகத்திற்கு நாடு என்றைக்கும் கடன்பட்டிருக்கிறது அவர்களை நன்றியுடன் நினைவுகூர்கிறது. பிரதமர் வாஜ்பாய் சிக்கலான நேரத்தில் வெற்றிகரமாக நாட்டை வழிநடத்திச் சென்றார். அவராற்றிய பங்கு, பணி உலகம் முழுவதையுமே வியக்கவைத்தது என்றும் வைகோ கூறினார்.

## கார்கில் போரில் 6900 கோடி ரூபா செலவு?

கார்கில் போரில் இந்தியாவுக்கு மொத்தம் ரூபா.6900 கோடி செலவானதாக அமெரிக்காவில் இருந்து வெளியாகும் 'டிபென்ஸ் நியூஸ்' என்ற ஏடு தெரிவிக்கிறது. இந்தியாவில் மின்னணு கண்காணிப்பு கருவிகளில் பெரிய கோளாறு இருந்ததை கார்கில் போர் அம்பலப்படுத்தியதாக அந்த ஏடு கூறுகிறது. இதையடுத்து ஆளில்லாமல் பறக்கும் உளவு விமானங்களை இஸ்ரேலிடம் இருந்து வாங்க இந்தியா முடிவு செய்துள்ளது. ஐரோப்பிய நாடுகளிடம் இருந்து ரேடார் கருவிகள் வாங்க இந்தியா முயல்வதாக அந்த ஏடு மேலும் கூறுகிறது.

## திருச்சி அ.தி.மு.க அலுவலகம் முன்பு 'ஜெ' கொடும்பாவி எரிப்பு

திருச்சியில் புதிய தமிழகம் கட்சியைச் சேர்ந்தவர்கள் அ.தி.மு.க மாவட்டச் செயலாளர் அலுவலகம் முன்பு ஜெ.கொடும்பாவியை எரித்தனர். இந்த சம்பவம் பற்றிய விவரம் வருமாறு.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா, புதிய தமிழகம் கட்சியை வன்முறைக் கட்சி என்று கடந்த சில நாட்களுக்கு முன்பு கூறியிருந்தார். இதற்குப் புதிய தமிழகம் கட்சியின் நிறுவனத் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி கடும் எதிர்ப்புத் தெரிவித்தார். அ.தி.மு.க. தான் வன்முறைக் கட்சி என்றார். வன்முறைக் கட்சி என்று கூறியதற்கு ஜெயலலிதா மன்னிப்புக்கேட்க வேண்டும். இல்லையென்றால் போயஸ் தோட்டம் முன்பு புதிய தமிழகம் கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடத்துவார்கள் "என்று அறிவித்திருந்தார்.

இந்நிலையில் கடந்த 26-ம் திகதி திருச்சிச் சந்தி அருகே புதிய தமிழகம் கட்சியின் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமியின் கொடும்பாவியை அதி.மு.கவினர் எரித்தனர். இதற்குப் பதிலடி கொடுக்கும் விதமாக மறுநாள் 27-ம் திகதி திருச்சி அ.தி.மு.க. மாநகர் மாவட்டச் செயலாளர் பரஞ்சோதி அலுவலகம் முன்பு புதிய தமிழகம் கட்சியைச் சேர்ந்த சிலர், திடீரென்று தாங்கள் எடுத்துவந்த ஜெயலலிதா கொடும்பாவியைக் கீழே போட்டுக் கொளுத்தினர். பிறகு அவர்கள் அங்கிருந்து சென்றுவிட்டனர்.

அ.தி.மு.க. மாவட்டச் செயலாளர் அலுவலகம் உள்ள பகுதியின் அருகிலேயேதான் புதிய தமிழகம் கட்சியின் மாவட்ட அலுவலகமும் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# தூக்குத்தண்டனைக்கு கருணாநிதி எதிர்ப்பு

தூக்குத்தண்டனைக்கு முதல்வர் கருணாநிதி எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் அளித்த பேட்டி வருமாறு:

**கேள்வி:** ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள 4 பேருக்காக கருணை மனு கொடுக்கப்பட்டுள்ளது. அந்த மனு தொடர்பாக மாநில அரசின் கருத்தைக் கேட்டு மனுவை கவர்னர் அனுப்பியிருப்பதாக வானொலியில் செய்தி சொல்லப்பட்டுள்ளதே?

**பதில்:** கருணை மனு மாநில அரசுக்கு வந்தது. அது குறித்து கவர்னர்தான் முடிவு எடுக்க வேண்டும். கோப்பு கவர்னருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**கேள்வி:** கவர்னர் உங்களுக்கு அனுப்பி மாநில அரசின் கருத்துக் கேட்டால் அதுகுறித்து உங்கள் கருத்து என்ன?

**பதில்:** ராஜீவ்காந்தி கொலை வழக்கு என்பதற்காக இல்லை, பொதுவான கருத்து தூக்குத் தண்டனையைவிட நீண்டகால தண்டனையாக இருந்தால் தண்டனையை அனுபவிக்கும்போது அதற்காக உணர்ந்து வருந்துவதற்கு வாய்ப்பு உண்டு. இந்த வழக்கிற்காக இந்தக் கருத்தைச் சொல்லவில்லை. எல்லா வழக்கிற்கும் பொருந்தும்.

**கேள்வி:** ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட 4 பேருக்கு ஜனாதிபதியிடம் கருணை மனு கொடுக்கும்போது தி.மு.க. எம்.பி.க்களும் அதில் கையெழுத்துப்போட முயற்சி எடுப்போம் என்று டாக்டர் ராமதாஸ் சொல்லியிருக்கிறாரே?

**பதில்:** முயற்சி எடுக்கும் போது சொல்கிறேன்.

# விரைவில் ஓய்வு பெறுவேன்

## – ஜோதிபாசு

மேற்குவங்க முதல்மந்திரி ஜோதிபாசு கல்கத்தாவில் கடந்த 28-ம் திகதி தான் ஓய்வுபெற இருப்பதாக தெரிவித்திருக்கிறார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது, மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் 'பொலிட் பீரோ' கூட்டம் வரும் நவம்பர் மாதம் 18-ம் திகதி டெல்லியில் கூடுகிறது. இந்த 2 நாள் கூட்டத்தில், நான் ஓய்வுபெறுவது குறித்தும் விவாதிக்கப்படும். முதல்வர் பதவியை விட்டாலும் நான் 'பொலிட்பீரோ' உறுப்பினராக நீடிப்பேன். அரசியலைவிட்டு விலகமாட்டேன்.

இவ்வாறு அவர் கூறினார். ஜோதிபாசு வரும் 17-ம் திகதி டெல்லி புறப்படுகிறார்.




## கிழக்கு தீமோர் விடுதலை வீரர் குஷ்மாவோவுக்கு ஐரோப்பிய பாராளுமன்றம் விருது வழங்கியது

கிழக்குத் தீமோரின் விடுதலைக்காக தனது வாழ்நாளைச் செலவிட்டவரும், ஏழுவருடங்கள் இந்தோனேசியாவின் சிறைகளில் அடைக்கப்பட்டிருந்தவருமான எச்சானனா குஷ்மாவோவுக்கு ஐரோப்பிய பாராளுமன்றம் இவ் வருடத்திற்கான சக்காரோவ் மனித உரிமை விருதினை வழங்கப்போவதாகக் கடந்த வியாழனன்று அறிவித்தது.

கடந்த ஒகஸ்ட் மாதம் 30-ம் திகதி கிழக்குத்தீமோர் மக்கள் இந்தோனேசியாவின் சுயநிர்ணய கோரிக்கையை நிராகரித்ததன்பின் இந்தோனேசிய சிறையில் இருந்து குஷ்மாவோ விடுதலை செய்யப்பட்டார். இந்தோனேசிய படைகளுக்கு எதிராக கடந்த 24 வருடங்களாக போரிட்டு வரும் பலின்டில் அமைப்பின் தளபதியான இவர் 92-ம் ஆண்டு இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இப்போது சுதந்திர கிழக்குத்தீமோரின் புதிய தலைவராக பதவியேற்கக் காத்திருக்கின்றார்.

வரும் டிசெம்பர்மாதம் 15-ம் திகதி ஸ்ராஸ்பேர்க் நகரில் வைத்து 15.000 ஈரோக்களும் விருதும் குஷ்மாவோவுக்கு வழங்கப்படவுள்ளது. 1988-ம் ஆண்டு சக்காரோவ் விருதினை முதன் முதலாக நெல்சன் மண்டேலா பெற்றுக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தென்கொரிய தீ விபத்தில் 55 பேர் மரணம்

தென்கொரிய தலைநகர் சோலில் இருந்து 50 கிலோமீற்றர் தொலைவிலுள்ள இன்சோன் நகரில் கடந்த ஞாயிறு இரவு இடம்பெற்ற தீ விபத்தொன்றில் 55 பேர் கொல்லப்பட்டு 74 பேர் காயமடைந்துள்ளனர். சன நடமாட்டம் மிக்க கட்டடப் பகுதியில் அமைந்திருந்த 3 மாடி கட்டடமொன்றின் இரண்டாவது மாடியில் ஏற்பட்ட தீயே இவ்வுயிர் இழப்புக்களுக்குக் காரணமாக அமைந்துள்ளது.

ஞாயிறு இரவு அக் கட்டடத்தின் இரண்டாவது மாடியில் அமைந்திருந்த மதுபான விடுதியொன்றில் உயர் கல்வி மாணவர்கள் மது அருந்தியபின் நடனமாடிக்கொண்டிருந்த வேளையில் திடீரென ஏற்பட்ட தீ விபத்தினாலேயே இம் மரணங்கள் சம்பவித்துள்ளன. தென்கொரியாவில் 18 வயதிற்குக் குறைந்தோர் மது அருந்துவது தடைசெய்யப்பட்டுள்ளது. அன்றைய தினம் அக்கட்டடத்தில் நடன விருந்து இடம்பெற்றதென்றும் அங்கு வந்திருந்த இளைஞர்கள் பெருமளவில் மது அருந்தினர் என்றும் சொல்லப்படுகிறது. அக்கட்டடத்தின் ஒரு பகுதியில் சுத்திகரிப்பு வேலையில் ஈடுபட்டிருந்த இரு இளைஞர்கள் நிலத்தில் காணப்பட்ட பெயின்ரை தின்னர் பாவித்து அகற்றிக்கொண்டிருந்தனர். அப்போது ஒரு இளைஞர் தனது ஂகையில் விளக்கொன்றினைக் கொழுத்தியபோது அது தவறி நிலத்தில் விழுந்ததால் தீ பற்றிக்கொண்டுள்ளது.

அதேவேளை சில வாரங்களுக்கு முன் அக் கட்டடத்தில் மின்சாரத் திருத்த வேலைகளில் ஈடுபட்ட ஊழியர்கள் கவனயீனமாக சில தவறுகள் விட்டிருந்த காரணத்தினாலும் என்றும் கட்டடத்தில் தீ பற்றியவுடன் மின்சார உதவியுடன் தீ பெரிதும் பரவியுள்ளது.

இப்போது பொலிசார் நான்கு மின் திருத்த வேலையாளர்களையும் ஒரு சுத்திகரிப்புத் தொழிலாளரையும் தேடிவருகின்றனர். 1971-ம் ஆண்டு தீ விபத்தொன்றில் 165 பேர் கொல்லப்பட்டிருந்தனர். பின்னர் 3 வருடங்கள் கழித்து மற்றுமோர் தீ விபத்தில் 88 பேர் கொல்லப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## செச்சினியாவின் இரண்டாவது நகரை ரஷ்யா முற்றுகையிட்டது

ரஷ்யப் ப்டைகள் கடந்த ஞாயிறன்று செச்சினியாவின் இரண்டாவது பெரிய நகரமான குடேர்ம்ஸ் சை முற்றுகையிட்டது என ரஷ்ய செய்தி நிறுவனம் செய்திவெளியிட்டுள்ளது.

செச்சினியத் தலைநகர் குரோஸ்னியிலிருந்து 30 மைல் தொலைவில் இந்நகர் உள்ளது. கிழக்குப் பகுதியாக குரோஸ்னியுடன் இணைப்பை ஏற்படுத்தும் பிரதான பாதையைக் கொண்டுள்ள இந்நகரை ரஷ்யப் படைகள் சுற்றி வளைத்ததுடன் அங்குள்ள மக்களையும் ஆயுதக் குழுவினரையும் ஆயுதங்களைக் கீழே போடும்படி அறிவித்துள்ளது என ரஷ்யாவின் இன்ரர்பக்ஸ் செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

ரஷ்யப் படைகள் வடக்காகவும், வடமேற்காகவும் தலைநகர் குரோஸ்னியை அண்மித்து நிலைகொண்டுள்ளன. கடந்த சில தினங்களாக செச்சினியாவின் பல பகுதிகளின்மீது ரஷ்ய விமானங்கள் கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டுள்ளன. டொல்ஸ்டோய்யூட், சிஸ்கி, செச்சன் ஓல் போன்ற பகுதிகளே இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளானவையாகும். கடந்த சில வாரங்களாக ரஷ்யப்படைகள் செச்சினியாமீது மேற்கொண்டுவரும் தாக்குதலால் 300 இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர். 1,90,000 பேர் அகதிகளாக இங்குஷெட்டியா நோக்கி இடம்பெயர்ந்துள்ளனர்.

இதற்கிடையே உண்மையான ஜனநாயக தலைவர்களுடன் மாத்திரம்தான் ரஷ்யா பேச்சுவார்த்தை நடாத்தும் என அந்நாட்டின் தேசியங்களுக்கான அமைச்சர் தெரிவித்துள்ளார். செச்சினியாவின் ஜனாதிபதி அஸ்லான் மஸ்காடோவ் போர்க்குழுக்களுடனும் சட்ட விரோத அமைப்புக்களுடனும் கொண்டுள்ள தொடர்புகளை விட்டெறிந்தால் எதிர்காலச் செச்சினியாபற்றி அவருடன் பேச ரஷ்யா தயாராக இருக்கிறது என அமைச்சர் மேலும் தெரிவித்தார். குரோஸ்னியை இரண்டு முனைகளில் நெருங்கியிருக்கும் ரஷ்யப் படைகள் அந்நகர்மீது உடனடியான தாக்குதல்களை நடத்தாது என ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு செய்திவெளியிட்டுள்ளது.

## எகிப்து எயார் விமான விபத்தில் 217 பேர் பலி

அமெரிக்க நியூயோர்க் ஜோன் எவ் கெனடி விமான நிலையத்திலிருந்து எகிப்தியத் தலைநகர் கெயிரோவிற்குப் புறப்பட்ட விமானமொன்று விபத்துக்குள்ளானதில் அதில் பயணம்செய்த அனைவரும் கொல்லப்பட்டுள்ளனர்.

எகிப்து எயார் விமான நிறுவனத்திற்குச் சொந்தமான போயிங் 767 ரக விமானம் லொஸ் ஏஞ்சல்சில் இருந்து நியுயோக்குக்கு வந்துள்ளது. அங்கிருந்து 199 பயணிகளுடனும் 18 சிப்பந்திகளுடனும் அதிகாலை 1.19 மணியளவில் கெயிரோ நோக்கிப் புறப்பட்டது. விமானம் இறுதியாக அதிகாலை 2.15 மணியளவில் தரைக்கட்டுப்பாட்டு நிலையத்துடன் தொடர்பு கொண்டுள்ளது. அதன்பின் ராடர் திரைகளிலிருந்து காணாமல் போனதுடன் தொடர்பும் துண்டிக்கப்பட்டது. உடனடியாக விமான பயண அதிகாரிகளும் மீட்புக் குழுவினர்களும் விமானத்தைத் தேடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இன்று காலை மசாசுசெற்ஸ் மாநிலத்தில் நண்ருக் கெட் தீவிற்கு 65 மைல்கள் தெற்காக கடலில் எண்ணெய் படலங்களும் விமானச் சிதறல்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அமெரிக்க போயிங் நிறுவனத்தின் விமானங்களில் நவீன ரகத்தைச் சேர்ந்த இவ் விமானம் பத்து வருடங்களாகச் சேவையில் ஈடுபட்டு வந்துள்ளது. மிகச் சிறந்த ஒழுங்கான பராமரிப்பில் இவ் விமானம் இருந்தது என்றும் இவ்விமானத்தின் விமானி மிக நீண்ட பறப்பு அனுபவங்களைக் கொண்டிருந்தவர் என்றும் கூறப்பட்டுள்ளது. இவ்விமான விபத்திற்கான காரணம் இதுவரை அறியப்படாத போதிலும் நாச வேலைகள் காரணமாக இருக்க மாட்டாதெென தாம் நம்புவதாக அமெரிக்க சமஷ்டி உளவு நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கெயிரோ நோக்கிச் சென்ற இவ் விமானத்தில் 62 எகிப்தியரும் 2 சூடானியர்களும் 3 சிரியர்களும் மற்றும் 129 அமெரிக்கர்களும் அடங்கியிருந்தனர். என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆர்மேனியாவின் பிரதமர் மற்றும் ஏழு அரசியல் தலைவர்கள் சுட்டுக்கொலை துப்பாக்கி நபர்கள் சரணடைந்தனர்

ஆர்மேனியாவின் தலைநகர் யெரவானில் உள்ள பாராளுமன்றக் கட்டடத்திற்குள் நுழைந்த ஆயுதம் தாங்கிய இளைஞர்கள் அங்கிருந்த அரசியல் தலைவர்களை பணயக் கைதிகளாக்கினர். கடந்த புதனன்று இடம்பெற்ற இப் பணய நாடகம் 8 பேர்களின் கொலையுடன் புதனன்று முடிவடைந்தது. இந்த சம்பவத்தின்போது ஆர்மேனியப் பிரதமர் வாஸ்கென் சார்கேயான் உட்பட எட்டுப் பேர் கொலையுண்டனர்.

ஆர்மேனியாவில் மிகப் பரபரப்பாகத் தேடப்பட்டுவரும் நபர் எனக் கருதப்பட்டுவரும் நைரி உணாயான் தலைமையில் வந்த குழுவினரே இவ்வாறு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளனர். மக்களின் இரத்தத்தைக் குடித்ததுபோதும் இனிமேலும் இந்த அரசியல் தலைவர்கள் உயிரோடு இருக்கக்கூடாது. அவர்கள் அழிக்கப்படவேண்டும் என இதில் ஈடுபட்டவர்கள் கூறியுள்ளனர். நாட்டின் வளத்தைச் சூறையாடினார்கள் என்ற குற்றச்சாட்டு பிரதமர் உட்பட இறந்துபோன மற்றவர்கள் மீது சுட்டவர்களால் சுமத்தப்பட்டது.

இச்சம்பவத்தை அடுத்து உள்துறை மற்றும் பாதுகாப்பு அமைச்சர்கள் இராஜினாமாச் செய்யவேண்டும் என்றும் நடந்த சம்பவங்களுக்கு அவர்களது ஒத்துழைப்பு மறைமுகமாக இருந்தது என்றும் இராணுவம் குற்றம்சாட்டியுள்ளது.

கடந்த புதனன்று கொலையுண்ட ஆர்மேனியாவின் அரசியல் தலைவர்களது இறுதிச் சடங்குகள் கடந்த ஞாயிறு தலைநகரில் இடம்பெற்றது. இதில் சுமார் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் கலந்துகொண்டனர். அடுத்தவார ஆரம்பத்தில் ஆர்மேனியாவின் புதிய அரசினை ஜனாதிபதி றொபேட் கொச்சார்யான் நியமிப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## சர்வதேச சமூகத்திற்கு ஆயர் பெல்லோ நன்றி தெரிவிப்பு

நோபல் பரிசுபெற்ற கிழக்குத் தீமோரின் ஆயரான கார்லோஸ் பெல்லோ பல்லாயிரக் கணக்கான மக்கள் முன்னிலையில் ஞாயிறு அன்று மத நிகழ்வினை நடத்தினார். அதன்போது கிழக்குத்தீமோர் மக்களை அழிவிலிருந்து காப்பாற்றிய சர்வதேச சமூகத்திற்கு நன்றிகளைத் தெரிவித்தார். சர்வதேசப் படையில் இடம்பெற்ற அங்கத்துவ நாடுகளுக்கு தனித்தனியாக நன்றி தெரிவித்தபின் சர்வதேச அமைதிப்படை கிழக்குத் தீமோருக்கு வந்திராவிடில் சகல மக்களும் கொல்லப்பட்டிருப்பார்கள் என அவர் தெரிவித்தார். கிழக்குத் தீமோரின் சரித்திரத்தின் புதிய கதாநாயகனாக அவுஸ்திரேலிய தளபதியான பீற்றர் கொஸ்குரோ கணிக்கப்படுவார் என . அவர் மேலும் தெரிவித்தார். இராணுவங்கள் யுத்தத்திற்கு மட்டும் பயன்படுத்தப்படாமல் சமாதானம், நீதி, சமத்துவம் போன்றவற்றை நிலைநாட்டுவதற்கும் பயன்படுத்தப்படலாம் என்பதனைத் தனது மக்கள் உணர்ந்து கொண்டுள்ளனர் என ஆயர் தனது நன்றியுரையில் மேலும் தெரிவித்தார்.

இந்தோனேசியா கிழக்குத் தீமோருடன் நட்புநாடாகத் தொடர்ந்து செயற்படும் என்று அந்நாட்டின் வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது. அதேவேளை பிரஜா உரிமை சம்பந்தமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக பிரதிநிதிகள் அலுவலகம் ஒன்றினை டிலியில் திறக்க ஐ.நா. அமைதிப்படை அனுமதி வழங்கவேண்டும் என்றும் இந்தோனேசியா கோரியுள்ளது.

# ஒசாமா பின்லாடென் நாட்டைவிட்டு வெளியேற வேண்டியதில்லை

## - தலிபான் தலைவர்

ஆப்கானிஸ்தானில் தங்கியிருக்கும் சவுதி கோடீஸ்வரர் ஒசாமா பின்லாடென் எக் காரணம் கொண்டும் அமெரிக்காவிடமோ அல்லது வெறெந்த நாட்டிடமோ ஒப்படைக்கப்படமாட்டார் என்றும் அவர் மீது தலிபான்கள் எவ்வித அழுத்தங்களையும் பிரயோகிக்கமாட்டார்கள் என்றும் தலிபான்களின் தலைவர் உறுதி கூறியுள்ளார். ஆனால் பின்லாடென் ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேற விரும்பினால் சுதந்திரமாக வெளியேறலாம் என்று ஆப்கானிஸ்தானின் வெளியுறவு அமைச்சர் தெரிவித்தார். கடந்த வெள்ளியன்று பின்லாடென் ஆப்கானிஸ்தானைவிட்டு வெளியேறப் போவதாக அறிவித்ததற்கு தலிபான் தலைவர் 'அவர் எந்த வித அழுத்தங்களாலும் நாட்டைவிட்டு வெளியேறவில்லை என்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. அவருக்கான உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கிடையே ஆப்கானிஸ்தான் மீதான தடைகளை அமெரிக்கா இரத்துச்செய்யும் என உத்தரவாதம் வழங்கினால் தான் அங்கிருந்து வெளியேறுவதாக பின்லாடென் அறிவித்திருக்கின்றார்.

# கிளின்டன், அரபாத், பராக் நோர்வேயில் சந்திப்பு

அமெரிக்க அதிபர் பெல் கிளின்டனும், பாலஸ்தீன அதிகார சபையின் தலைவர் யாசீர் அரபாத்தும் இஸ்ரேலிய பிரதமர் எகுட்பராக்கும் கடந்த திங்களன்று நோர்வே தலைநகரில் சந்தித்துக்கொண்டனர். 1995-ம் ஆண்டு தீவிர வலதுசாரி ஆதரவாளர் ஒருவரால் சுட்டுக்கொல்லப்பட்ட முன்னாள் இஸ்ரேலியப் பிரதமர் யிட்சாக் ரபீனின் நான்காவது நினைவு நிகழ்வுகளில் கலந்துகொண்டபோதே அவர்களது சந்திப்பு இடம்பெற்றது. இந் நிகழ்வுகளில் திருமதி லேயா ரபீனும் பங்குபற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

திங்களன்று மாலை பாலஸ்தீன, இஸ்ரேலிய தலைவர்களைத் தனித்தனியாகச் சந்தித்துப் பேசிய அமெரிக்க அதிபர் செவ்வாயன்று கூட்டுப்பேச்சுக்களில் ஈடுபடுவாரென அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த டிசம்பர் மாதத்தின் பின் இம் மூவரும் ஒன்றாகச் சந்திப்பது இதுவே முதற்தடவை. இஸ்ரேலும் பாலஸ்தீன அதிகாரிகளும் அடுத்த வருடம் செப்டெம்பர்மாத இறுதியில் இறுதி உடன்பாடொன்றுக்கு வர ஒப்புக்கொண்டுள்ளனர். இவ் இறுதி ஒப்பந்தத்திற்கான பேச்சுக்களில் எல்லைகள், குடியேற்றங்கள், அகதிகள் மற்றும் ஜெருசலேமின் புதிய அந்தஸ்த்துப் போன்றவைகள் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 73 பயணிகளுடன் சிப்பந்திகள் இல்லாத கப்பலை இஸ்ரேலியக் கடற்படை கண்டுபிடித்தது

இஸ்ரேலுக்கும் லெபனானுக்குமிடையிலான கடற் பிராந்தியத்தில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இஸ்ரேலிய கடற்படை தென் லெபனான் கரையை அண்டிய பகுதியில் 73 பயணிகளுடன் சிப்பந்திகளால் கைவிடப்பட்ட நிலையில் கப்பலொன்றினைக் கண்டுபிடித்தனர். இக் கப்பலில் ஈரான், ஈராக், பங்களாதேஷ், இந்தியா, சிறீலங்கா, எகிப்து போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்கள் . காணப்பட்டனர். ஏன் அல்லது எதற்காக இக்கப்பலின் சிப்பந்திகள் கப்பலைவிட்டு வெளியேறினர் என்பது அறியப்படவில்லை. தென்லெபனானில் நிலைகொண்டுள்ள ஐநா. அதிகாரிகள் மற்றும் செஞ்சிலுவைச் சங்க உத்தியோகஸ்தர்கள் கப்பலுக்குச் சென்று அங்கிருந்தவர்களுக்கு உணவு மற்றும் உடைகளை வழங்கினர். பின்னர் இஸ்ரேலியக் கடற்படை அதிகாரிகளால் அக் கப்பல் நக்கிவேரா துறைமுகத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இத் துறைமுகம் இஸ்ரேலிய ஆதரவுடனான தென் லெபனான் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்துவருகின்றது. கண்டுபிடிக்கப்பட்ட கப்பல் கிரேக்கம் அல்லது இத்தாலியை நோக்கிப் பயணம் செய்திருக்கலாம் என்றும் இஸ்ரேலிய கடற்படையினர் இடைமறிப்பார்கள் என்ற அச்சத்தில் சிப்பந்திகள் படகுகளில் தப்பியிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

## டிஸ்னியின் அடுத்த பூங்கா ஹொங்கொங்கில்

அமெரிக்காவின் டிஸ்னி நிறுவனமும் ஹொங்கொங் அரசும் கடந்த திங்களன்று புதிய டிஸ்னி பூங்கா ஒன்று நிறுவப்படுவதற்கான இறுதிக்கட்ட பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டன. இரு தரப்பு அதிகாரிகளும் கடந்த திங்களன்று இறுதியான சில பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டு வருவதில் பேச்சுக்களை நடத்தினர். அதன்படி செவ்வாயன்று ஒப்பந்தம் ஒன்றிற்கான அடித்தளம் இடப்படும் என்றும், அதன்படி டிஸ்னி நிறுவனத்தின் பூங்காக்களின் வரிசையில் அமெரிக்காவுக்கு வெளியில் அமைக்கப்படும் மூன்றாவது பொழுதுபோக்குப் பூங்காவாக இது அமையும்.

அமெரிக்காவுக்கு வெளியே டோக்கியோவிலும், பாரிசிலும் இரண்டு பொழுதுபோக்குப் பூங்காக்கள் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது.

## ஆபிரிக்கா

★ ஐநா அதிகாரிகளுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு ஹொங்கோ ஜனநாயக குடியரசினை ஐ.நா.சபை கோரியுள்ளது. ஒக்டோபர் 13-ம் திகதி முதல் ஐநாவின் அதிகாரிகள் அந்நாட்டில் தங்கியிருந்தபோதிலும் யுத்தப் பிராந்தியங்களுக்கு அவர்களால் விஜயம் செய்யமுடியாமல் உள்ளது. அவர்களுக்கான பாதுகாப்பு உறுதிசெய்யப்படும் என ஹொங்கோ ஜனநாயக குடியரசு எழுத்து மூலமான உறுதிமொழி வழங்கினால் மாத்திரமே அவர்கள் எல்லாப் பிராந்தியங்களுக்கும் சென்று அமைதி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்ய முடியும் என்று ஐ.நா.வின் உயரதிகாரிகள் தெரிவித்தனர்.

★ தனது மத்திய கிழக்கு அமைதி முயற்சிகளுக்கு எதிரான சில தீவிரவாத சக்திகள் தனக்கு எதிராக சர்வதேச ரீதியில் பொய்ப் பிரச்சார நடவடிக்கையொன்றை மேற்கொள்ள முயல்வதாக நோபல் பரிசுபெற்ற முன்னாள் தென்ஆபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா தெரிவித்துள்ளார். கேப்டவுனில் லிபியத் தலைவருக்காக ஒரு மாளிகையொன்றைக் கொள்வனவு செய்துள்ளதாயும், அதற்குப் பதிலாக பெருந்தொகைப் பணத்தைத் தனது முன்னாள் மனைவி வினி மண்டேலாவின் விவாகரத்து வழக்கிற்காக லிபியாவிடம் இருந்து பெற்றுக்கொண்டதாயும் வதந்திகள் உலவத் தொடங்கியுள்ளன. இவற்றில் உண்மை எதுவும் இல்லை எனக் கூறிய மண்டேலா தனது புதிய மத்திய கிழக்கு சமாதான முயற்சிகளுக்குச் சர்வதேச ரீதியில் பெரும் ஆதரவு கிடைத்துவரும் வேளையில் அதனைக் குழப்பவும் தனக்கு அவமரியாதை ஏற்படுத்தவுமே இவ்வாறான நடவடிக்கைகளைச் சில குழுக்கள் மேற்கொள்வதாயும் அவர் தெரிவித்தார்.

★ சீனாவின் ஜனாதிபதி சியாப்செமின் அல்ஜீரியாவுக்கு வந்து சேர்ந்தார். அரபு நாடுகளுடன் தொடர்புகளை அதிகரித்துக்கொள்ளும் வகையில் மொரோக்கோவில் மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்ட அவர், பின்னர் அல்ஜீரியாவில் 24 மணிநேர பயணம் ஒன்றினை மேற்கொண்டுள்ளார். ஜனாதிபதி புத்தெபிலிகாவுடன் பேச்சுக்களை மேற்கொள்ளும் அவர் அல்ஜீரியாவில் அபிவிருத்தி நடவடிக்கைகளில் சீனாவின் பங்கு பற்றியும் பிரஸ்தாபிப்பார். சியாப் செமின் அங்கிருந்து சவுதியரேபியாவுக்குப் பயணமானார்.

## அமெரிக்கா

★ பிரேசிலின் தென்பகுதி நகரான முன்டோநோவோவின் மேயர் கடந்த சனியன்று இனந் தெரியாத துப்பாக்கி நபரினால் சுட்டுக்கொல்லப்பட்டார். நிலமற்றவர்களுக்கான அமைப்பின் ஆதரவாளரான இவர் இலஞ்சத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் கடுமையானவராக இருந்தார் என்றும் இதுவே இவரது கொலைக்குக் காரணமாக இருந்திருக்கலாம் என்றும் சொல்லப்படுகிறது.

★ கியுபாவின் தென் மத்திய கடற்பகுதியில் சோவியத் காலத்தில் நிறுவப்பட்ட எண்ணெய் கிணற்றுத் தொகுதி கடந்த பத்து வருடங்களாக பாவிக்கப்படாமல் இருந்தது. இப்போது வெனிசுவேலாவின் உதவியுடன் அதனை இயங்க வைப்பதற்கான பேச்சுக்களை இருதரப்பினரும் மேற்கொண்டுள்ளனர். அத்துடன் வெனிசுவேலாவின் முதலீட்டாளர்களை கியுபாவில் முதலிடுமாறும் வெனிசுவேலா கோரியுள்ளது.

★ மெக்சிக்கோவின் மிகப்பெரும் போதைப் பொருள் விற்பனை வட்டாரத்தின் தலைவர் எனக் கருதப்படும் ஒருவரை அந்நாட்டின் இரகசியப் பொலிசார் கைதுசெய்தனர். கடந்த வெள்ளியன்று அந்நாட்டின் மேற்குப் பிராந்தியத்தில் உல்லாச விடுதியொன்றில் அவர் தங்கியிருக்கையிலேயே அவர் கைது செய்யப்பட்டார்.

★ அகஸ்டோ பினோச்சே ஆட்சிக் காலத்தில் நடந்த மனித உரிமை மீறல்களை விசாரிக்கும் பாதுகாப்பு அதிகாரிகள் அந்நாட்டின் முன்னாள் பாதுகாப்பு தளபதிகள் ஏழு பேரைக் குற்றவாளிகளாகக் கண்டுள்ளனர். அவர்களில் முன்னாள் இரகசியப் பொலிஸ் தலைவர், மற்றும் முன்னாள் தகவல்துறை தலைவர் போன்றோர்களும் அடங்குகின்றனர்.

## ஆசியா

★ வடகொரியாவும் ரஷ்யாவும் அடுத்தவார முற்பகுதியில் இராணுவ, பொருளாதார ஒப்பந்தங்களில் கைச்சாத்திடவுள்ளன. ரஷ்ய வெளியுறவு அமைச்சர் இகோர் இவானோஸ் வடகொரியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

★ பர்மாவில் ஜனநாயக ஆதரவு பாடல்களைப் பாடினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு ஏழுவருட சிறைத் தண்டனை பெற்று உள்ளே தள்ளப்பட்ட பிரித்தானியர் இரண்டுமாத சிறைத்தண்டனையுடன் விடுதலை செய்யப்பட்டுள்ளார். இவரது விடுதலைக்காக பெற்றோர் ஒரு மாதத்துக்கு மேலாக தலைநகர் ரங்கூனில் தங்கியிருந்தனர். தற்போது அவர்களுடன் இணைந்துள்ள 28 வயதான ரச்சல் சோல்ட்வின் விரைவில் இங்கிலாந்து திரும்பவுள்ளார்.

★ கிழக்குத் தீமோரைவிட்டு இந்தோனேசிய படைகளின் இறுதித் தொகுதியினர் கடந்த ஞாயிறன்று வெளியேறினர். 24 வருட ஆக்கிரமிப்பின் பின் டில்லியின் துறைமுகத்தில் இருந்து இராணுவ அணிகள் கடற்படைக் கப்பல்கள் மூலம் வெளியேறிக் கொண்டவுடன், கைவிடப்பட்ட முகாம் பகுதியை கிழக்குத்தீமோர் மக்கள் சுற்றிவளைத்து உள்ளே கைவிடப்பட்டிருந்த பொருட்களைக்கொண்டு சென்றனர் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

★ பாகிஸ்தானின் கடற்படை விமானம் ஒன்று கடந்த வெள்ளியன்று பலுகிஸ்தான் பகுதியில் விழுந்து நொருங்கியது. கடற்படையின் P-3C ஏக விமானம் விபத்துக்குள்ளாகியதில் அதில் பயணம் செய்த 21 படையினரும் கொல்லப்பட்டனர்.

★ பிரித்தானியா தனது படையில் தனிப்பிரிவாக இயங்கிவரும் நேபாள கூர்க்கா படைப்பிரிவின் ஒய்வு ஊதியத்தை மற்றைய பிரித்தானிய படைவீரனின் தொகையுடன் சமப்படுத்தப்போவதாக அறிவித்துள்ளது. சுமார் 200 வருட காலமாக கூர்க்கா படைப்பிரிவு பிரித்தானிய இராணுவத்தில் உலகம் பூராவும் செயற்பட்டு வருகின்றனர்.

# ஐந்து வருடங்களில் 140 சிறுவர்களைக் கொன்றதாக ஒப்புதல்

கொலம்பியாவில் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் பல டசின் குழந்தைகளது சிதைக்கப்பட்ட உடல்களைப் பொலிசார் கண்டுபிடித்தனர். அப்போது அது பெரும் சர்ச்சையைக் கிளப்பியிருந்தது. பின்னர் லூயிஸ் அல்பிரெடோ கார்விட்டோ எனும் 42 வயதானவரை கொலம்பியப் பொலிசார் சந்தேகத்தின் பெயரில் கைதுசெய்தனர். இவர் தனது வாக்குமூலத்தில் தான் கடந்த 5 வருட காலத்தில் 140 சிறுவர்களை பாலியல் வன்முறைக்கு உட்படுத்திக் கொலை செய்ததாக . ஒப்புக்கொண்டுள்ளார். கொலம்பியாவின் 32 மாகாணங்களின் 11 மாகாணங்களில் 60 நகரங்களில் 8முதல் 16 வயது வரையான சிறுவர்கள் இவ்வாறு காணாமல்போயிருந்தனர். தற்போது லூயிஸ் அல்பிரெட்டோவின் வாக்குமூலத்தின்படி பொலிசார் 114 சிறுவர்களது உடல் எலும்புகளின் பாகங்களைக் கண்டுபிடித்துள்ளனர்.

கொலம்பியாவின் சரித்திரத்திலேயே மிகப்பெரும் தொடர் கொலைகளைப் புரிந்தவர் இவர் என நீதித்துறையினர் கூறுகின்றனர். சிறுவயதில் தனக்கு ஏற்பட்ட பாலியல் ரீதியிலான துன்பங்களுக்குப் பழிவாங்கவும் அதுபோன்ற துன்பங்களை சிறுவர்களுக்கு ஏற்படுத்தி அதில் திருப்தி அடையவுமே தான் இவ்வாறு செய்ததாக அப்பிரெடோ ஒப்புக்கொண்டுள்ளார்.

கொலம்பியாவின் தெருக்களில் திரியும் சிறுவர்களும் வீதிகளில் வியாபாரம் செய்யும் சிறுவர்களுமே இவ்வாறு கொலையுண்டவர்களாவர். அல்பிரெடோ புரிந்த குற்றங்கள் நிரூபிக்கப்படுமிடத்து அந்நாட்டின் மிக நீண்ட சிறைத் தண்டனையாக 30 வருட தண்டனை இவருக்குக் கிடைக்கலாம் எனச் சொல்லப்படுகின்றது.

# Carte Internationale Telephonique

# Titanic Com




உங்கள்
உறவுகளுடன்
நீண்ட நேரம்
உரையாட
தர நிறைவோடு
வெளிவந்து
விட்டது
**Titanic Com**




திறப்புவிழாவை முன்னிட்டு
~~100~~ = 80Frs மட்டுமே.

## விலை விபரம்:

| | Local | vert | | Local | vert | | Local | vert |
|---|---|---|---|---|---|---|---|---|
| Australia | 120 | 90 | Hong Kong | 120 | 50 | Pakistan | 50 | 20 |
| Austria | 70 | 50 | Italy | 100 | 70 | Philippines | 65 | 40 |
| Brazil | 60 | 45 | Kuwait | 27 | 16 | S.Arabia | 25 | 17 |
| Canada | 200 | 150 | Malaysia | 75 | 55 | Singapore | 90 | 60 |
| China | 50 | 40 | Mexico | 68 | 50 | Srilanka | 45 | 30 |
| Denmark | 90 | 80 | India | 40 | 23 | Switzerland | 140 | 80 |
| Finland | 90 | 70 | Netherlands | 125 | 80 | U.K | 150 | 100 |
| Germany | 130 | 90 | New zealand | 100 | 80 | U.S.A | 200 | 120 |
| | | | Norway | 150 | 80 | Thailande | 48 | 32 |

உங்கள் இல்லங்களில் இருந்தபடியே அட்டைகளின் சுட்டிலக்கங்களைக்கொடுத்து வர்த்தகம் செய்திட விரும்புவோர் நேரிலோ, தொலைபேசியூடாகவோ தொடர்பு கொள்ளுங்கள்!

## TITANIC COM

மொத்தமாகவும் சில்லறையாகவும் விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்

**துரித பணமாற்றுச் சேவைக்கு முன் அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்!**

**178, Rue Fbg.saint denis**
**75010-Paris**
**Tel: 0140383523**
**Fax: 0140383506**

**203. Rue Fbg.Saint Denis**
**75010 Paris**
**Tel: 01 53263610**
**Fax: 0153263611**



ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

# அநீதி முடிச்சுக்கள் இறுகுமா?


உலகளாவிய ரீதியில் மரணதண்டனை ஒழிக்கப்பட வேண்டும் என்ற குரல்கள் வலுத்துவரும் இவ் வேளையில் நான்கு தமிழர்களின் கழுத்தினை இறுக்கி அவர்களின் உயிர்த்துடிப்பினை அடக்கிவிட இந்தியத் தூக்குக்கயிறு தயாராகி வருகிறது. இந்த நான்கு தமிழர்களின் கழுத்திற்கு எவ்வாறு திட்டமிடப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டதென்பதை யாரும் மறந்துவிடமுடியாது. கதவடைக்கப்பட்ட தடா [நீதி] மன்றத்தில் சோடனை செய்யப்பட்ட கதைகளுடனும், தடயங்களுடனும் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் கைதானவர்களுக்கு விசாரிப்பு நடாத்தப்பட்டு அதில் 26 பேருக்கு மரணதண்டனை வழங்கப்பட்டபோது உலகின் நீதியும், ஜனநாயகமும் ஒருகணம் ஆடிக்கொண்டன. இப்படியும் ஒரு தீர்ப்பா? என இந்திய நீதி வட்டாரங்களே திகிலடைந்தும் கொண்டன. ஏற்கனவே எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் இலக்குவைத்து இவர்களுக்கான மரண தண்டனை விதிக்கப்பட்டதும் 'வெள்ளிடைமலை'யான விடயமாகியது.

ஆயினும் ஏற்கனவே எத்தனையோ கடுஞ்சோதனைகளைக் கண்ட தமிழ் தேசியம் கலங்காது இவர்களுக்கான நீதி கிடைக்க கடுமையாகப் போராடத் தடா நீதிமன்றம் தூக்கிவிடத்துடித்த 27 பேருக்கும் மரணக்கயிற்றிலிருந்து விடுதலை கிடைத்தாலும், 4 பேருக்கு கயிறு போட்டேயாகவேண்டுமென்று இந்திய உயர் நீதி மன்றமும் முடிவுசெய்தது. தடா நீதிமன்ற விசரணைகளில் 'நேர்மை' இல்லை என ஒத்துக்கொண்ட உச்ச நீதிமன்றமே அதே நீதிமன்றத்தால் குற்றவாளிகளாக காணப்பட்டவர்களுக்கு மரண தண்டனையை உறுதி செய்தபோது உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பில் அநீதிதான் கோடிட்டது.

ராஜீவ்காந்தி என்ற ஒரு தனிமனிதனின் கொலைக்கு அதுவும் அவர் கொலையில் 'மர்மமாக' உள்ள முடிச்சுக்கள் அவிழ்க்கப்படாத நிலையில் தமிழர்கள் நால்வருக்கு மரணம்தான் தீர்வு எனில், அதே ராஜீவ் காந்தியின் அரசியல் வங்குரோத்துத் தனத்தால் தமிழீழத்தில் இந்தியப்படையினரால் கொல்லப்பட்ட அப்பாவித் தமிழர்களுக்கும், அவர்கள் செய்த அட்டூழியங்களுக்கும் எந்த நீதிமன்றத்தில் தமிழ் தேசியம் நீதிகேட்பது?

இன்று மரணத்தின் விளிம்பில் நிற்கும் இவர்களை ஒரு மனிதர்களாகக்கூடக் கணிக்காது, அவர்களின் கருணை மனுக்கள் முதல்படியில் தட்டிக்கழிக்கப்பட்டதற்கு எந்த மனுநீதி சோழனின் வாசல் மணியை அடித்து நீதிகேட்பது.

இவர்கள் அப்பாவிகள் இவர்களுக்கு மரணம் நேரக்கூடாது என்ற கோரிக்கை உலக கோளத்தில் வாழும் தமிழர்களிடமிருந்து இந்திய ஜனாதிபதிக்குச் சென்றுகொண்டிருக்கும் இந்த வேளையில் நீதியின் பெயரால் நாமும் கேட்பது அதைத்தான். அது கிட்டுமா?




நன்றி: 'தினக்குரல்'

# ஒப்பீட்டிற்காக வெளிவந்த உண்மை

## அமெரிக்கா — வியட்நாம்: சிறீலங்கா — தமிழீழம்

### பார்வை

கடந்த வாரங்களில் இங்கு கூறியது போன்ற செம்மணி தொடர்பான சுற்றவாளி அறிக்கையை, சிங்கள அரசு பரப்புரைக்குப் பயன்படுத்த ஆரம்பித்துவிட்டது. கொழும்புக்குச் சென்ற ஐ.நா. ஆணைக்குழுவுக்கு கொலைகளுக்கு, கொள்கை விளக்கம் அளித்த கதிர்காமர், சிங்கள இராணுவம் செம்மணியைத் தோண்ட வேண்டும் என பிடிவாதம் பிடித்ததாகவும் புலிகளின் அச்சுறுத்தல் மத்தியில் கூட தமது நீதித்துறை தோண்டியபோது சில எலும்புக் கூடுகளைக் கண்டனர். இராணுவம் பாரிய இரகசிய புதை குழிகள் பற்றிய குற்றச்சாட்டால் கெட்ட பெயரை பெற்றது ஆனாலும் அங்கு பாரிய புதைகுழிகள் காணப்படவில்லை என கதிர்காமர் கூறியுள்ளார்.

**வியட்நாமில் அமெரிக்கா தான் செய்த சில விடயங்களை மீள ஆராய்ந்ததுபோல் சிங்களம் செம்மணியில் இடம்பெற்றதை விசாரித்தது என கதிர்காமர் போட்டபோடு, ஆணைக்குழு உறுப்பினர்களை சிந்திக்க வைத்திருக்கும். ஏனெனில் அமெரிக்கா, வியட்நாமில் செய்த ஆக்கிரமிப்பைப்போல் சிங்களம் தமிழீழத்தில் செய்துள்ளது என கதிர் மறைமுகமாகக் கூறுவது சிந்திக்க வைக்காதா? அமெரிக்காவோடு ஒப்பிட முற்பட்ட கதிர்காமரின் ஆர்வக்கோளாறு தமிழீழம் என்ற உண்மையை வெளியே இழுத்து வந்துள்ளது.**

★ ★ ★

புலிகள் வாஜ்பாயையும், சோனியாவையும் கொல்ல சதி செய்வதாக இந்தியச் செய்தி ஏடுகளுக்கு செய்தி வழங்கப்பட்டு பரபரப்பாக்கப்பட்டுள்ளது. டில்லியில் இருந்து கொடுக்கப்பட்டதாகக் கூறப்பட்டு வெளிவந்த இச் செய்திகள் ஒரே வார்த்தைகளுடன் கூட பல ஏடுகளில் வெளிவந்துள்ளது. ஆனால் இச் செய்தி எந்தச் செய்தியாளரால் வழங்கப்பட்டது அல்லது செய்தி நிறுவனங்களால் கொடுக்கப்பட்டது என்பதோ தெரியப்படுத்தப்படவில்லை. **இம் முகவரியில்லாத செய்தி தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக இந்தியாவில் சிங்கள உளவுத் துறையால் அல்லது இந்தியாவில் புலிகளைக் களங்கப்படுத்த முயலும் தரப்பினரால் கொடுக்கப்பட்டதாகும் என்பதை இலகுவாக ஊகிக்கலாம்.**

எரிக் சௌந்தர நாயகம் என்ற இளைஞனை கொழும்பில் சிறைவைத்து சித்திரவதை செய்யும் சிங்கள அரசு சில தினங்களாக பரபரப்பான செய்திகளை வெளியிட்டு வருகின்றது. முதலில் அவர் கொழும்பில் கொலை செய்வதற்கான பட்டியலுடன் வந்தார் எனக் கூறினர். புலிகளின் உளவுத் துறையினர் கொடுத்த பட்டியலைக் கூட எரிக் கூறியதாக வெளியிடப்பட்டது. பின்னர் அவரது இந்தியத் தொடர்பு என்ற செய்தி வெளியிடப்பட்டது. இன்று முழுமையாக வாஜ்பாயையும், சோனியாவையும் கொல்ல சதி எனச் சொல்லும் செய்தி பாமர இந்திய வாசகர்களுக்குக் கொடுக்கப்பட்டது.

இவை அனைத்துமே புலிகளுக்கும் தமிழர்களுக்கும் ஆதரவு அல்லது கரிசனை அதிகரிக்கும் வேளைகளில் அதனை விரும்பாத தரப்பினரின் தில்லுமுல்லுகள் ஆகும். **தற்போது ராஜீவ் விவகாரத்தில் தண்டனை கொடுக்கப்பட்டவர்கள் பற்றிய விவாதம் இந்திய அளவில் இடம்பெறுகின்றது. மறுபுறம் கலைஞர் தமிழீழத்தை ஆதரிக்கின்றார் எனச் சொன்ன விடயம் தொடர்பாக கொழும்பு இந்தியாவிடம் விளக்கம் கேட்ட செய்தி வலம்வருகின்றது. இந் நிலையில் புலிகள் பிரபலமான இருவரையும் கொலைசெய்ய முயல்கின்றனர் என்ற செய்தி வெளிவந்தால் அது சிங்களத்திற்கு சாதகமான விடயம்.** இதற்காகவே கொழும்பில் இருந்து எரிக் சொன்னதாக செய்தி வெளியிடுகின்றனர். இனவாத கொழும்புக்கு அது சரியானது. ஆனால் இந்தியச் செய்தி ஏடுகளுக்கு எங்கே போனது பொதுஅறிவு?

★ ★ ★

**புலிகளை வெல்ல என்ன வழி? 18 அலைவரிசைகள் உள்ள தொலைக்காட்சி என புலம்புகின்றது ஒரு கொழும்பு ஆங்கில ஏடு.** 18 அலைவரிசைகளை தமிழ் இளைஞர்கள் பார்த்தால் தாம் 18ம் நூற்றாண்டு யாழ்ப்பாணத்திலா அல்லது 21ம் நூற்றாண்டு கொழும்பிலா வாழலாம் என முடிவு செய்வார்கள் என அவ் ஏட்டின் ஆய்வாளர் கூறுகின்றார்.

இவ் ஆய்வாளரின் பிற கண்டுபிடிப்புக்கள் பின்வருமாறு:

— யாழ். இளைஞர்கள் புலிகளானமைக்கு காரணம் தமிழர்களின் சாதி முறை

— முன்பு எம்.ஜி.ஆர் அல்லது ரஜனியை கதாநாயகனாகக் கண்ட தமிழ் இளைஞர்களுக்கு இப்போது கரும்புலிகள் உள்ளனர். முன்பு இனம் தெரியாமல் சாவடைந்தவர்கள் இப்போது ஆயிரக்கணக்கான தொலைக்காட்சி பார்வையாளர் முன் சாக சந்தர்ப்பமாக கரும்புலிகள் உள்ளனர்.

— இன்று 9 தொலைக்காட்சி அலைவரிசைகளும் 13 வானெலிகளும் 100 க்கும் மேற்பட்ட பத்திரிகைகளும் உள்ளன. ஆனால் பிரபாகரன் அவற்றை யாழ்ப்பாணத்தில் மூடிவிட்டார்.

இவ்வாறான கொச்சைத்தனமான சிங்களவர்களே ஆங்கில ஏடுகளில் தமிழர்களின் போர் பற்றி விமர்சிக்கின்றனர். யாழ்ப்பாணத்தை 18ம் நூற்றாண்டு வாழ்வு எனக் கூறும் இச் சிங்கள வெறியர்கள் நூலகத்தை எரித்ததும், பாடசாலைகளை அழித்ததும், 'யாப்பட்டுணுவா' எனக் கூறி வெற்றிவிழாக் கொண்டாடியதும் சிங்களத்தின் 21ம் நூற்றாண்டு தலைமை என்பதைச் சொல்லவில்லை. தமிழர்களை சிங்களவர்கள் புரிந்து கொள்ளப் போவதுமில்லை அங்கீகரிக்கப் போவதுமில்லை.

★ ★ ★

சிங்கள ஜனாதிபதி சந்திரிகா தன் தேர்தல் கூட்டங்களுக்கு சிறுவர்களை நிரைநிரையாக கூட அழைத்துச் செல்லும் வழக்கத்தை ஏற்படுத்தி வருகின்றார். இது ஏன் என்ற வினா சில தரப்பினரால் கேட்கப்பட்டது. **சந்திரிகா சிறுவர்களை தனக்கு பாதுகாப்புத்தரும் மனிதக் கேடயமாகப் பயன்படுத்துவதாகச் சிலர் கூறுகின்றனர். சிறுவர்களை பரப்புரைக்க கவர்ச்சி ஏற்படுத்த பயன்படுத்துகின்றார் என மறுதரப்பு கூறுகின்றது.**

இவ் விவாதங்களில் சிறுவர்களைக் கேடயங்களாகப் பாவித்து சந்திரிகா புலிகளிடம் இருந்து தப்ப முயல்கின்றார் எனக் கூறும் தரப்பினர், புலிகள் சந்திரிகாவை கொல்லும் போது குழந்தைகளையும் கொன்றுவிடுவார்கள் எனக் கூறுகின்றனர். இவ் விவாதத்தில் வெளிவந்த விடயம் அனைத்துமே சந்திரிகாவை பற்றி கவலைப்படாது சிறுவர்களை பற்றியதாக அமைந்திருந்தமை அவதானிக்கத்தக்கது.

- ராஜா




# சுழற்சி



சேதுமாதவனாகிய எனக்கு எழுபது வயது பூர்த்தியாகி எழுபத்தொன்று நடக்கிறது. கூன் விழுந்து வளைந்த முதுகு. இரண்டு கால்களும் தளர்ந்து போனதால் மூன்றாவது காலாய் கையில் ஒரு ஊன்றுகோல். சுருங்கிய உடற்சதைகள். சூம்பிய தோள்களோடு கூட டொக்கு விழுந்த நெஞ்சுக்கூடு. இவையே இன்றைய சேதுமாதவன். அந்த வீட்டில் நடமாடும் என் மூத்த மகன் முதல் அந்த வீட்டு நாய்க்குட்டி வரை எந்த ஒரு ஜீவனும் என்னை மனிதனாய் மதிக்காது. இது, இன்று நேற்றான விஷயம் அல்ல. நான் தளர்ந்து விழுந்த பத்து வருடங்களாய் எனக்கு இதே நிலை. அங்குள்ள மனிதப்பிறவி ஒன்று கூட நான் இருக்கும் அந்தத் திக்குக்கு வராது. எனது மகன் மதனகோபால் மாத்திரம் எனது அறையைக் கடக்கும்போது ஓரக்கண்ணால் ஒரு பார்வையைச் சிதறிவிட்டுப், பின் முகத்தைச் சுளித்தபடி கடந்து போவான். மருமகள் மாதேஸ்வரியோ அறையைக் கடக்கும்போது தலையைத் தாழ்த்திக்கொண்டு தனது மூக்கினை இரு விரல்களால் இறுக்கப் பிடித்துக்கொண்டு வேகமாய் நடந்து போவாள். அதற்குக் காரணம் இல்லாமலில்லை. இந்த ஒரு வருடத்தில் நான் குளித்தது ஒரு ஐந்தாறு தடவைதான் இருக்கும். பல் துலக்கி வாய் கொப்பளிப்பது நான்கைந்து நாட்களுக்கொருமுறை. உடுத்திய உடுப்பு தோய்க்கப்படாமலே ஏழெட்டு மாதங்களாய் என் மீது கிடக்கின்றது. இவை போதாதா.... என் மருமகள் மூக்கைப் பிடித்துக்கொண்டு விலகுவதற்கு?

அந்த அளவுக்கு என் உடம்பின் மீது ஒரு கவித்த வாடை வீசும். என் துணி மணிகள் முடைநாற்றமெடுக்கும். என் சதைகளின் மீது அங்கங்கு திட்டுத் திட்டாய் கரிய அழுக்கு காய்ந்துபோய் பொறுக்காய்ப் படிந்திருக்கும். உடம்பு இந்த லட்சணத்தில் இருக்கையில் தலை முடி என்ன வாழும்? முடிகள் காடாய் மண்டி அங்கங்கு சடை படிந்திருக்கும்.

இந்த் ஒரு உருவுக்கு என்பேரக்குழந்தைகள் என் கிட்ட வருமா...? அவைகளை நான் எட்ட நின்று பார்த்தே பல மாதங்களாகின்றன. 'அந்த அறைக்குப் போகாதே.. இன்பெக்ஷன் வந்துடும்' என்பதாய் மருமகள் என் பேரக் குழந்தைகளை பயமுறுத்தி வைத்திருப்பதாய் நான் அறிந்தேன். என் பெயர் தெரியா என் பேரக் குழந்தைகள் எனக்கு 'வைரஸ் தாத்தா' என்று பெயரே வைத்து விட்டதாய்க் கூட நான் ஒரு செய்தி கேள்விப்பட்டேன்.

கொஞ்ச நாட்களாகவே என் இயக்கம் கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைந்து, நான் என் நடமாட்டங்களை நிறுத்திக்கொள்ள ஆரம்பித்திருந்தேன். உண்பதற்கும் கழிப்பதற்கும் மட்டும் எழுந்து போவதோடு சரி. மற்ற நேரங்களெல்லாம் ஒரே கிடப்புத்தான். விரித்து வைத்த பாயில் நித்திய சயனம்தான். நாளாக நாளாக என் சுத்த பத்த காரியங்களும் குறைந்துபோனது.

கண் விளிம்பின் உள் ஓரங்களில் பூளை வழியப் படுத்திருந்தேன். வாய் ஓரம் சாலவாய் எச்சில் கோடு கிழித்திருக்கும். நான் அதே வாயோடு வயிற்றுக்கு மட்டும் வஞ்சம் வைக்காமல் எல்லாவற்றையும் சாப்பிட்டுத் தள்ளுவேன். வயிற்றுக்கு வஞ்சனை செய்யாமை என் தொட்டிற் பழக்கமாயிற்றே...!

என் மகன் என்னை வந்து பார்த்துவிட்டு வெகுவாய்க் கடிந்து கொள்வான். 'பூளையைக் கூடத் தொடைக்காட்டி நீ என்னப்பா மனுஷ ஜென்மம்' என்பதாய் என்னை விடாமல் ஏசுவான். நான் அவனுக்கு நேரேயே, பொங்கி வழியும் என் விழிப் பூளையை புறங்கையால் துடைத்துவிட்டுக்கொண்டு, துடைத்து விட்ட புறங்கையை வேட்டி நுனியில் ஒற்றித் துடைப்பேன். என் மகன் தலையிலடித்துக்கொண்டு என் அறையைவிட்டு வெளியேறுவான்.

உணவு பரிமாற வரும் என் மருமகள், எனது நித்யானந்த சயன நிலையைப் பார்த்து 'எப்படி இந்தக் கிழத்தால் அனுதினமும் தூங்கிச் சுகிக்க முடிகிறது' என்று வெகுவாய் ஆச்சரியம் கொள்வாள். அந்த ஆச்சரியம் அவ்வப்போது அருவருப்பாயும் பரிணாமம் கொள்ளும். நான் பல் துலக்கும் பழக்கம் விட்டபோது, என் மேலான என் மருமகளின் அருவருப்பு, ஆத்திரமாய் உருக்கொள்ள ஆரம்பித்தது. அந்த ஆத்திரம், தினமும் எனது அறைக்கு உணவு கொண்டு வரும். அவளை ஒருநாள் தடுத்து நிறுத்திற்று. அன்று முதல் எங்கள் வீட்டு வேலைக்காரியே எனக்கு போசனம்கொண்டு வரும் பொக்கிசமானாள்.

சாதம், குழம்பு, கூட்டு, கறி என்று எல்லாம் ஒன்றன் மேல் ஒன்றாய் பரப்பப்பட்ட தட்டினை என் அறையின் முகப்பில் நின்றுகொண்டு விசிறி எறிவாள் வேலைக்காரி. தட்டு, 'கிறீச்'சென்று தரையில் உராய்ந்து கத்திக்கொண்டு என் பக்கத்தில் வந்து நிற்கும். கண்கள் மூடி நித்திரா தேவியின் ஆளுமையில் இருக்கும் என்னை, அந்த 'கிறீச்' சத்தமும், கூட்டு, குழம்பு, கறி என்ற கலவை வாசனையும் 'சட்'டென்று எழுப்பிவிடும்.

நான் இருந்தபடியே தின்றுவிட்டு அருகில் இருக்கும் வாளித் தண்ணீரில் கையை முக்கி அலம்பிவிட்டு(எத்தனை முக்கலுக்குப் பிறகு அந்த வாளித் தண்ணீர் மாற்றப்படும் என்பது எனக்கே தெரியாத ஒரு கணக்கு), தட்டை என்னிலிருந்து விலக்கி நகர்த்திவிட்டு மீண்டும் என் நித்திராதேவியின் அணைப்பில் அகப்பட எத்தனிப்பேன். மீண்டும் அடுத்த 'கிறீச்' சத்தம்தான் என் விழிப்படலையைத் தட்டித் திறக்கும்.

அந்த அளவுக்கு, வாரம், மாதம், நாள் கிழமை போன்ற எந்த ஒரு விஷயமும் என்னை அவைகளோ, அவைகளை நானோ சிறிதும் பாதித்துவிடாத ஒரு ஒப்பந்தத்தின் அடிப்படையில் என் வாழ்க்கைச் சக்கரம் உருண்டு கொண்டிருந்தது.

எனது இந்தப் போக்கு கேவலமான ஒன்று என்று உங்களுக்குத் தோன்றுகிறதல்லவா...மட்டமான ஒரு சோம்பேறி இவன் என்பதாய் உங்கள் நாசி மெலிதாய் விடைத்துச் சிவக்கிறதல்லவா..எழுபது வயது ஒரு வயதே இல்லை, எத்தனைபேர் எண்பது, தொண்ணூறு வயதுகளில் இமாலயச் சாதனைகள் நிகழ்த்தி இருக்கிறார்கள் என்று கிழச்சாதனையாளர்கள் பட்டியலை என் முன்னே விரிக்க உங்கள் மனது ஆசை 'கொள்கிறதல்லவா.. ஆம்!. நீங்களும் என்னைப் போலத்தான் ஆவீர்கள். நாமெல்லாரும் இள ரத்தம் சூடாயிருக்கும்போது ஒரு பேச்சும், அதே ரத்தம் சுண்டிப்போய் தேகம் தளர்ச்சியுறும்போது வேறொரு பேச்சும் பேசும் மத்திய தரவர்க்கம்.

அதெப்படி...? என்பதாய் நாசி சிவக்க அவசரப்பட்டு புருவம் வளைத்து நெற்றி சுருக்காதீர்கள். இதோ ஒரு நிமிடம்.

அப்போது எனக்கு முப்பது முப்பத்தைந்து வயது இருக்கும். எனது வீட்டின் மேல் மாடியில் ஒரு கிழவனும் கிழவியும் வசித்து வந்தார்கள். குழந்தைகள் இல்லாதவர்கள். இன்றைய எனக்கும், அன்றைய அவர்களுக்கும் இது ஒன்றுதான் வித்தியாசம்- குழந்தைகள், குழந்தைகள் இல்லாததால் சாப்பாடுகொண்டு வர தாயம்மா என்றொரு பெண்ணை நியமித்திருந்தார்கள். கிழவருக்குப் பென்சன் வந்து கொண்டிருந்த்தால் சாப்பாட்டுக்குக் கவலையில்லாமலிருந்தது.

தாயம்மா இதற்கென்றே நியமிக்கப்பட்டவளாதலால் எங்கள் வீட்டு வேலைக்காரியைவிட கொஞ்சம் அனுசரணையாக நடந்துகொள்வாள். தூர இருந்து தட்டை விசிறி எறிதல் போன்ற வன்மங்கள் அவளிடம் இருக்காது.

மற்றபடி இன்றைய எனக்கும் அன்றைய அந்தக் கிழவருக்கும் செயல்பாடுகளில் துளியும் மாற்றமில்லை. அதே விரிக்கப்பட்டபாய். அதே மாதிரி உண்பதற்கும் கழிப்பதற்கும் மட்டுமேயான கண் விழிப்பு, குளிப்பு, பல் துலக்கல், முக சவரம் இத்யாதிகளுக்கு மொத்தமான விடுப்பு.

நான் கிழவரிடம் எரிச்சலோடு கத்துவேன். 'என்ன ஓய் இது. ஒரு குளியல், அட்லீஸ்ட் ஈரத்துணி வெச்சு உடம்பையாவது துடைச்சு விட்டிருக்க வேணாமா? நாஸ்டி...நாஸ்டி..நா வேணா உமக்குக் குளிப்பாட்ட ஒரு ஆள் ஏற்பாடு பண்ணட்டுமா...'

எனது கத்தல்களுக்குக் கிழவர் மௌனமாய் சிரித்துக்கொள்வார். 'என்னப்பா சேது பண்றது...முடியலியேப்பா. எழுந்துக்கறது நடக்கறதக்கூட எதையாவது பிடிச்சுக்கிட்டுத்தான் செய்யவேண்டியிருக்கு. லெட்ரீன் வரைக்கும் நடந்து போய்டு வர்ரதே. யார் செஞ்ச புண்ணியமோ? வயசாயிட்டா ரொம்பக் கஷ்டம் சேது. ஃபிஸிகல் பேலன்ஸ்"ம் மென்டல் பேலன்ஸ்"ம் சுத்தமாய்ப் போய்டும்'

அவர் வயது பற்றிப் பேச்சு எடுக்கும்போது, எனக்குக் கோபம் கூடக் கொஞ்சம் கொப்பளிக்கும். நெஞ்சில் எரிச்சல் மண்டும்.

'என்ன ஓய் வயசு. பெரிய்...ய வயசு. எழுவத்தஞ்சுதான ஓய்... ஆகிறது உமக்கு! காந்தி தெரியுமா காந்தி. மகாத்மாகாந்தி ஓய். சாகும்போது அவருக்கு வயசு எழுபத்தொன்பது. அந்த வயசுலயும் கடைசி நிமிடம் வரைக்கும் மனுஷன் என்னமா ஓடி ஓடி வேலை செஞ்சுக்கார் தெரியுமா...திடீர் திடீர்னு எதுக்காகவாவது உண்ணாவிரதம்னு சொல்லி உக்காந்துருவார். ஒருநாள் ரெண்டு நாள் இல்ல ஓய். பத்துப் பதினஞ்சு நாள் பச்சைத்தண்ணி பல்லுல படாம கிடப்பார். ராஜ கோபாலாச்சாரி தெரியுமா...அவருக்கு என்ன வயசு? பழம் ஓய். மனுஷன் என்னமா ஆக்டிவ் தெரியுமா...ஓய், பெரியார் தெரியுமா ஓய் பெரியார். அதான் ராமசாமி நாய்க்கர். அவருக்கும் கிட்டத்தட்ட வயசு தொண்ணூறுக்கு மேல ஓய். உடம்புக்கு முடியலேன்னாலும் உம்ம மாதிரி பாய்க்குள்ளே சுருண்டு கெடக்கலையாரும்.'

என் பேச்சு பொறி பறக்க ஆரம்பிக்க, பெரியவர் அன்று என்னை ஏக்கத்தோடு பார்த்தார். அவரது இடது கன்னக்கதுப்பு மெலிதாய் துடிப்பது எனக்குத் தெரிந்தது.

நான் விடவில்லை. முஷ்டி மடக்கி குரலுயர்த்தி வன்மத்தோடு என்வாதம் தொடர்ந்தேன்.

'நீர் வெளில போய் கோஷம் போட வேண்டாம் ஓய். பொதுக்கூட்ட மேடைல ஏறி உரக்கப்பேச வேணாம். அட்லீஸ்ட் உம்மவேலையை-குளிக்கறது, கும்பிடறது, சுத்தபத்தமா இருக்கறது இதையானும் செய்யலாமா செய்யப்படாதா? உமக்கு என்ன கண்ணு தெரியலையா... இல்லை காது கேக்கலயா, என்ன குறை ஓய் உமக்கு? வக்கனையா மூணு வேளையும் வயித்தை நிரப்பத் தெரியறதோல்யோ...'

எனது குரலுயர்த்திய பிளிறல் பெரியவரின் கண்களிலிருந்து ஒரு துளி நீரை வரவழைத்துவிட்டது. அவரது கண்களையே உற்றுப் பார்த்துப் பேசிக்கொண்டிருந்த எனக்குப் பகீரென்று ஆகிப்போனது. ஒரே ஒரு சொட்டு நீர் அவரின் விழி விளிம்பிலிருந்து புறப்பட்டு அவரது கன்னம் படர்ந்து அவரின் சரிந்த தொந்தியில் விழுந்தது.

எதுவாயிருந்தாலும் அழுகை என்பது நம்மை ஆட்டி அசைத்து விடும் ஒரு விடயமல்லவா...? எழுபத்தைந்து வயதுக் கிழத்தை அழவைத்து நமக்கு என்ன ஆகப்போகிறது என்று என்னை நானே நொந்துகொண்டேன். இருக்கப்போவது இரண்டோ மூன்றோ வருடங்கள். அதில் அவர் குளித்தால் என்ன... கும்பிட்டால் என்ன? உயிர் விடத் துடித்துக் கொண்டிருக்கும் ஒரு ஜீவனைக் குளி, கும்பிடு என்று கட்டாயப்படுத்துவது என்ன அறிவீனம். யோசிக்க யோசிக்க என்னை நானே மட்டுப்படுத்திக்கொண்டேன்.

அப்போது பெரியவர் ஒன்று சொன்னார். 'சேது... எல்லாம் பேசிடலாம்பா. ஆனா அதுமாதிரி நாமளும் நடந்துக்கறதங்கறது ரொம்பச் சிரமம். பசி இருக்கறவனுக்குத்தான் அதனோட வீரியம் புரியும். தனக்குன்னு வரும்போதுதான் தலைவலியும் காய்ச்சலும் எத்தகைய கொடுமை என்பது தெரியும்.'

நாலே வார்த்தை தான் பெரியவர் சொன்னது. எனக்கு பொட்டிலடித்தாற் போல் இருந்தது.

அந்த மனிதரின் அடி வயிற்றிலிருந்து புறப்பட்ட ஆற்றாமைத் தீதான் என்னை இன்று இப்படிப் படுத்துகிறதோ என்று கூட எனக்குத் தோன்றும். என் கேள்விகளுக்கு பதிலாய் அவர் சொல்லிய வார்த்தைகள், எனக்கு அவர் இட்ட சாபங்களோ என்று கூட நான் ஐயுறுகிறேன். அதீதமான ஆதங்கத்துடன் வெளிப்படும் ஆழ்மனத்து வார்த்தைகளுக்குத்தான் எத்தனை வலு என்று இன்றும் நான் இறுமாந்து போகிறேன்.

இந்த எண்ணங்களினாலேயே இப்போதெல்லாம் நான் யாரையும் கடிந்து கொள்வதில்லை. முகம் சுளித்து என் மீது ரௌத்திரம் காட்டும் என் மகனையும், மூக்கைப்பிடித்துக்கொண்டு என்னைத் தீண்டத்தகாதவனாய் நினைக்கும் என் மருமகளையும், எட்ட நின்றபடி என் கண்ணில் படாமல் ஒதுங்கிப்போகும் என் பேரக் குழந்தைகளையும் நான் தவறாக நினைப்பதில்லை. என்னை ஒதுக்குகிறார்களே ஏன்று மனதால்கூட அவர்கள் மீது நான் வன்மம் பாராட்டுவதில்லை. ஏனென்றால் எனது இந்த இழி நிலை பெரியவரின் அடிவயிற்றுச் சாபமோ என்னும் ஒரு பயம் என்னுள் ஆழ உறைந்திருக்கிறது. அவர்கீளும் ஒருநாள் புரிந்து கொள்ளத்தானே போகிறார்கள். முதுமையின் வீச்சும் அதன் கோரக் கழுத்து நெறிப்பும் அவர்களையும் ஒரு நாள் ஆட்கொள்ளாமலா போய்விடும். அப்போது இந்தக் கிழவனைப் பற்றிய ஒரு சிறு எண்ணம் அவர்கள் மூளையில் ஒரு மூலையிலாவது சிறகடிக்காமலா போய்விடும்...?

**நந்தன்**

# பாரதிராஜா பாலுமகேந்திரா மணிரத்தினம்

தியோடர் பாஸ்கரனின் தமிழ்ச் சினிமா பற்றிய ஆங்கிலப்புத்தகம் *(The Eye of the Serpent)* சு.சண்முகசுந்தரத்தின் பாரதிராஜா பற்றிய நூல் போன்றவை எனக்குள் சில அவதானங்களை ஏற்படுத்தின. பாலுமகேந்திரா: சிறு பத்திரிகை வாசகர்களிடமும்-ஐரோப்பிய வகை / சத்யஜித்ரே வகை சினிமாவை விழைபவர்களிடமும், பாலுமகேந்திரா பாலான விமர்சன்மற்ற சார்புத் தன்மை இருக்கிறது. மணிரத்தினத்தின் 'பம்பாய்' படம் பற்றிய விவாதங்களில் கோமலின் குறிப்பில், இயக்குநரும் ஒளிப்பதிவாளருமானவரின் அபிப்பிராயத்தின் அடிப்படையில் அவரது விமர்சனங்கள் வைக்கப்பட்டிருந்தன. 'இருவர்' பற்றிய விவாதங்களில் மணிரத்தினத்தின் 'தமிழினம் அல்லாத' அடிப்படைகளை விமர்சிக்கும்போது 'பாரதிராஜா, இளையராஜா' போன்ற தமிழர்களின் இன அடையாளம் அவர்களது சினிமா பங்களிப்பில் சேர்க்கப்பட்டிருந்தது. பாலுமகேந்திரா தமிழின் இடதுசாரி எழுத்தாளர்களோடு உறவு கொண்டிருப்பது அனைவருக்கும் தெரிந்த செய்தி. மணிரத்னம் -சுஜாதா-பாலகுமாரன் போன்



றவர்களோடு தொடர்பு கொண்டவர். வைரமுத்துவை ஆஸ்தான கவியாகக் கொண்டவர். தமிழ் இலக்கியம் பற்றி வெளிப்படையாகப் பேசியவர் அல்லர். அவரது நேர்முகங்கள் உரையாடல்களை அவதானித்து வருவோர் அவரது சினிமா தொழில்நுட்பம் சம்பந்தமான அறிவையும், சினிமா கோட்பாடு, சினிமா இலக்கியம் சம்பந்தமான அறிவையும் அவதானிக்க முடியும். வாசுதேவன் நாயரோடு இலக்கியம் பேசவும் அவரால் முடிகிறது.

இந்த மூவருமே உருப்படியான படங்களையும் கொடுத்திருக்கிறார்கள். மோசமான படங்களையும் கொடுத்திருக்கிறார்கள். பாரதிராஜா. மணிரத்னம் படங்களின் அழகியல் தன்மை பற்றி பிரஸ்தாபிக்கிறார்கள். பாலுமகேந்திரா மணிரத்னத்தின் 'மௌனராகத்தை' தனது 'மறுபடியும்' படத்தோடு வைத்து தமிழின் 'மிடில் சினிமா' பற்றி பேசுகிறார். மணிரத்னத்தின் படங்களில் எவரேனும் ஆக்கபூர்வமான அம்சங்களைப் பார்த்தால், உடனே அவரை பாலுமகேந்திரா / பாரதிராஜா பற்றி எதிர்மறையாகப் பார்க்கிறவர் என தமக்குள் முடிவுகட்டுகிற அரசியல் அணுகுமுறை தமிழில் இருக்கிறது.

எந்தக் கலைவடிவானாலும் எந்தக் கண்டு பிடிப்புக்களானாலும் அரசியலுக்கு அப்பாற்பட்டதல்ல. ஆனால் அரசியல் சார்புத் தன்மையை வைத்துக் கொண்டு மட்டும் குறிப்பிட்ட கலை, மற்றும் 'குறிப்பிட்ட கண்டுபிடிப்புக்களின்' தர்க்கம் வளர்ச்சி போன்றவற்றைப் புரிந்து கொள்ள முடியாது.

தொகுப்புக்கு முதலில் பகுப்பாய்வு மிக மிக முக்கியம். பகுப்பாய்வு என்பது நுண் தளத்தில் 'ஒரு கலையில்' ஒரு பிரச்சினையின் தர்க்கம் வளர்ச்சி போன்றவற்றை ஆய்வு செய்வது. இதற்கு முன்கூட்டியே திட்டமிடப்பட்ட சார்பு நிலை போதாது. ஆய்வு வேண்டும். நிதானமான அணுகுமுறை வேண்டும். இத்தகைய சார்பு நிலைகளையெல்லாம் கடந்து தூரநோக்கிலான விடுதலை அரசியலுக்கான கலை அணுகுமுறையை சுயாதீனமாக மேற்கொள்ளவேண்டும். உதாரணம் சொல்கிறேன்:

**1. அபத்தங்களும், அசிங்கங்களும் பாரதிராஜா, மணிரத்னம், பாலுமகேந்திரா போன்றோரின்/ மூவரின் படங்களிலும் உண்டு.**

**பாரதிராஜா:** வாலிபமே வா வா
**பாலுமகேந்திரா:** சுமன், அர்ச்சனா நடித்த தெலுங்குப்படம்
**மணிரத்னம்:** அக்னி நட்சத்திரம்

**2. சுமாரான மிகச் சாதாரணமான படங்களும் உண்டு.**

**பாரதிராஜா:** சிவப்பு ரோஜாக்கள்
**பாலுமகேந்திரா:** ரெட்டை வால்குருவி
**மணிரத்னம்:** இதயத்தைத் திருடாதே

**3. மூவரிலும் ஆண் பெண் உறவு தொடர்பான ஆரோக்யமான படங்களும் உண்டு.**

**பாரதிராஜா:** முதல் மரியாதை
**பாலுமகேந்திரா:** யாத்ரா
**மணிரத்னம்:** மௌனராகம்

**4. சமூகப் பிரக்ஞை கொண்ட படங்களும் உண்டு.**

**பாரதிராஜா:** புதிய வார்ப்புக்கள்
**பாலுமகேந்திரா:** வீடு
**மணிரத்னம்:** அஞ்சலி

**5. அரசியல் படங்களும் உண்டு.**

**பாரதிராஜா:** என்னுயிர்த்தோழன்
**பாலுமகேந்திரா:** வீடு
**மணிரத்னம்:** பம்பாய் அல்லது இருவர்

மூவரிடமும் அவரவர்க்கென்று தனித்தன்மை உண்டு.

1. பாலுமகேந்திரா காட்சிரூபமான சினிமாவைப் படைப்பவர். ஐரோப்பிய/ எளிமையான /மனோவியல் ரீதியிலான படங்களைத் தருபவர்.

2. பாரதிராஜா தமிழ்ப் பண்பாட்டின் அம்சங்களை-தமிழ் குடும்ப உறவுகளில் உள்ள பிரத்தியேகமான அம்சங்களைப் படைப்பவர். காட்சி ரூபம்/வட்டார வழக்கு இரண்டிலும் ஈடுபாடு கொண்டவர். சினிமாவின் உச்சபட்ச சாத்தியமான, 'காட்சிரூப சினிமா அல்ல' இவருடையது.

3. மணிரத்னம் காட்சி ரூபமான சினிமாவைப் படைப்பவர். ஐரோப்பிய /. அமெரிக்க/ நவீன இந்திய தமிழ் / தொழில்நுட்ப ரீதியிலான படங்களைத் தருபவர். பாலுமகேந்திராவின் நிறங்கள் மங்கலானவை. அதிகமும் இயற்கையானவை. மணிரத்னத்தின் நிறங்கள் அழுத்தமானவை. அதீதமான ஆழம்கொண்டவை. பாரதிராஜாவின் நிறங்களும் பாலுமகேந்திரா போன்றதல்ல. ஒப்பீட்டளவில் மணிரத்னத்தின் படநிறங்கள் போன்றதுதான் பாரதிராஜாவுடையதும், அழுத்தமான நிறங்கள்.

I. பாரதிராஜாவின் படங்களின் தனித்துவம் அவரது கிராமியம் சார்ந்த சித்தரிப்பில் உள்ளது.

II. பாலுமகேந்திராவின் தனித்துவம் மத்தியதரவர்க்கத்தவரின் அன்றாட வாழ்வுச் சிக்கல்கள், அபிலாசைகளைச் சித்தரிப்பதில் உள்ளது.

III. மணிரத்னத்தின் தனித்துவம் வளர்ச்சியடைந்த நகர மனிதர் மத்தியதரவர்க்க நகர



மனிதர்கள்-அவர்களது கற்பனைகள் வாழ்வு நெருக்கடிகள் போன்றவற்றைச் சித்தரிப்பதில் உள்ளது. மூவருமே சமகால அரசியல் பிரச்சினைகளைக் கையாண்டு இருக்கிறார்கள். பாரதிராஜாவின் படங்களில் உடனடியான நிகழும் அரசியலின் 'சாயல்களைக்' காண முடியாது ஸ்தூலமான சித்தரிப்புக்களை நாம் இவர் படங்களில் காண முடியாது.

**எந்தக் கலைவடிவானாலும் எந்தக் கண்டு பிடிப்புக்களானாலும் அரசியலுக்கு அப்பாற்பட்டதல்ல. ஆனால் அரசியல் சார்புத் தன்மையை வைத்துக் கொண்டு மட்டும் குறிப்பிட்ட கலை, மற்றும் 'குறிப்பிட்ட கண்டுபிடிப்புக்களின்' தர்க்கம் வளர்ச்சி போன்றவற்றைப் புரிந்துகொள்ள முடியாது.**

உதாரணம்:

I. திராவிட அரசியல், மயங்கும் சொற்கட்டு, தீக்குளிப்பு அரசியல் பற்றி படம் பேசினாலும் அது திராவிட இயக்கத்தவர் பற்றிய நேரடியான விசாரணையாக அமையவில்லை. தமிழ்ச் செல்வன் படமும் ஊழல், லஞ்சம் பற்றிப் பேசினால் கூட 'ஸ்தூலமான'சித்தரிப்பு என்பது அப்படத்தில் இல்லை. அதாவது ஒரு குறிப்பிட்ட இயக்கத்தின் குறிப்பிட்ட அரசியல் இவர் படங்களில் இடம் பெறுவதில்லை.

எம்.ஜி.ஆர். கருணாநிதி, கோபால்சாமி, எல்லோர்க்கும் சினிமாவுக்கு அப்பாலும் நண்பராக இருக்கிறார். தி.மு.க.பிளவின்போது வைரமுத்துவும் இவரும், வை.கோ; மு.க.வுக்கிடையில் சமரசமேற்படுத்த முயன்றனர். ஸ்தூலமான விமர்சனமற்ற தன்மைக்கும், அவரது சினிமாவுக்கு அப்பாலான அரசியலுக்கும் உள்ள உறவை அவதானிக்கிற ஒருவர், அவர் சினிமாவில் சொல்கிற அரசியலின் நீர்த்த தன்மைக்கான காரணத்தை உணர முடியும்.

பாலுமகேந்திராவின் படங்களில் அநேகமாக அரசியல் மாந்தர்கள் இடம் பெறுவதேயில்லை. நேரடியான அரசியலில் அவர் பாத்திரங்கள் ஈடுபடாமல் இருக்க அவரது இலங்கையைச் சேர்ந்தவர் என்கிற தன்மையும் காரணமாக இருக்கக்கூடும்.

ஆயினும், அவரது 'யாத்ரா' படத்தில் தீவிரவாதியென தவறாகக் கைதுசெய்யப்பட்டவர் பொலிஸ் நிலையத்தில் விசாரணை எனும் பெயரில் சித்திரவதை செய்யப்படும் காட்சி. எந்த நேரடியான அரசியல் சினிமா பேசும் விசயத்தை விடவும் அதிகமாகப் பேசும் தன்மை கொண்டது.

அரசு, அரசு எந்திரம், பொலிஸ் துறை, விசாரணை என்பது பற்றிய அதன் கொடூரங்கள் பற்றிய அற்புதமான விமர்சனம் அக்காட்சிகள்.

மணிரத்தினத்தின் அரசியல் படங்கள் 'உடனடி' நிகழ்வுகளையும் நேரடி அரசியலையும் 'குறிப்பிட்ட' பிரச்சினைகளையும் எடுத்துக்கொள்கிறது. எரியும் பிரச்சினைக்குள் புகுந்து தேசிய ஒருமைப்பாட்டு அபிப்பிராயங்களை முன்வைக்கிறது. இந்தியாவில்/ தமிழகத்தில் இன்று இருக்கிற நிலைமைகளில் அது அரசியல் விளைவுகளையும் உருவாக்குகிறது.

இச்சூழலில் மணிரத்தினத்தின் மீதான விமர்சனம் இருவகைகளில் முன்வைக்கப்படுகிறது.

I. முழுக்கவும் அரசியல் நோக்கம் கொண்டவர்களின் விமர்சனம்.

II. 1. பாரதிராஜா = தமிழ்ப்பண்பாடு எனக் கருதிக் கொள்பவர்கள்.

2. பாலுமகேந்திரா = ஐரோப்பிய / எளிமை / சத்யஜித்ரே வகை சினிமா எனக் கருதிக் கொள்பவர்கள்.

3. மணிரத்னம் = ஹாலிவுட்/ இந்துத்துவம்/ சுதேசியம் எனக் கருதிக்கொள்பவர்கள்.

என மூன்று தரப்பு அறிவுஜீவிகள், சினிமா ஆர்வமுள்ளவர்கள் மேற்கொள்ளும் அணுகுமுறை.

உண்மையில் 'மாற்றுச் சினிமா' என்பது இவர்கள் மூவருடனும் தனித்தனியே முழுக்க உடன்பாடு கொள்வதனால் உருவாவதும் அல்ல.

I. சினிமா ஒரு கலைவடிவம் எனும் அளவில் இவர்களது 'பங்களிப்பை' அவதானித்து அங்கீகரிப்பது.

இவர்களது சித்தரிப்பில் உள்ள 'கோணல்களை' சொல்லத் தவறிய விடயங்கள் தொடர்பான விமர்சனப் பிரக்ஞையை உருவாக்கிக்கொள்வது.

II. இவற்றிலிருந்து இன்று மூன்றாம் உலக நாடுகளின் இடதுசாரிப் படைப்பாளிகளின்- மூன்றாம் சினிமாக் கோட்பாட்டை தமிழில் அதன் தர்க்க வளர்ச்சிக்கு ஒப்ப படைப்புக் காரியத்தில் முன்வைப்பது.

பாரதிராஜா முன் வைக்கிற 'தமிழ்ப்பண்பாட்டு' வகையிலான கிராமங்கள் விமர்சனத்துக்கு அப்பாற்பட்டதல்ல. நரசிங்கராவ், நிஹ்லானி பெனிகல் போன்றோர் படங்களை வைத்துப் பார்த்தாலே இது விளங்கிவிடும். மேலும் ஆப்ரிக்க சினிமாவில் இடம்பெறும் கிராமங்கள் பற்றிய வழிபாடுகளை விடவும் நாம் இதைத்தான் செய்யவேண்டும்.

பாலுமகேந்திராவின் அரசியல் பிரக்ஞையற்ற மத்யதரவர்க்க மனிதர்களுக்கு மாற்றாக அதே ஐரோப்பிய சினிமாவில் செயல்பட்ட கீஸ்லோவெஸ்கி,



ஜானுஸ்ஸி, கோடார்ட், ரோஸலினி, பெர்ட்டுலூஸி, போன்ற இயக்குநர்களின் அரசியல் பிரக்ஞையுள்ள மனிதர்களைப் படைக்க முடியும். இதற்கு நாம் வழிபாடுகளைத் தாண்டிவர வேண்டும்.

மணிரத்னம் பற்றியும் இப்படித்தான். வழிபாடுகள் போன்று அதேஅளவு ஆபத்தானதுதான் வெறுமனே அரசியல் ரீதியிலான தாக்குதல்களும், அவருடைய அரசியல் படங்களை விமர்சிப்பதன் மூலம் அவரது காட்சிரூப சினிமாவை அவதானிப்பதன் மூலம் புதிய அரசியல் சினிமாவை உருவாக்கமுடியும்.

சினிமாவை எப்படி வெறுமனே அரசியலாகப் பார்க்கக் கூடாதோ, அதேமாதிரி அரசியலுக்கு, அரசியல் நிறுவனங்கள், பொருளியல் நிறுவனங்கள் போன்றவற்றுக்கு முற்றிலும் வெளியிலும் சினிமாவைப் பார்க்க முடியாது.

சினிமாவைக் கட்டுப்படுத்தும் அரசியல்/பொருளியல் சக்திகள், சினிமாவின் சுதந்திர வெளிப்பாட்டை மறுக்கும் தணிக்கை அதிகார அமைப்புக்கள் போன்றவை பற்றியும் நாம் கவனம் கொள்ளவேண்டும்.

நான் இங்கு பேசியிருக்கும் மூன்று தமிழ் இயக்குநர்கள்தான் சமகால தமிழ் சினிமாவின் முக்கியமான இயக்குநர்கள். ஷங்கரை இவர்களோடு எந்த வகையிலும் வைத்துப் பார்க்க முடியாது. குஞ்சுமோன்களையும் இதில் சேர்க்க முடியாது. நாம், 'கும்பல் சேருவது, டைரக்டர்களின் ரசிகர்கள் ஆவது போன்றவற்றினின்று நம்மை விலக்கிக் கொள்ள' வேண்டும்.

**– யமுனா ராஜேந்திரன் –**

*நன்றி: புலம்*

# பலதும் பத்தும்

## விபச்சாரத்திற்கு ஆதரவாக ஆர்ப்பாட்ட ஊர்வலம்

அண்மையில் ஒல்லாந்தின் தலைநகரில் ஒரு வினோதமான ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடந்தது. என்னவென்றால் ஒல்லாந்து அரசு புதிய சட்ட விதிகள் விபச்சார நேரங்களை மிகவும் குறைப்பதாயும் அப்படிக் குறைப்பதால் விபச்சாரத்தில் ஈடுபடுபவர்களுக்கு ஏற்படும் இழப்புகளுக்கு ஒல்லாந்து அரசு நஷ்டஈடு கொடுக்க வேண்டும் என்றும் கோரித்தான் இந்த ஊர்வலம் நடந்தது. ஒல்லாந்தின் தலைநகர் உட்பட பல நகரங்களில் விபச்சாரத்தில் ஈடுபடுபவர்கள் கண்ணாடிக்கூண்டு ஒன்றிற்குள் அமர்ந்திருந்து வாடிக்கையாளர்களைக் கவருவதுண்டு. இவர்களது இக் கூண்டுகள் 24 மணி நேரமும் செயற்பட்டுக் கொண்டிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. இப்போது ஒல்லாந்து அரசு மாலை 7.00 மணி முதல் அதிகாலை 1 மணி வரை மாத்திரமே இக் கூண்டுகள் திறந்திருக்கவேண்டும் என்றும் அதன்பின் விபச்சாரத்தில் ஈடுபடுபவர்கள் தங்கள் வீடுகளுக்குள் சென்று விடுதல் வேண்டுமென்றும் சட்டமொன்றின் மூலம் கூறியுள்ளது. இந்தப் புதிய விதிமுறைகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடந்ததன்பின் ஒல்லாந்து அரசு இதற்கு மாற்றுவழிமுறைகள் எதையாவது கண்டுபிடிப்பது பற்றி ஆராய்ந்து வருகிறது. விபச்சாரம் கூட ஒருவகையில் தொழில்தானே. அது இழக்கப்படும்போது நஷ்டஈடு கொடுக்கவேண்டியது அரசுதானே என்கிறார் ஒருவர்.

## உலகின் 'தனித்'துவமான கொடையாளி

1999-ம் ஆண்டு மே மாதம் உலகின் கோடீஸ்வரரான பில் கேட்சும் அவரது மனைவி மெலின்டாவும் 25 மில்லியன் அமெரிக்க டொலர்களை எயிட்ஸ் நோய் ஆய்வுக்காக வழங்கினர். இது தனியான ஒருவர் வழங்கிய மிகக்கூடிய அன்பளிப்பு என்பது குறிப்பிடத்தக்கது. அதேவேளை இத் தம்பதியினர் 1.5 மில்லியன் டொலர்களை கொசோவோ அகதிகளுக்காகவும் 5 பில்லியன் டொலர்களை வில்லியம் எச். கேட்ஸ் நிதியத்துக்கும் ஒதுக்கினார்கள். இது தனியொருவர் ஒரு நிதியத்துக்கு வழங்கிய மிகப்பெருந் தொகையாகும். இந் நிதியம் கல்வித்துறையிலும், உலகளாவிய சுகாதார அபிவிருத்தியிலும் உதவிபுரிந்து வருகின்றது.




## மிக நீண்ட கால ஆட்சியில் இவர்....

பிடல் காஸ்ட்ரோ கியூபாவின் பிரதமராக 1959-ம் ஆண்டு ஜூலை மாதம் பதவியேற்றார். பின்னர் ஜனாதிபதியாக அரச தலைவராக 1976-ம் ஆண்டு டிசம்பர் 3-ம் திகதி முதல் தொடர்கிறார்.

கியூபாவின் சர்வாதிகாரியான பல்கென்கியோ பட்டிஸ்டாவினை பதவியில் இருந்து புரட்சியின் மூலம் அகற்றிய காஸ்ட்ரோ அமெரிக்க உரிமை நிறுவனங்களை 1960 ஆண்டு தேசிய உடமையாக்கினார். அன்றுமுதல் பல தடவைகள் அவரைப் பதவியில் இருந்து அகற்ற அமெரிக்க உளவு நிறுவனம் முயன்றது. ஆனால் எல்லாமே தோல்வியில் முடிந்தன. இன்றும் உலகின் மிக அதிகமான கல்விமான்களைக் கொண்ட நாடுகளில் ஒன்றாக கியூபா விளங்குகிறது.






இவருக்குப் பெயர் அமர் பாரதி. சிவனை வழிபடவென 1973ம் தூக்கிய வலது கையை 26 வருடங்களாக இன்னமும் இறக்காமல் வைத்திருக்கிறார். உண்மையில் அவருக்கு இப்போது கையை மடக்குவது என்பது முடியாத காரியம். ஏனெனில் அது இயல்பாகவே இப்படியானதொரு நிலைக்கு மாற்றம் அடைந்து விட்டது.

## கைத்தொலைபேசியும் கையுமாக மருத்துவர் சத்திரசிகிச்சையில்!

கைத்தொலைபேசிகள் மருத்துவ மனைகளுக்குள் பாவிப்பது சட்டவிரோதமானது, ஏதாவது மிக அவசரமான விடயங்களாக இருந்தால் மாத்திரம் பாவிக்க அனுமதியுள்ளது. ஆனால் நிச்சயமாக சத்திரசிகிச்சை கூடத்தினுள் கைத்தொலைபேசி அனுமதிக்கப்படவேமாட்டாது.

ஹொங்கொங்கில் குயின் மேரி மருத்துவ நிலையத்தில் ஒரு சத்திர சிகிச்சை நிபுணர் கைத்தொலைபேசியுடன் சத்திரசிகிச்சையொன்றை மேற்கொண்டுள்ளார். அதுவும் ஒரு வாகனத்தின் விலையை பேரம் பேசியபடி ஒரு கையில் கைத்தொலைபேசி, மறு கையில் கத்தியுடன். சத்திரசிகிச்சை நோயாளி மிகவும் பயந்துபோனார். என்ன நடக்குமோ, ஒருவேளை வாகனப் பேரம் சரியாக அமையாவிட்டால் தனது சத்திர சிகிச்சையும் சரியாக நடக்காதோ என்று அவர் யோசித்துக்கொண்டிருந்தார். அதன்படியே மருத்துவரோ பிழையான இடம் ஒன்றில் வெட்டிவிட்டார். இப்போது நோயாளி இரண்டாவது சத்திர சிகிச்சைக்குக் காத்திருக்கிறார். மருத்துவரோ ஒழுக்கவீனத்திற்காக தண்டனைக்காகக் காத்திருக்கிறார்.



ஆயர்கள் புடைசூழ தேவாலய வாசலில் மலர்களுடன் நிற்கும் இவருக்கு தான் என்ன பாப்பரசர் என்ற எண்ணமோ?


## உலகின் முதலாவது கைமாற்று சத்திர சிகிச்சை



பிரான்சின் எட்டு சத்திர சிகிச்சை நிபுணர்கள் கடந்த வருடம் செப்டெம்பர் 24-ம் திகதி லியோன் மருத்துவ நிலையத்தில் உலகின் முதலாவது கைமாற்று சத்திர சிகிச்சையொன்றை மேற்கொண்டனர். இறந்துபோன ஒருவருடைய கையின் மணிக்கட்டினை அவுஸ்திரேலியாவினைச் சேர்ந்த 48 வயதான கிளின்ட் ஹல்லாமின் கைகளில் பொருத்தினார்கள். இவர் 9 வருடங்களுக்கு முன்பு ஒரு விபத்தில் கையினை இழந்திருந்தார். ஹல்லாம் தனது கையை முழுமையாகப் பாவிக்க ஒருவருடம் எடுக்கலாம் என வைத்திய நிபுணர்கள் கூறியுள்ளனர்.

## உலகின் மிக உயர்ந்த 'ஹோட்டல்'

உலகின் மிக உயர்ந்த ஹோட்டல் சீனாவின் புடோன் நகரில் உள்ளது. 'கிரான்ட் ஹையாத்' எனப்படும் இந்த ஹோட்டல் 88 மாடிகளைக்கொண்ட மாவோ கட்டடத்தில் அமைந்துள்ளது. இக் கட்டடத்தின் கடைசி 35 மாடிகளை இந்த ஹோட்டல் தனக்காக பயன்படுத்துகின்றது. சீனாவின் மிக உயர்ந்த கட்டடம் என்ற பெருமையும் உலகின் மூன்றாவது உயரமான கட்டடம் என்ற பெருமையையும் இது பெற்றுக்கொண்டுள்ளது. 1999-ம் ஆண்டு மார்ச் 18இல் இது மக்கள் பாவனைக்காகத் திறந்து விடப்பட்டுள்ளது.



## கட்டுரை முற்றம்

**செல்வி ஜெயமதி ஜெயரட்ணம்**
வயது: 15
இடம்: Oslo 0958
Norway

# நோர்வேயின் இயற்கை வளம்

அன்னையின் மடியில் கடல் வளம், மலைவளம் எங்கு பார்த்தாலும் சுவர்கள் போன்ற மலைகள். அலை பாயும் கடல் ஓய்ந்து இருக்கின்றது. ஆனி மாதத்தில் சூரியன் வலம்வர பூக்கள் மலர்ந்து தேனீக்கள் பூக்களில் தேன் எடுக்கும். எங்கும் பசுமை நிறைந்த புற்கள் மரங்கள் மலர்ந்து இருக்க, மார்கழி மாதத்தில் வானத்தில் இருந்து வானமழைப் பூக்கள் போன்று அன்னை மடியில் தவள, எங்கும் தூய்மையான வெள்ளை பனிகள் பரந்து இருக்கும். இவ் இயற்கை அழகைக் கொண்ட நோர்வேயை நான் ரசிக்கின்றேன்.

**நோர்வேயில் வாழும் மனித நேயங்களைப் பற்றிச் சிறுகுறிப்பு:**

மதம், இனம், நிறம் என்னும் வேற்றுமை பார்க்காமல் எல்லோரும் மனிதர்கள் என்று பழகும் பண்புகள் என்னை மிகவும் கவர்ந்தது. வீட்டைப்போல் நாட்டையும் பார்க்கும் பண்புகள் மற்றவர்களுக்கு உதவி செய்யும் மானப்பான்மை உண்டு. ஆண், பெண் என்னும் வேற்றுமையில்லாமல் எல்லோரும் சமன் என்று வாழ்கின்றார்கள்.

**நான் வாழும் இடத்தைப் பற்றி சிறுகுறிப்பு:**

என் வீட்டுக்குப் பக்கத்தில் கடல் உள்ளது. நான்கு பக்கமும் மலைகள் உள்ள பசுமையான மரங்கள் பூங்காபோன்ற இடங்கள் நான் வாழும் இடத்தில் வாழும் நோர்வேஜியர் மிகவும் பண்பான மனிதர்கள் என்னை இவையாவும் கவர்ந்துள்ளன.

## அறிவியல் முற்றம்

**சொற்சிதறல் எண் - 53**

பிள்ளைகளே!
சொற்களைக் கண்டுபிடிக்க முயன்று பாருங்கள்.
முடியாவிட்டால் விடை அடுத்தவாரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 |

**இடமிருந்து வலம்**

1. 1–2 தேன் தரும் பூச்சி
2. 4–5 வயது போனால் தலைமயிர் என்ன செய்யும்
3. 8–10 நதி என்றும் சொல்லலாம்.
4. 11–14 பூ அல்லது மலர் என்ற சொல்லிற்கு தமிழில் வழங்கும் பிற மொழிச்சொல் ஒன்று. இங்கு எழுத்துக்கள் குழம்பியுள்ளது,
5. 21–25 இது ஆறு பக்கங்களைக் கொண்டது.
6. 17–20 சுற்றி வளைத்தல் என்றும் சொல்லலாம். போர்களில் இது அடிக்கடி நடைபெறும். இங்கு எழுத்துக்கள் குழம்பியுள்ளன.

**மேலிருந்து கீழ்**

7. 1–11 லண்டன் நகரை ஊடறுத்துச் செல்லும் நதி.
8. 12–22 கறையான்களின் கடும் உழைப்பில் உருவான இதற்குள் பாம்புகள் குடியிருக்கும்.
9. 5–25 சிரித்த வதனம் என்று பொருள் எழுத்துக்கள் மாறியுள்ளது.

**சொற்சிதறல் எண் ஐம்பத்தி இரண்டின் விடைகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| சா | லை | ■ | தோ | ழி |
| ரை | ■ | ரே | கை | ■ |
| ■ | மா | டி | ■ | மு |
| இ | த | ய | ம் | ல் |
| டி | வி | ம் | ■ | லை |



## குட்டிக்கதை படிப்போம்

# கோடரி

சிறுவன் வாஷிங்டனுக்கு ஒரு சிறிய கைக் கோடரி பரிசாகக் கிடைத்தது. அது நல்ல விளையாட்டுக் கருவிதான்; ஆனால் அது ஆபத்தானது. அதைக்கொண்டு அவன் தன் அம்மாவுக்கு விறகுகளைப் பிளந்து கொடுத்தான்; சிறிய மரங்களை வெட்டிக்கொடுத்தான்.

ஒரு நாள் அவன் விளையாட்டாக ஒரு பழ மரத்தை வெட்டிவிட்டான். அவன் அப்பா மிகவும் பாதுகாப்பாக வளர்த்த மரம் அது. அதை வெட்டியபோது அவனுக்கு அந்த எண்ணம் வரவில்லை.

வெளியில் சென்றிருந்த அப்பா வீடு திரும்பினார்; தான் மிகவும் கவனமாக வளர்த்த மரம் வெட்டப்பட்டிருப்பதைக் கண்டார். அவருக்குக் கடுஞ்சினம் வந்தது.

எல்லோரையும் அழைத்து அந்த மரத்தை வெட்டியது யார் என்று கேட்டார். தாங்கள் இல்லை என்று எல்லோரும் பதில் கூறினார்கள். அப்போது வாஷிங்டன் வீட்டில் இல்லை; வெளியே போயிருந்தான்.

அவன் வீடு திரும்பியபோது அப்பா அவனை அழைத்தார்.

'அந்தப் பழமரத்தை வெட்டியது யார்' என்று கேட்டார்.

வாஷிங்டன் பதில் சொல்லாமல் சற்றுநேரம் யோசித்தான். பிறகு ஒரு முடிவுக்கு வந்தான்.

'அப்பா! நான் பொய் சொல்லமாட்டேன்; அதை வெட்டியது நான்தான்'என்றான்.

அப்பா தன் பழமரத்தை மறந்தார். பொய்யை வெறுக்கும் தன் மகனை அன்போடு அணைத்துக் கொண்டார். அவன்செய்த தவற்றை மன்னித்தார்.

இந்தச் சிறுவன்தான் பிற்காலத்தில் அமெரிக்காவின் முதல் குடியரசுத் தலைவராய் விளங்கிய ஜார்ஜ் வாஷிங்டன் என்பவர்.

*– எம். மஞ்ஞா*

## பெரியார்கள் வாழ்வில்

# பாரதியும் பாப்பாப்பாட்டும்



பாரதியாரின் இரண்டாவது பெண் பாப்பா என்கிற சகுந்தலாவுக்கு ஐந்து வயது. பாரதியார் ஏதோ எழுதிக் கொண்டிருந்தார். அப்பொழுது அவரது செல்வமகள் பாப்பா அழுதுகொண்டே ஓடிவந்தாள். அவர் மனைவி செல்லம்மாள் அடித்ததில்தான் மகள் அழுகிறாள் என்பதைப் புரிந்துகொண்டார் பாரதியார். ஏன் குழந்தையை அடித்தாய். அவள் தவறொன்றும் செய்யவில்லையே? என்றார் பாரதியார்.

உங்கள் பாட்டிற்கு எழுதிக்கொண்டே இருக்கிறீர்கள். நான் ஏதாவது வேலையாக இருந்தால் பாப்பா வெளியே நழுவிவிடுகிறாள். அடுத்த வீடுகளுக்குப் போய் விளையாடி அடிபட்டுக் கொண்டு வருகிறாள். அவளைத் தேடி சமாதானம் செய்வதே எனக்குப் பெரிய வேலையாகி விடுகிறது. வெளியே எங்கும் போகாதே என்று சொன்னேன். அதற்குத்தான் அழுகிறாள் என்று பதில் சொன்னார் செல்லம்மாள். பாரதியார் குழந்தையை அருகிலே அழைத்தார். பாப்பா நீ எங்கும் போகாதே! நான் பாட்டுச் சொல்லித் தருகிறேன் பாடுகிறாயா? நீயும் எங்கேயும் போக வேண்டியிராது. அம்மாவும் அடிக்கமாட்டாள் என்று பாப்பாப் பாட்டைப் பாடினார். குழந்தையும் கூடப்பாடினாள். அவள் வளர வளர பொருளையும் சொல்லிக்கொடுத்தார்.

சகுந்தலாவின் பெயரில் தமிழ் பாப்பாக்களுக்கு அருமையான பாப்பாப்பாட்டுக் கிடைத்தது.

*(பாரதி வாழ்வில் நூறு சுவையான நிகழ்ச்சிகள் எனும் நூலிலிருந்து)*

## புதிய ஆத்திசூடி

* அச்சம் தவிர்.
* ஆண்மை தவறேல்.
* இளைத்தல் இகழ்ச்சி.
* ஈகை திறன்.
* உடலினை உறுதி செய்.
* ஊண் மிக விரும்பு.
* எண்ணுவதுயர்வு.
* ஏறுபோல் நட.
* ஐம்பொறி ஆட்சிகொள்.
* ஒற்றுமை வலிமையாம்.
* ஓய்தலொழி.
* ஔடதம் குறை.

*–பாரதியார்–*

## எழுத்துச் சித்திரம்

'ஆ' விலிருந்து யானை



யானை


## கண்டுபிடியுங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | 4 | 6 | 8 | 10 |
| 12 | 14 | 16 | 18 | 20 |
| 22 | 24 | 26 | 28 | 30 |
| 32 | 34 | 36 | 38 | 40 |
| 42 | 44 | 46 | 48 | 50 |

| | | | | |
|---|---|---|---|---|
| 34 | | 8 | | 22 |
| | 10 | | 24 | |
| 2 | | | | 50 |
| | 28 | | 42 | |
| 30 | | 44 | | 18 |

மேல் கட்டத்தில் உள்ள எண்களைக் கீழ்க்கட்டத்தில் நிரப்பி, இடமிருந்து வலம், வலமிருந்து இடம், மேலிருந்து கீழ், கீழிருந்து மேல், குறுக்கு, நெடுக்கு என்று எப்படிக்கூட்டினாலும், கூட்டுத்தொகை 130 வரும்படி செய்யவேண்டும். உங்கள் உதவிக்குக் கீழ்க் கட்டத்தில் சில எண்களும் கொடுக்கப்பட்டுள்ளன. முயன்றுபாருங்கள் முடியாவிட்டால் விடை அடுத்தவாரம்

**கடந்தவார விடை**



14 முக்கோணங்கள்.

புதிய மிலேனியத்தை நோக்கி....

# கிருஷ்ணி உணவகம்

## லாச்சப்பலில் மங்கலகரமான திறப்புவிழா



இலக்கம் 21, Rue Cail இல் அமைந்துள்ள
அறுசுவை உணவுகளின் சொர்க்கமான
**கிருஷ்ணி உணவகம்**
எதிர்வரும் 05.11.99 வெள்ளிக்கிழமை காலை 6.30-730
வரையிலான சுப நேரத்தில்
திறந்துவைக்கப்படவுள்ளது. அன்பர்கள், நண்பர்கள்,
ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்.
எமது உணவகம் தினந்தோறும் காலை 9.00
மணியிலிருந்து இரவு 11.00 மணி வரை உங்களுக்குச்
சேவையாற்றக் காத்திருக்கின்றது.



தங்கள் நல்வரவை நாடும்
மனோஜ்
தொலைபேசி: 0609920702

Pub.



## ரசிகப்பெருமக்கள் அனைவருக்கும் கருமாரி மூவிஸின் தீபாவளி வாழ்த்துக்கள்




நடிகர்கள்
ஆக்ஸன் கிங் அர்ஜூன்
மனிஷா கொய்ராலா
ரகுவரன்
மணிவண்ணன்
வடிவேலு
மிஸ் சேனல்
சுஸ்மிதா சென்

கதை, திரைக்கதை, இயக்கம்
ஷங்கர்

மேலதிக தொடர்புகளுக்கு
01 48 35 00 61
01 48 38 54 65
06 16 39 20 57
(ஷங்கர்)

06/11/99 சனி மாலை 6.15 - 9.15
07/11/99 ஞாயிறு 3.15 - 6.15 - 9.15
08/11/99 திங்கள் 6.15 - 9.15
09/11/99 செவ்வாய் 6.15 - 9.15
10/11/99 புதன் 6.15 - 9.15
11/11/99 வியாழன் 3.15 - 6.15
14/11/99 ஞாயிறு 9.15

வசனம் சுஜாதா · இசை ஏ.ஆர்.ரகுமான் · பாடல்கள் வைரமுத்து · ஒலிப்பதிவு கெ.வி.ஆனந் · நடனம் ராஜு சுந்தரம் நாகேந்திரபிரசாத்

100 நாட்களை வெற்றி நாட்களாக கருதும் இயக்குனர்கள் மத்தியில் 200 நாட்களை இலகுவாக எதிர்கொள்ளும் எழுற்சி இயக்குனர் ஷங்கர்

**ESPACE CINEMA**
**AUBERVILLIERS QUATRE CHEMINS**
**M° : Quatre Chemins**




திரைக்கதை, இயக்கம்
பாரதிராஜா

கதை, வசனம்
மணிரத்னம்

இசை
ஏ.ஆர்.ரகுமான்

பாடல்கள்
வைரமுத்து

அரங்கினுள் பொதிகள் எடுத்துச் செல்வது
தடைசெய்யப்பட்டுள்ளது

11/11/99 வியாழன் 9.15
12/11/99 வெள்ளி 6.15 - 9.15
13/11/99 சனி 6.15 - 9.15
14/11/99 ஞாயிறு 3.15 - 6.15
15/11/99 திங்கள் 6.15 - 9.15

*03/11/99 புதன்கிழமையிலிருந்து ஆசனங்களை கருமாரி வீடியோவில் [12 Av V. Couturier. 93120 La Courmeuve . M° : La Courneuve) பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். நெருக்கடியை தவிர்க்கவே இவ் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இருக்கை இலக்கமும் நுழைவுச்சீட்டில் இருக்கும் இருக்கை இலக்கமும் ஒன்றா என சரிபார்த்து அமர்ந்து ஒத்துழைப்பு தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.*

மேலதிக தொடர்புகளுக்கு
01 48 35 00 61
01 48 38 54 65
06 16 39 20 57
(ஷங்கர்)

**ESPACE CINEMA**
**AUBERVILLIERS QUATRE CHEMINS**
**M° : Quatre Chemins**

Pub.

# ஆண்-பெண் சமத்துவத்தை 2400 ஆண்டுகளின் முன்பே வலியுறுத்திய பிளேட்டோ

**உலகவரலாற்றில் கடந்த 2000 ஆண்டுகளுக்கு மேலாக மனித வாழ்வியலில் பல்வேறு மாறுதல்கள் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்த பிரசித்தி பெற்ற பலரது விபரங்கள் இத் தொடரில் வெளிவருகின்றன.**



ஏதென்ஸ் நகரத்தின் புகழ்வாய்ந்த ஒரு குடும்பத்தில் கி.மு. 427-ம் ஆண்டளவில் பிளேட்டோ பிறந்தார். இவரது இளமைப் பருவத்தில் புகழ்பெற்ற தத்துவஞானியாக விளங்கிய சாக்ரட்டீசின் அறிமுகம் இவருக்குக் கிடைத்தது. சாக்ரட்டீஸ் இவருடைய ஆருயிர் நண்பராகவும் வழிகாட்டியாகவும் ஆனார். கி.மு.399-ம் ஆண்டில் சாக்ரட்டீஸ் 70 வயதை எட்டியிருந்தபோது, அவர் மீது சமயத்தை அவமதித்ததாகவும், ஏதென்ஸ் நகர் இளைஞர்களை ஒழுக்கங்கெடச் செய்ததாகவும் ஆதாரமற்ற குற்றங்கள் சாட்டப்பட்டு விசாரிக்கப்பட்டார். இந்த விசாரணை நாடகத்திற்குப் பின் சாக்ரட்டீஸ் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டு, நஞ்சு கொடுத்துச் சாகடிக்கப்பட்டார். 'நான் அறிந்த அனைவரிலும் மிகச் சிறந்த அறிவாளி, சாக்ரட்டீஸ். அவர் நேர்மை மிக்கவர். பொதுநலம் வாய்ந்தவர்' என்று பிளேட்டோ போற்றினார். அத்தகைய பெருமைக்குரிய சாக்ரட்டீஸ் கொல்லப்பட்டது கண்டு பிளேட்டோவுக்கு மக்களாட்சி அரசின் மீது நீங்காத வெறுப்பு உண்டாயிற்று.

சாக்ரட்டீஸ் இறந்த சில நாட்களிலேயே, பிளேட்டோ ஏதென்சிலிருந்து வெளியேறினார். அடுத்த 10 அல்லது 12 ஆண்டுகளை அயல் நாடுகளில் பயணம் செய்வதில் கழித்தார். கி.மு.387-ம் ஆண்டில் மீண்டும் ஏதென்ஸ் திரும்பி, அங்கு 'கலைக்கழகம்' (Academy) என்று அழைக்கப்படுகின்ற புகழ்பெற்ற பள்ளியை நிறுவினார். பிளேட்டோ 40 ஆண்டுகள் அங்கு கல்வி கற்பித்தார். தத்துவம் பற்றி நூல்கள் எழுதினார். இவருடைய மாணவர்களில் மிக்க புகழ் பெற்றவர் அரிஸ்டாட்டில் ஆவார். பிளேட்டோ 60 வயதை எய்திருந்தபோது அரிஸ்டாட்டில் தமது 17-ம் வயதில் பிளேட்டோவிடம் கல்வி பயில்வதற்காக வந்தார். பிளேட்டோ கி.மு.347-ம் ஆண்டில் தமது 80-ம் வயதில் காலமானார்.

பிளேட்டோ 36 நூல்கள் எழுதினார். அவை பெரும்பாலும் அரசியல், அறவியல் பற்றியவை. மெய்விளக்கவியல், இறைமையியல் பற்றியும் அவர் எழுதியுள்ளார். இந்நூல்களைச் சில வாக்கியங்களில் சுருங்க உரைப்பது அத்தனை எளிதன்று. எனினும், அவருடைய சிந்தனையை அளவுக்கு மீறி எளிமைப் படுத்தும் அபாயம் இருந்தபோதிலும், பிளேட்டோவின் மிகப் புகழ் பெற்ற 'குடியரசு' (The Republic) என்ற நூலில் கூறப்பட்டுள்ள முக்கியமான அரசியல் கொள்கைகளை இங்கு சுருக்கமாகப் பார்க்கலாம். 'உன்னதச் சமுதாயம்' பற்றிய பிளேட்டோவின் கோட்பாட்டினை இந்த நூல் விவரிக்கிறது.

பிளேட்டோவின் கருத்துப்படி, மிகச் சிறந்த அரசு முறை என்பது 'உயர் குடியினர் ஆட்சியே' (Atistocracy) ஆகும். இவ்வாறு கூறுவதால், அவர் ஒரு பரம்பரை உயர் குடியினர் ஆட்சியையோ, ஒரு முடியாட்சியையோ ஆதரிக்கவில்லை. மாறாக, தலைமை வாய்ந்த ஓர் உயர் குடியினர் ஆட்சியை அதாவது, நாட்டில் உள்ளவர்களில் அறிவிலும், திறமையிலும் மிகச் சிறந்தவர்களால் நடத்தப்படும் ஆட்சியை அவர் விரும்பினார். இந்த ஆட்கள், குடி மக்கள் வாக்களிப்பதன் மூலம் தேர்ந்தெடுக்கப்படலாகாது. மாறாக, அமைப்பின் உறுப்பினர்கள் தங்களுக்குள் மனம் ஒத்துத் தேர்ந்தெடுக்கும் (Co-operation) ஒரு முறையின்படி அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும். ஏற்கனவே ஆட்சி செலுத்துகின்ற உறுப்பினர்களாக அல்லது காப்பாளர் வர்க்கமாக (Guardian Class) இருக்கின்ற ஆட்கள் கூடுதலான ஆட்களை முற்றிலும் தகுதி அடிப்படையில் தங்களுடன் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

காப்பாளர் வர்க்கத்தில் உறுப்பினர்களாக இருப்பதற்குத் தங்களுடைய தகுதியை மெய்ப்பித்துக் காட்டுவதற்கு எல்லா மக்களுக்கும் ஆண்-பெண் இருபாலருக்கும் வாய்ப்பளிக்க வேண்டும் எனப் பிளேட்டோ கருதினார். ஆண்-பெண் இருபாலருக்கும் அடிப்படைச் சமத்துவம் அளிக்கப்படவேண்டும் என்ற கருத்தை முதன் முதலில் கூறிய தத்துவஞானி. நீண்ட வரலாற்றில் இதை வலியுறுத்திய ஒரேயொரு மனிதர் பிளேட்டோதான், சமவாய்ப்பினைக் காப்புறுதி செய்வதற்காக, குழந்தைகள் அனைவரையும் அரசாங்கமே வளர்க்க வேண்டும் என்றும், அவர்களுக்கு அரசாங்கமே கல்வி புகட்ட வேண்டும் என்றும் பிளேட்டோ வலியுறுத்தினார். குழந்தைகளுக்கு முதலில் கண்டிப்பாக உடற்பயிற்சி அளிக்கவேண்டும். எனினும், இசை, கணிதம் போன்ற மற்றக் கல்விப் பாடங்களைப் புறக்கணிக்கலாகாது. பல்வேறு கட்டங்களில் விரிவான தேர்வுகள் நடத்தப்பட வேண்டும். இத்தேர்வுகளில் குறைந்த வெற்றி பெறுபவர்களுக்குச் சமுதாயத்தின் பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடும் பொறுப்பு குறித்தளிக்கப்பட வேண்டும். நல்ல வெற்றி பெறுபவர்களுக்குத் தொடர்ந்து பயிற்சி அளிக்கவேண்டும். இந்த உயர் கல்வியில் வழக்கமான கல்விப் பாடங்கள் மட்டுமின்றி 'தத்துவ' ஆராய்ச்சியும் சேர்க்கப்பட வேண்டும். 'தத்துவ ஆராய்ச்சி' என்று பிளேட்டோ குறிப்பிட்டது உன்னத வடிவங்களில் மெய்விளக்கவியல் கோட்பாட்டினை ஆராய்வதாகும்.

35-ம் வயதில், கோட்பாட்டுத் தத்துவங்களில் தமது புலமையைத் தெள்ளத்தெளிவாக வெளிப்படுத்தியவர்களுக்கு மேலும் 15 ஆண்டுகள் நடைமுறைச் செயல்முறை அனுபவப் பயிற்சியளிக்க வேண்டும். ஏட்டறிவை உலகியலில் பயன்படுத்தும் திறனைக் காட்டுகிறவர்கள் மட்டுமே காப்பாளர் வர்க்கத்தில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். மேலும், பொது நலத்தில் அக்கறை கொண்டவர்களெனத் திட்டவட்டமாக மெய்ப்பித்துக் காட்டுகின்றவர்கள்தாம் காப்பாளர்களாக ஆக வேண்டும்.

**சோவியத் ஒன்றியத்தின் பொதுவுடமைக் கட்சியும் பிளேட்டோவின் உன்னதக் குடியரசின் காப்பாளர் வர்க்கத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கப்படுவதுண்டு. பொதுவுடமைக் கட்சியிலும், தாமே ஆட்சியில் நிலைத்து நீடிக்கும் ஒரு குழாம் அதிகாரம் செலுத்துகின்றது.**

காப்பாளர் வர்க்கத்தில் உறுப்பினராவதை எல்லோரும் விரும்பமாட்டார்கள். காப்பாளர் செல்வந்தர்களாக இருக்கலாகாது. அவர்கள் ஒரு குறிப்பிட்ட அளவு மட்டுமே சொந்தமாகச் சொத்து வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். அவர்கள் சொந்தமாக நிலமோ, தனி இல்லங்களோ வைத்துக்கொள்ளக் கூடாது. அவர்கள் ஒரு குறிப்பிட்ட ஊதியத்தை (அது பெருந்தொகையாக இருக்காது) பெறுவார்கள். அவர்கள் (சொந்தமாகத் தங்கமோ, வெள்ளியோ வைத்துக்கொள்ளலாகாது) காப்பாளர் வர்க்கத்தின் உறுப்பினர்கள், தனியாகக் குடும்பங்கள் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். அவர்கள் ஒருங்கிணைந்து உணவு உண்ண வேண்டும். பொதுவான துணைவியை அல்லது துணைவரைத்தான் கொண்டிருக்க வேண்டும். இந்தத் 'தத்துவ வேந்தர்'களுக்கு (Philosopher Kings) இழப்பீடாகக் கிடைப்பது பொருட்செல்வம் அன்று; மாறாக, பொது மக்களுக்குத் தொண்டு செய்யும் மனநிறைவேயாகும். உன்னதக் குடியரசுபற்றி பிளேட்டோவின் கருத்தின் சுருக்கம் இதுதான்:

'குடியரசு' நூல், பல நூற்றாண்டுகளாக, மிகப்பரவலாகப் படிக்கப்பட்டு வந்திருக்கிறது. எனினும், அதில் விவரிக்கப்பட்டுள்ள அரசியல் அமைப்பு முறையை, உள்ளப்படியான குடியியல் அரசுக்கான ஒரு முன்மாதிரியாக யாரும் கொள்ளவில்லை. பிளேட்டோவின் காலத்திற்கும், இப்போதைக்கும் ‹ இடைப்பட்ட இடைவெளிக் காலத்தின் பெரும் பகுதியில், பெரும்பாலான ஐரோப்பிய நாடுக்ளைப் பரம்பரை முடியாட்சிகளே ஆண்டு வந்திருக்கின்றன. அண்மை நூற்றாண்டுகளில் பல நாடுகள் மக்களாட்சி அரசு முறையை ஏற்றுக் கொண்டிருக்கின்றன. ஹிட்லர், முசோலினி ஆகியோருடையதைப் போன்ற இராணுவச் சர்வாதிகார ஆட்சி அல்லது கட்சிவாத கொடுங்கோலாட்சிகளும் ஏற்பட்டுள்ளன. அந்த அரசு முறைகளில் எதுவும் பிளேட்டோவின் கொள்கைகளை எந்த ஒரு அரசியல் கட்சியும் ஏற்றுக்கொண்டதில்லை. கார்ல் மார்க்சின் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு ஓர் அரசியல் இயக்கம் தோன்றியதுபோல், பிளேட்டோவின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட அரசியல் இயக்கம் எதுவும் தோன்றவில்லை. அப்படியானால் பிளேட்டோவின் படைப்புகள் மதித்துப் போற்றப்பட்டாலும் நடைமுறையில் அடியோடு புறக்கணிக்கப்பட்டன என்ற முடிவுக்கு நாம் வர முடியுமா? முடியாது என்றே நான் கருதுகின்றேன்.

## உலக வரலாற்றில் பதிவானவர்கள்

ஐரோப்பாவிலுள்ள குடியியல் அரசு எதுவும் பிளேட்டோவின் உன்னதக் குடியரசை நேரடியாக முன் மாதிரியாகக் கொண்டிருக்கவில்லை என்பது உண்மைதான். ஆயினும், மத்திய காலத்து ஐரோப்பாவிலிருந்த கத்தோலிக்க திருச்சபையின் நிலைக்கும், பிளேட்டோவின் காப்பாளர் வர்க்கத்திற்குமிடையே மிகுந்த ஒப்புமை காணப்படுவதை இங்கு கவனிக்க வேண்டும். மத்திய காலத்துத் திருச்சபை, தாமே நெடுநாள் அதிகாரத்தில் நீடிக்கும் உயர்ந்தோர் குழாமை (Elite) கொண்டிருந்தது. இதன் உறுப்பினர்கள், எப்பொழுதும் அதிகாரமுறைத் தத்துவத்தில் பயிற்சி பெற்றார்கள். கொள்கையளவில், எல்லா ஆண்களும் அவர்களின் குடும்பப்பின்னணி எதுவாக இருந்தாலும் சமய குருவாக ஆவதற்குத் தகுதியுடையவர்களாக இருந்தார்கள். (ஆனால், பெண்கள் இதிலிருந்து விலக்கப்பட்டிருந்தார்கள்) கொள்கையளவில், சமயகுருவுக்குக் குடும்பம் கிடையாது. தமது சொந்தச் செல்வத்தைப் பெருக்குவதில் அக்கறை கொள்வதைவிட, பொது மக்களின் நலனிலேயே அவர்கள் அக்கறை காட்டவேண்டும் என்று விதிக்கப்பட்டிருந்தது.

சோவியத் ஒன்றியத்தின் பொதுவுடமைக் கட்சியும் பிளேட்டோவின் உன்னதக் குடியரசின் காப்பாளர் வர்க்கத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கப்படுவதுண்டு. பொதுவுடமைக் கட்சியிலும், தாமே ஆட்சியில் நிலைத்து நீடிக்கும் ஒரு குழாம் அதிகாரம் செலுத்துகின்றது. அந்தக் குழாத்தின் உறுப்பினர்களும், அதிகார முறைத் தத்துவத்தில் பயிற்சி பெற்றவர்களாக இருக்கின்றார்கள்.

அமெரிக்க அரசின் கட்டமைப்பில் கூட பிளேட்டோவின் கொள்கைகள் செல்வாக்குப் பெற்றிருந்தன. அமெரிக்க அரசமைப்பு மாநாட்டில் பங்கு கொண்ட பல உறுப்பினர்கள், பிளேட்டோவின் அரசியல் கொள்கைகளை நன்கறிந்திருந்தார்கள். மக்களின் விருப்பத்தைக் கண்டறிந்து, அதற்குச் செயல் விளைவு அளிப்பதுதான் அமெரிக்க அரசமைப்பின் குறிக்கோளாக இருந்தது. அதே சமயம், நாட்டை ஆள்வதற்கு மிகச் சிறந்த அறிவும் திறமையும் வாய்ந்தவர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்பதையும் அது தனது நோக்கமாகக் கொண்டிருந்தது.

பிளேட்டோவின் செல்வாக்கு காலங்காலமாகப் பரந்துபட்டதாகவும், ஊடுருவி நிலவுவதாகவும் இருந்தபோதிலும். அவருடைய செல்வாக்கு நேரடியாக அல்லாமல் மறைநுட்பமாகவே நிலவி வந்துள்ளது. அவரது அரசியல் கோட்பாடுகளுடன் சேர்ந்த அறவியல், மெய் விளக்கவியல் பற்றிய அவரது விவாதங்களும். பிற்காலத் தத்துவஞானிகள் பலர் மீது செல்வாக்குச் செலுத்தியுள்ளன. ஆனால் பிளேட்டோவின் 'செல்வாக்கு 23 நூற்றாண்டுகளுக்கு மேலாக நிலை பெற்றுள்ளது.

உங்கள் அனைத்து விதமான அச்சுத் தேவைகளுக்கும்
**தமிழ் அச்சகம்**
(மக்கள் கடை அருகில்)
இலண்டன், இந்தியா, இலங்கை, பிரான்ஸ், சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் 500-க்கு மேற்பட்ட திருமண அழைப்பிதழ் மாதிரிகள் உங்கள் தெரிவிற்காக உள்ளன.
அனைத்து அச்சு வேலைகளும் குறித்த தவணையில் மிகக் குறைந்த விலையில் சிறந்த தரத்துடன் செய்து கொடுக்கப்படும்.
திங்கள் முதல் - சனி வரை 09.00 – 22.00 மணி வரை
59, Rue Louis Blanc, 75010 Paris - Tel&Fax: 01 42 09 60 64 ou 06 13 12 35 42
அழைப்பிதழ் தயாரிப்பாளர்களுக்கு!
திருமண அழைப்பிதழ், பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்கள், பிறந்த தின விழா அழைப்பிதழ், முதன் நன்மை அழைப்பிதழ், கேக் பெட்டிகள் மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம். அழைப்பிதழ் மாதிரித்தாள் தெரிவிற்காக இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.
24 மணி நேரத்தில் உங்கள் அழைப்பிதழ்கள் அனைத்தும் Print செய்து கொடுக்கப்படும்
Pub




# அன்னை தெரேசா ஒரு தெய்வப் பிறவியா ?

உலகிலேயே அன்பாலே தன் முன்னே எல்லோரையும் தலை குனிய வைத்தவர் அன்னை தெரேசா. இவர் இன்று இறந்து இரண்டு ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனால் தற்போது இவரைப்பற்றிய சில தகவல்கள் மக்களால் பரப்பப்பட்டு வருகின்றன. அதாவது அன்னை தெரேசா ஒரு மனிதராக அல்ல அவர் ஒரு தெய்வமாகவே வாழ்ந்திருக்கிறார் என்று சிலர் கூறிவருகின்றனர். அதாவது கடும் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் இவ் அன்னை திரேசாவை மிக நம்பிக்கையுடன் வழிபட்டார்கள் என்றும் அதன் மூலம் இவர்களது நோய் குணமடைந்துவிட்டதென்றும் கூறிவருகிறார்கள். ஆனால் இது இன்னும் ஒருவராலேயும் ஆதார பூர்வமாக நிரூபிக்கப்படவில்லை.

இருந்தாலும் இவரின் அன்பர்கள் கூறும் தகவல் உண்மையாகுமிடத்து இவரையும் கிறிஸ்தவ மதத்தில் ஒரு தெய்வமாக ஏற்றுக் கொள்ளப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

# குழந்தைகளைச் சரியாகக் கவனிக்காததால் 23 வருடச் சிறைத்தண்டனை

அண்மையில் அமெரிக்காவில் ஒரு 37 வயதான இளம் தாய்க்கு 23 வருடச் சிறைத்தண்டனை கிடைத்துள்ளது. காரணம் தன் குழந்தைகள் இருவரையும் சரியே கவனிக்கவில்லை என்பதுதான். எப்படி ஒரு தாய் தன் குழந்தைகளை நன்று பராமரிக்கத் தவறுவாரா என எல்லோரும் எண்ணலாம். ஆனால் இத் தாய் தவறிவிட்டார். எனவே தான் தற்போது தன் இரு குழந்தைகளையும் பறிகொடுத்துவிட்டுத் தண்டனையையும் பெற்றிருக்கிறார். ஆம் இவருடைய இரு குழந்தைகளும் மிக கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டமைக்கு இவரின் அலட்சியப் போக்குத்தான் காரணம். ஏனெனில் இத்தாய் ஒரு ஆண் நண்பனுடன் தகாத தொடர்பு ஒன்றைக்கொண்டிருந்தார். ஒரு சமயம் அவ் ஆண்நண்பனை ஏதோ கருத்து முரண்பாடு காரணமாக வீட்டைவிட்டு வெளியே துரத்தியுள்ளார். இதனால் கோப முற்ற அவ் வாலிபன் இவர் பகலில் தூங்கும்போது இவருடைய இரண்டு குழந்தைகளையும் கடத்திச்சென்று மூத்த 11 வயதான பெண்குழந்தையைக் கற்பழித்துவிட்டு இறுதியில் இரு குழந்தைகளையும் கொலையும் செய்துவிட்டார். இதனால்தான் இக் குழந்தைகளின் தாய்க்கு, இவர் தன் குழந்தைகளை அக்கறையுடன் வளர்க்கவில்லை எனும் குற்றச்சாட்டால் இந்த நீண்ட காலச் சிறைவாசம் கிடைத்துள்ளது. குற்றம் புரிந்தவனுக்கு இதை விடத் தண்டனை கிடைக்க வேண்டுமே.

# வருமானத்திற்கு ஒரு வழி

வாழும்போது ஏராளமான தொலைத்தொடர்புச் சாதனங்களுக்குச் செய்திகளாக, பெரும் வருமானத்தைச் சம்பாதிக்கக் காரணமாக இருந்தவர் மறைந்த இளவரசி டயானா. ஏனெனில் இவர் எங்கு சென்றாலும் அல்லது யாருடன் நெருங்கிப் பழகினாலும் அச்செய்திகள் யாவும் பெரும் பரபரப்பாக பத்திரிகைகள் தொலைக்காட்சிகளில் வந்துவிடும். அவர் இறந்தபின்பும் அவரின் பெயரைக்கூறி எத்தனையோ வழிகளில் ஒவ்வொருவரும் வருமானத்தைச் சம்பாதித்துக்கொண்டதுமுண்டு. இப்பொழுது ஒரு புதுவழியில் வருமானமொன்றை இவர் பெயரில் தேடத்தொடங்கியுள்ளார்கள்.



அதாவது இவரின் மரணச் சடங்கு இடம் பெற்ற தேவாலயத்தில் கலந்துகொண்ட முக்கிய பிரமுகர்கள் இருந்த ஆசனங்களை விற்பனைப்படுத்துவதே தற்போதுள்ள வியாபாரம். அதாவது தற்போது அமெரிக்காவில் ஒரு ஆசனம் ஐம்பதினாயிரம் டொலர்கள் என்னும் விலையளவில் விற்கப்பட்டுவருகிறது.

இதுவரை 800 ஆசனங்கள் விற்பனைக்காகத் தயார்ப்படுத்தப்பட்டுள்ளன. ஆக மொத்தம் இளவரசி டயானா வாழும் போதும் பலருக்கு வருமானத்தைத் தேடிக்கொடுத்து தான் இறந்தபின்னும் இந்நிலையைத் தொடரவைத்து வருகிறார்.

# பிரான்சின் முதற்பெண் போர் விமானி

தற்போது உலகெங்கிலும் போர் விமானமோட்டும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இவர்களில் ஒருவராக தற்போது பிரான்ஸ் நாட்டுப் பெண்மணியும் இணைந்திருக்கிறார். அதாவது பிரான்ஸ் நாட்டில் முதல் முதல் போர் விமானம் ஓட்டும் பெண்மணி என்ற பெருமையை கரோலின் என்ற இந்த 24 வயதுப் பெண் பெற்றிருக்கிறார். இத்துறையை இவர் தேர்வு செய்ததற்குக் காரணம் யாதென பத்திரிகைகள் கேட்ட போது அதற்கு அவர் கொடுத்த விளக்கம் மிகவும் வித்தியாசமாக இருந்தது. அதாவது தான் இப்போர் விமானம் ஓட்டுவதன் மூலம் தன் தாய்நாட்டிற்குச் சேவை செய்வதே தன் நோக்கமெனத் தெரிவித்துள்ளார் கரோலின். இன்னுமொரு வருடத்தில் கரோலின் பாரிய யுத்த விமானங்களையும் தனியே ஓட்டிச் செல்வாரென அவரோடுள்ள இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.





# ARCHIES

205 Edgware Road, Colindale, London NW 9.6 Ly - T.P: 0181-205 3652

ஆச்சீஸ் ஐந்து ஆண்டு நிறைவை முன்னிட்டும் Millennium ஆண்டுக்குமான

## மாபெரும் மலிவு விற்பனை



★ ஆச்சீஸ் அரிசிமா–மிளகாய்த்தூள் ஒன்று வாங்கினால் இன்னொன்று இலவசம்.
★ ஆச்சீஸ் சின்னம் பொறிக்கப்பட்ட வேறு அனைத்து இலங்கைத் தயாரிப்பு பொருட்களும் இரண்டு வாங்கினால் ஒன்று இலவசம்.
★ அனைத்து இலங்கைத் தயாரிப்புப் பொருட்களும் 15% கழிவு

**5 CD க்கள் £10 மட்டும்**
**5 Video £10 மட்டும்**
**3 ஒறிஜினல் பிரமிட் ஐங்கரன் Video £10 மட்டுமே**

**மலிவு விற்பனை 01.10.1999 தொடக்கம் 31.12.99 வரை நீடிக்கும்**

ஆச்சீஸ் ஸ்தாபனத்தார் தமது வாடிக்கையாளர்களுக்கு தீபாவளி வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறார்கள்.

Pub




Pub. EN

# கலைந்த சொற்கள் எண்: 42

352 எழுத்துக்கள் கொண்ட இச் சொற்கூட்டுக்குள் 134 சொற்கள் கலைந்திருக்கின்றன. சொற்கள் நேர் கோட்டிலும் இடமிருந்து வலம், வலமிருந்து இடம், மேலிருந்து கீழ், கீழிருந்து மேல், மூலைப்பக்கம் என இருக்கும். இச்சொற்களை கண்டுபிடித்து கோடிடவும். சொற்களில் சேராத சில எழுத்துக்கள் மேலதிகமாக உள்ளன.

| | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இ | ர் | இ | ம் | பு | ப | ரி | ச | ம் | ம் | ல் | ல் | வு | க | த | ச |
| ரு | க | க | க | ப | கா | லூ | ல | ப | ப | ஞ் | ச | ம் | த | மா | தை |
| ட் | ர | ழ் | கு | க் | லா | ல் | ப | ம் | ல | பு | ப் | ல | க | ன | ய |
| டு | த | த | ச் | ர் | இ | க | ஆ | த | ச | மா | ய | வா | கை | க் | ம் |
| ல் | ல | ல் | கொ | சி | ந | ம | ங் | க | ள | ம் | ன | ல் | தொ | த | ப |
| ம் | க | ள | க | த | ச | லூ | ரி | ர் | ம | வி | வ | ரு | த் | த | ம் |
| ர் | ளா | ள் | உ | ற | ந் | த் | ல் | ப் | ல் | ம் | பி | தீ | ன | ன | டு |
| ப | ள | கி | வெ | ல் | த | ளு | ர | பு | பு | ம் | த | ந் | ச | வ | கு |
| ம் | ர் | ள் | ர | ல் | ன | வா | பு | ஸ் | ள் | த் | ர | ரி | து | ந் | ப |
| க | ள் | உ | கு | த | ம் | ர | ப | ப் | ளி | ள் | த | வ | த் | த | ல் |
| ம் | ள் | ள் | க | தி | ப | ம் | த | த் | ரு | வ | ட | க | ம் | ர் | ல் |
| ளி | க | ன | உ | கு | பி | ன் | ன | ம் | ப் | இ | ம் | ற் | ம் | ள | வ |
| பு | ம் | ர | தி | த் | ரி | த | ய | பு | ன் | ம | ர | ப | ரா | க் | கு |
| ம் | ப | ரை | த | ன் | ந் | னி | த | த | ல் | ப | ப் | க | க | ப | டி |
| ர | த | ன் | ர | ப | தா | ல் | ம | லா | த | ரு | ண | ம் | ளி | ட் | ல் |
| பி | ம் | ப | தா | ம் | வ | ம் | க | வா | வி | வ | சா | ய | ம் | ப் | டு |
| கி | ரு | ச | ச | ன் | ன | ம் | க | பு | டு | ம் | ப | கா | பு | ல் | பு |
| கு | வ | சு | ரி | ப | ம் | க | வி | ல | ம் | ன | வ | ஆ | தா | ர | ம் |
| கு | ப | ண | ரு | ப | சு | ள | வா | வ | க | ற் | வ | ர | த | வி | ம் |
| ம் | ம் | நி | க் | ங் | க் | த் | ர | ர் | கா | ம் | ம் | ம் | ம் | க | பு |
| ப | ழ | ஜ | ல | க | க | தி | த | ர | ச | ர | ப | ப | அ | ட | ன் |
| ல் | ப | ம் | ம் | ம் | ம் | ல் | ன் | ம் | ட | தி | ம் | ம் | ன | ன் | பி |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தகர்ப்பு | மரிப்பு | கரித்தல் | புரளுதல் | கதம்பம் | புத்தகம் | விருப்பம் | தரிசனம் | வருத்தம் | சனத்தொகை | தனவந்தர் |
| வசந்தம் | கற்பகம் | கப்பல் | பருவம் | விவசாயம் | ஆகாயம் | ஆரம்பம் | புலம்பல் | தீத்தம் | குடும்பம் | வதனம் |
| கம்மல் | பல்லாக்கு | தருணம் | சந்தனம் | பலமான | வானவில் | வாரம் | பகட்டு | பராக்கு | ஆதாரம் | வடகம் |
| மல்லாகம் | விவாகம் | காவற்காரன் | ஆவனம் | களிப்பு | விவகாரம் | சந்தம் | புரதம் | பரமன் | சன்னம் | இருப்பு |
| தரித்திரம் | பித்தன் | விளக்கம் | மங்களம் | புலவர் | களத்தில் | தானியம் | தம்பதிகள் | கலப்பு | தகவல் | வத்தல் |
| பிந்துதல் | விம்பம் | களிம்பு | கலகம் | தம்பதி | வம்சம் | சுத்தம் | விகடன் | சுருங்கல் | பங்கம் | வாகனம் |
| பின்னம் | வணக்கம் | கும்பல் | குருபரன் | சபதம் | பிரம்பு | உள்ளம் | வெள்ளம் | கள்ளர் | குள்ளர் | கள்ளம் |
| கிள்ளல் | தகனம் | இருட்டு | உள்ளார் | களகம்* | இகழ்தல் | புகழ்தல் | இகழ்ச்சி | தரகர் | கல்லூரி | பரிசம் |
| இல்லம் | கலாபம்* | புல்லூநர்* | ஆம்பல் | சிதறல் | கொல்லல் | தைமாதம் | புஸ்பம் | பஞ்சம் | ஆகமம் | சலபம் |
| பக்கம் | தடம் | புரம் | இவள் | திடம் | விரல் | குடில் | நிழல் | நிஜம் | சுபம் | பழம் |
| தாபம் | அகம் | குதிரை | உள்ளி | புயல் | புள்ளி | வரம் | மதன் | பின்பு | தனம் | பதம் |
| பரிசு | தாரம் | பயளி | சதையம் | கம்பர் | உரல் | கபடி | வளம் | தவிடு | திரவம் | நிலம் |
| தவப்புதல்வன் | | பிரிந்தாவனம் | | | | | | | | |

பெயர்: ..............................

முகவரி: ..............................

..............................

..............................

பிறந்த நாள்: ..............................

சந்தாதாரராயின் சந்தா எண்: ..............................

கலைந்த சொற்கள் எண்-42 இற்கான விடைகள் வந்துசேர வேண்டிய கடைசி நாள்: **12.11.1999**

(போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)


விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி:

கலைந்த சொற்கள்

**Eelamurasu**

**22, Rue Perdonnet, 75010 Paris, France**

# கலைந்த சொற்கள் எண்–41 விடைகள்



ஈழமுரசின் சென்ற எண் கலைந்தசொற்கள் பகுதிக்கு 130 இற்கும் மேற்பட்ட வாசகர்கள் விடையெழுதி அனுப்பியிருந்தார்கள். அவர்களில் சரியான விடையெழுதிய வாசகர்களில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து வாசகர்களின் விபரங்கள் வருமாறு.

1) திலீபன் செல்வகுமாரன்
74523 Schwabisch Hall,
Germany.

2) திருமதி சியாமளா விஸ்வராஜா
1700 Fribourg,
Swiss.

3) திருமதி பாமினி கிருஷ்ணகுமார்
Middx UB2 5QE,
UK.

4) ஜேம்ஸ் ஜெஸ்லின் டெல்பின்
78570 Chanteloupples Vignes,
France.

5) S. சிவகுமாரன்
93600 Aulnay Sous Bois,
France.

இவர்களுக்கு ***Lune International*** நிறுவனத்தினரால் பெறுமதி மிக்க நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.

இந்தக் கலைந்த சொற்கள் எண்-42 இற்கான சரியான விடையும், கலைந்த சொற்கள் எண்- 43ம், 18 - 24 நவம்பர் 99 ஈழமுரசில் வெளிவரும்.

* இவ்வடையாளம் இடப்பட்ட சொற்களுக்கான விளக்கம்

கலாபம் – மயிற்றோகை

புல்லூநர் – சினேகிதர்

களகம் – பெருச்சாளி

தயாரிப்பு: சவேயூ சவுந்தரராஜா

NÆRKØB -DKS Video

Danmark பதறேஸ்சியா
மாநகரில் (Nærkøb) நியர்குய்ப் DKSVideo
ஸ்தாபனத்தாரின் மற்றும் இரு சேவைகள்

இடமாற்றம் 01.09.99 முதல் NÆRKØB ரவல்ஸ் கூ Mony Exchence

புதிய முகவரி

NÆRKØB ரவல்ஸ் 5
Vestcenter, Venvsvej-10, 7000 Freclericia, Danmark.
தொலைபேசி: 75915840 -75915841 / Fax: 75915842

Nærkøb Travels®

Nærkøb Tvavels புதிய நவீன படுக்கை வசதிகள் கொண்ட பஸ்சேவை - வாரம் 3 நாட்கள்

| | ஒருவழி | இருவழி |
|---|---|---|
| Danmark - London- | 540Kr | 890Kr |
| Danmark - Paris | 358Kr | 574Kr |
| Danmark - Hambvrg | 205Kr | 327Kr |

இலையுதிர்கால மலிவு பயணச்சீட்டுகள் October கடைசிவரை பாரிஸ் சென்று அதே பஸ்சில் திரும்பிவர 398 Kr மட்டுமே
பிரான்ஸ் நாட்டில் இருக்கும் டிஸ்னிலான்ட் (Disnny Land Paris) சென்று திரும்பிவர 6.78 Kr மட்டுமே
2 வயதிற்குமேல் 12 வயதுக்குட்பட்டவருக்கு 598 Kr மட்டுமே
உடன் தொடர்புகொண்டு ஆசனங்களைப் பதிவு செய்துகொள்ளுங்கள்: 75915840 - 75915004
Fax 75915842 Fax 75915806

Nærkøb Money Transfer

15 நிமிடங்களுக்குள் உங்கள் பணத்தை அன்றைய வங்கி மதிப்பின்படி உலகில் எந்த இடத்துக்கும் கொடுக்கவோ/ பெற்றுக்கொள்ளவோ முடியும்.
இந்த Money Exchange அரச அங்கீகாரம் பெற்ற ஒரு நிறுவனம் என்பதை மிக மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறார்கள்.

இவ்வாரம் முதல் Okotober 30ª திகதி வரை
மலிவான விமானப் பயணச்சீட்டுக்கள்.
Copenhagen - Colombo - 3,200 Kr மட்டும் (Tax 165 Kr)
Copenhagen - Colombo - India (திருவனந்தபுரத்திற்கு) - 3800 Kr + Tax 185 kr

# வங்கச் சிங்கம் -1

## சுபாஸ் சந்திரபோஸ்



**1947 ஒகஸ்ட் 15-ம் திகதி இந்தியாவின் மூவர்ணக்கொடி கம்பீரமாக ஏறியபோது குடியேற்றவாத ஆதிக்கத்திலிருந்து இந்தியா சுதந்திரம் பெற்ற மகிழ்வினை மக்கள் மகிழ்வுடன் வரவேற்றனர்.**

**சுதந்திரத்திற்கு மகாத்மா காந்திதான் காரணமென பலரும் நம்பினர். ஆயினும் இந்தப் பெருமைக்கு வங்கச் சிங்கம் சுபாஸ் சந்திரபோஸ் என்ற வீரனும் காரணமென்பதை அப்போது பலர் அறியவில்லை. இந்திய மாதாவின் சுதந்திரத்திற்காக இந்த வீரன் அனுபவித்த இன்னல்கள் கொஞ்சநஞ்சமல்ல, தனிமனிதனாக நின்று இந்திய தேசிய இராணுவத்தை ஒரு குருவி தானிய மணிகளை பொறுக்குவதுபோன்ற பொறுமையுடன் அவர் உருவாக்கியதும் உலகப்போராட்ட வரலாற்றில் தன் பதிவினை விட்டுச்சென்றுள்ளது. அந்த வீரனின் வரலாறு ஈழமுரசின் வாசகர்களுக்காக இதோ வருகிறது. வாரா வாரம் இது தொடரும். – ஆர்**

### சுபாஷின் பிறப்பு

வங்காளத்தில் 24 பர்கானாக்கள் என்ற மாவட்டத்தில் இருப்பதுதான் 'கோதாலியா' என்ற சிற்றூர். இவ்வூரில் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவரே ஜானகிநாத். தம்முடைய கடின உழைப்பாலும் அயரா முயற்சியாலும் கல்வி கற்று, கட்டக்கில் வழக்கறிஞராகப் பணியாற்றி வந்தார். இவரது அருமையான மனைவி பிரபாவதி அம்மையார். இவ்விருவருக்கும் இரண்டாம் குழந்தையாகப் பிறந்தவரே சுபாஷ்.

குழந்தை இளமையிலேயே துருதுருவென்று இருந்தது. எதையும் நன்றாக உற்றுநோக்கி வந்தது. ஏன் என்று கேள்விகளைக் கேட்டது. ஒன்றைச் சொன்னால் அதை மறக்காமல் நினைவில் வைத்திருந்தது. இந்தக் குழந்தை எதிர்காலத்தில் மிகப்பெரிய அறிவாளியாக வரலாம் எனப் பெற்றோர் எதிர்பார்த்திருந்தனர். அறிவாளியாக மட்டுமின்றி அரசியல்வாதியாகவும் அக் குழந்தை எதிர்காலத்தில் நிகழ்ந்தது என்பதுதானே உண்மை.

குழந்தை சுபாஷுக்குக் கதை கேட்பதில் பெரு விருப்பம். தாய் பிரபாவதியை எப்போதும் நச்சரித்துக் கொண்டிருப்பான். இதற்காக அவர் எப்போதும் கதை தயார் பண்ணவேண்டி இருந்தது. இராமாயண, மகாபாரதக் கதைகளையும், வேறு சில புராணங்களிலிருந்து பல கதைகளையும் நாள்விடாமல் சொல்லிக்கொண்டிருந்தார்.

மராட்டியத்தில் கணபதிக்கு [விநாயகர்] எவ்வாறு முக்கியத்துவம் அளித்து வருகின்றனரோ அவ்வாறே வங்கத்தில் காளிதேவிக்கு முக்கியத்துவம்.

இப்படிப் பார்க்கப் போனால் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு கடவுளுக்கு முக்கியத்துவம். இவையனைத்தும் ஒன்று சேர்ந்துதான் இந்தியப் பண்பாடு உருவாகியுள்ளது. வங்கத்தின் காளிதேவியையும் மராட்டியத்தின் கணபதியையும் தமிழர்களாகிய நாம் மறக்கவில்லை; மறுக்கவும் இல்லை, அக்கடவுள்களைப் போற்றி வழிபட்டு வருகின்றோம். இத்தகைய ஒற்றுமையும் உயர்ந்த செயல்பாடுமே வேற்றுமைகொண்ட இந்தியப் பூமியில் ஒற்றுமை எண்ணத்தை விதைத்துக் கொண்டிருப்பதாக அறிஞர்கள் கூறுகின்றனர்.

அன்னை பிரபாவதி காளிதேவியின் வீரத்திருவிளையாடல்களையும் மகன் சுபாஷுக்கு எடுத்துரைத்துவந்தார். இது, இளம் வயதிலேயே சுபாஷின் மனத்தில் கடவுள் பக்தியை உண்டாக்கியதோடு வீர உணர்வுகளையும் உண்டாக்கியது.

### சிறார் மனநிலை

இளஞ்சிறார்களுக்கு நாம் எதைச் சொல்லிக்கொடுக்கிறோமோ அதுவே நன்கு பதியும். சிறிய வயதிலேயே குழந்தைகளிடத்தில் பேய் இருக்கிறது. பிசாசு இருக்கிறது. அங்கே போகாதே; இங்கே போகாதே என அச்சமூட்டும் செயலில் இறங்குவோமேயானால், அந்தக் குழந்தை வளர்ந்து பெரியவன் ஆன காலத்திலும்கூட அச்சப்பட்டே வாழ்க்கை நடத்திக்கொண்டிருப்பான். ஒருவித கோழைத்தனம் குடிகொண்டிருக்கும். அவனால் நாட்டிற்கும் வீட்டிற்கும் எந்த நற்செயலையும் செய்ய இயலாது. 'வீரன் ஒருமுறை சாகிறான்; கோழை பலமுறை சாகிறான்' என ஒரு மேலை நாட்டுச் சான்றோர் கூறிய நிலைதான் உண்டாகும். அதனால், குழந்தைகளிடத்தில் நல்லதையே சொல்லவேண்டும். எதிர்காலத்திற்கு ஏற்றம் தரக்கூடியதையே சொல்லவேண்டும். இது பெற்றோர் ஒவ்வொருவரின் கடமை ஆகும்.

### ஆங்கிலக் கல்வி

குழந்தை சுபாஷுக்கு உரிய பருவம் வந்ததும் அவரை கட்டக்கில் உள்ள ஐரோப்பியப் பள்ளி ஒன்றில் சேர்த்தனர். தந்தை ஜானகிநாத் 'கல்வியே மனிதனுக்குக் கண்' என்பதை உணர்ந்தவர். சில காலம் கட்டக்கின் நகராட்சி மன்றத் தலைவராக இருந்து கல்வியை வளர்க்க அரும்பாடுபட்டவர். தமது உயர்ந்த வாழ்க்கை நிலைக்குத் தாம் கற்ற கல்வியே காரணம் என்பதை உணர்ந்தவர். அதனால் சுபாஷுக்கு உரிய பருவம் வந்ததும் கொஞ்சமும் 'காலம்' கடத்தாமல் பள்ளியில் சேர்த்துவிட்டார்.

அந்தக் காலத்தில் இந்தியர்கள் கல்வி நிறுவனங்களை நடத்த முன்வரவில்லை. ஆங்காங்கே சில திண்ணைப் பள்ளிக்கூடங்களே இருந்து வந்தன. அந்தத் திண்ணைப் பள்ளிக்கூடங்களிலும் வேதம், ஆகமம், சாஸ்திரம் என்ற மரபுவழிக் கல்விகளைத் தவிர வாழ்க்கைக் கல்வி என எதுவும் கற்றுக்கொடுக்கப்படவில்லை. இக்கல்வி நிலையங்களில் பயின்றவர்கள் கோயில்களில் பூசாரிகளாகவும், மடங்களில் தலைவர்களாகவும் ஆனார்களே அன்றி வேறெதுவும் செய்யவில்லை.

அன்றைக்கு நம் நாட்டை ஆண்டுவந்த ஆங்கிலேயர்களே வாழ்க்கைக்குப் பயன்படும் கல்வியைக் கற்றுக்கொடுத்து வந்தனர். இக்கல்வியைக் கற்றோர் அரசாங்கப் பணிகளில் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். இக்கல்விக்கு ஐரோப்பியக் கல்வி என்பது பெயர். இந்நிறுவனங்களை ஐரோப்பியர் சிலரும் அவர்களைப்போல் ஆங்கிலம் பயின்ற இந்தியர் சிலரும் நடத்தி வந்தனர். இக்கல்வி நிறுவனங்களில் ஆங்கிலமே பாடமொழியாக இருந்து வந்தது. இத்தகு பள்ளி ஒன்றில்தான் சுபாஷ் சேர்க்கப்பட்டார்.

### தொண்டு மனம்

இவர், அந்தப் பள்ளியில் நான்காம் வகுப்புப் படிக்கும்போது ஓர் அசாதாரணச் செயலில் இறங்கினார். பக்கத்து ஊரில் வாந்திபேதி, அந்நோய் வந்துவிட்டது என்றால், ஊரைக் காலி செய்துவிட்டு உயிர் பிழைக்க ஓடுவதைத் தவிர வேறு வழி இல்லை. ஏனெனில் வாந்திபேதி நெருப்பைவிடக் கொடியது. ஒருவரைப் பிடித்துக் கொண்டால் அருகில் நிற்கும் எவரையும் உடனே பிடித்துக்கொள்ளும்.

இன்றைய நிலையில் உலக அளவில் வாந்திபேதி தடுக்கப்பட்டுவிட்டது. அன்றைக்கு இந்நோய்க்குச் சரியான மருந்தே இல்லை. ஊர் ஊராக மக்கள் ஒரே நேரத்தில் நூற்றுக் கணக்கில், ஆயிரக் கணக்கில் இறந்துபோவர், இதனால், ஊரில் நோய் பரவுவதை அறிந்ததும் ஒவ்வொருவரும் தப்பிக்க எண்ணுவரே அன்றி நோய் கண்டவர்க்கு உதவி செய்யவோ இறந்து போனவர்களை எடுத்து அடக்கம் செய்யவோ எவரும் முன்வரமாட்டார்.

பக்கத்துக் கிராமத்தில் வாந்திபேதி பரவி இருப்பதும், நோயாளிகளுக்கும் இறந்து போனவர்களுக்கும் உதவி செய்ய ஆளின்றி அந்தக் கிராம மக்கள் அல்லற்பட்டுக்கொண்டிருப்பதும் சிறுவன் சுபாஷுக்குத் தெரிய வந்தது.

'இளங்கன்று பயம் அறியாது' என்பதுபோல அல்லற்படும் அவ்வூர் மக்களுக்கு உதவி செய்ய எண்ணியது சுபாஷின் மனம். நான்கு பள்ளித் தோழர்களைத் தம்முடன் அழைத்துக்கொண்டு அவ்வூருக்குச் சென்றுவிட்டார். எண்ணிப் பார்த்தால் இந்த ஒன்பது வயதுச் சிறுவனால் என்ன உதவி செய்ய முடியும்? ஒரு நோயாளியை–ஒரு பிணத்தைத் தூக்க முடியுமா? எடுக்க முடியுமா? இந்த வயதில் இருக்கும் உடல் பலத்தில் எந்த உதவியைச் செய்ய முடியுமோ அந்த உதவியைச் செய்ய முடிந்தால்போதும் என்பதுதான் நோக்கமாக இருக்கும் போலும்! இதற்கெல்லாம் காரணம் அவரது பிஞ்சு மனத்தில் கொழுந்துவிட்டுக் கிளம்பிய 'மனிதாபிமானமே' எனில் மிகையாகாது.

பள்ளிக்குச் சென்ற பையன் வீடு திரும்பவில்லை. பெற்றோருக்கு எப்படி இருக்கும்? தெரிந்த இடங்களில் எல்லாம் தேடினார்கள்; உற்றார் உறவினர் இல்லங்களுக்கு எல்லாம் ஆள் அனுப்பினார்கள். வீடு சோகக்கடலில் தவித்தது. தாய் பிரபாவதி ஒப்பாரி வைக்கத் தொடங்கினார். ஒருநாள் இருநாள் என மூன்று நாட்கள் ஓடிவிட்டன.

(தொடரும்)

## கிடைக்கப்பெற்றோம்




### கனவு இதழ் -33

இச்சிற்றிதழில் சிறு கதைகள் கட்டுரைகள் பெண்ணியற் கவிதைகள் ஆகியன இடம்பெற்றிருக்கின்றது.

### கவிஞர் வா.ஐ.ச. ஜெயபாலலின் ஈழத்து மண்ணும் எங்கள் முகங்களும்

அறுபதுகளின் இறுதிக்காலம் முதல் கவிதை எழுதும் கவிஞர் என்பதால் தனது கவிதை மொழிப் பயிற்சித் தளத்தில் செழுமையுற்றிருப்பது தெரிகிறது. சில கருத்துக்கள் விமர்சனத்திற்குரியதாக்கப்பட வேண்டியதாக இருக்கின்றது. காந்தளகம் பதிப்பகத்தின் வெளியீட்டில் விளைந்தது இந்நூல்.






### புது நகர் செல்லத்துரையின் திவ்யா

பலநாடுகளிலும் பரந்து வாழும் இளைய சந்ததியினரின் கவிதைகளைக்கொண்ட தொகுப்பு இது. சில கவிதைகளுக்கு பிரெஞ்சு மொழியாக்கமும் காணப்படுகின்றது. இடையிடையே எமக்குப் பழக்கப்பட்ட சிலரது கவிதைகளும் தெரிகின்றன. புத்தகத்தின் பெறுமதி என்று பார்ப்பதைவிட தொகுப்பாளரின் இந்தத் தேடல் முயற்சியைப் பாராட்டலாம்.

வெளியீடு:
தமிழர் கலை கலாச்சார மாமன்றம்
சேர்ஜி பொந்துவாஸ் பிரான்ஸ்


## A.S.C.E.S இன் புதியவகுப்புகள்

14 ஆசிரியர்களின் கல்வி புகட்டலால் எமது மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெறுகின்றனர்

பாடசாலை மாணவர்களுக்கான வகுப்புகள் நடைபெறும் ஒரே பாடசாலை
bio,chimie,maths,tamoul,anglais,français,histoire etc
dictée, orthographe, résumé, expression écrite வீட்டுப்பாடங்கள் செய்ய கூடுதல் விளக்கம் பெற உதவி செய்யப்படும் சனி பி.ப 1.30 மணி - ஞாயிறு காலை 10 மணி

**பிரஞ்சு**
06.11.99 சனி பி.ப 1.30 மணி 24.10.99 ஞாயிறு காலை 10.00 மணி
07.11.99 ஞாயிறு பி.ப 1.30 மணி
08.11.99 திங்கள் பி.ப. 3 மணி
02.11.99 செவ்வாய் பி.ப.3 மணி 4.30 மணி
10.11.99 புதன் பி.ப 3மணி பி.ப. 4.30 மணி

பிரஞ்சு கற்க சிறந்த கை நூல் நடைமுறை பிரஞ்சு

**ஆங்கிலம்**
Cambridge,Toefl பரீட்சைகளுக்கும் பாடசாலை மாணவர்களுக்குமான வகுப்புகள்
06–07.11.99 சனி காலை 10 ஞாயிறு காலை 11 பி.ப 1.30மணி–3.30 மணி

**கம்பியூட்டர்**
windows95/98,word,excel,access,winNT4
பாகங்கள்பொருத்த –வாங்க ஆலோசனை
06–07.11.99 சனி–ஞாயிறு காலை 10 மணி பி.ப 1.30 மணி 3.30 மணி

**சிறுவர்க்கான தமிழ் - பிரஞ்சு - கணித - ஆங்கில வகுப்புகள்**
பிரதி சனி பிற்பகல் 1.30மணி முதல்

**நடன வகுப்புகள்** ஞாயிறு பி.ப 1.30மணி
தையல் கேக் அலங்காரம் : சனி பி.ப 2 மணி 3.30மணி
சங்கீத வயலின் ஓர்கன் வகுப்புகள்
சனி ஞாயிறு 10 மணி திங்கள் புதன் 3.30 மணி

சனி ஞாயிறு வகுப்புகள் நடைபெறும் இடம்
41, rue Didot 75014 Paris M° Pernety Dir N° 13
Tél 01 42 57 23 56
திங்கள் செவ்வாய் புதன் வகுப்புகள் நடைபெறும் இடம்
2,rue Esclagnon 75018 Paris M° Porte de Clignancourt

### நித்தி வாகன சேவை

உங்களின் வீட்டுத் தளபாடங்களை பெரிய 20M³ வாகனத்தில் பாதுகாப்பாக ஒரே தரத்தில் ஏற்றி இறக்கவும் மற்றும் வூர்த், ஐரோப்பிய நாடுகளுக்குமான வாகன தேவைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.



நித்தி:
0148050214
0613342518
0607348051 / 0148385825

Pub Fr

### கீபோட் வகுப்புகள்

குறுகிய காலத்தில் சர்வதேச முறையில்
*(Intenrnational Method)*
கீபோட் கற்பிக்கப்படும்.
சனி, ஞாயிறு, புதன், வியாழன்
ஆசிரியர் S.S. தில்லைச்சிவம்
56, Rue Riquet, 75019 Paris (M°: Riquet)
Tel: 01-40 37 56 69

### ரவி வாகன சேவை

உங்கள் அனைத்து வாகனத் தேவைகளுக்கும் நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியது

தொலைபேசி: 0148765190
0607622689



Pub Fr

### தென்றல் இல்லம்

உங்கள் இல்லங்களில் நடைபெறும் வைபவங்களுக்கு வேண்டிய அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்வதுடன், சுவை மணம் குன்றாத உடன் கோப்பித்தூளும் பெற்றுக்கொள்ள



60, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle
Tel: 01 42 09 36 09

Pub Gra

### P.S வாகன சேவை

உங்கள் தேவைகளுக்கு 24 மணி நேர சேவை
தொடர்புகட்கு:
ஜேர்மன் - T.P: 01717489297
பிரான்ஸ் - T.P: 0164721143
கொர்னலியூஸ் (Cornelius) குமார்



Pub Fr

### Lune

ELECTRONIQUE INFORMATIQUE

05, Rue Perdonnet, 75010 Paris.
Tel & Fax: 01 53 26 76 70



3490F TTC

**Processeur AMD K6 11 350 Mhz**

Carte Mère PC 100
- Carte Video 8 Mo AGP
- Carte Son PCI Sound Pro

Disque Dur 4,3 Go Ultra DMA
SDRAM 32 Mo PC 100
Lecteur CD ROM 40x
Lecteur Disquette 3,5"
Ecran 15" MPR II
HP PMPO 160 W
Clavier 105 Touches PS/2
Souris PS/2
Botier Alim Moyan Tour AT

GARANTIE 2 ANS

### உங்கள் வீடுகள், வர்த்தக நிலையங்களில் சகல விதமான திருத்த வேலைகளுக்கும் காத்திருக்கின்றார்கள்.

## `VICTOR SARL'

கட்டட, மின்சார, தண்ணீர், கழிப்பறை திருத்த வேலைகளை மிகக் குறைந்த கட்டணத்துடன் திறமையான தொழிலாளர்களைக்கொண்டு அமைத்துக்கொள்ள

**VICTOR SARL**
43, Rue de la Reunion, 75020 Paris
Tel: 01 44 93 90 30

### சிவாசினி வாகன சேவை

*Chivashini Transport*

வாகன தேவைகளுக்கு 24 மணி சேவை
தொடர்புகட்கு:சிவாஜினி வீடியோ

06 14 61 69 84
01 42 09 23 59
01 49 37 26 03
01 42 05 44 04



Pub Fr

# அனைவருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்

இது போலியானது




**AYNGARAN INTERNATIONAL**
Unit 19 Riverside Business Park
Lyon Road, Wimbledon
London SW19 2RL
United Kingdom
Web http://www.ayngaran.com
E-mail: sales@ayngaran.com
Tel. +44 (0)20 85434477
Fax +44 (0)20 85434465

எங்கள் அன்பான ரசிகபெருமக்களுக்கும்! அதரவாளர்களுக்கும்!
அன்பான வெண்டுகோள்.

இவ்விளம்பரத்தில் உள்ள நிறுவனத்திற்கு ஐங்கரன் வெளியீடுகள் விநியோகிப்பதில்லை! அங்கு ஐங்கரன் முத்திரையுடன் விற்பனையாபவை அனைத்தும் போலியானவை என்பதை அறிய தருகிறோம்.

போலிகளை வாங்கி ஏமாறாதீகள்.

உங்கள் அன்பையும் அதரவையும் என்றும் மறவாத ஐங்கரன் ஸ்தாபனத்தார்.

**எங்கள் அன்பான ரசிகப் பெருமக்களுக்கும்! ஆதரவாளர்களுக்கும்!**
**அன்பான வேண்டுகோள்.**

இவ் விளம்பரத்தில் உள்ள நிறுவனத்திற்கு ஐங்கரன் வெளியீடுகள் விநியோகிப்பதில்லை! அங்கு ஐங்கரன் முத்திரையுடன் விற்பனையாபவை அனைத்தும் போலியானவை என்பதை அறியத்தருகின்றோம்.

**போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள்.**

*உங்கள் அன்பையும் ஆதரவையும் என்றும் மறவாத ஐங்கரன் ஸ்தாபனத்தார்.*

Pub.

# தமிழர் நடந்த பாதை

**16**

## தமிழோடு தமிழாய் வாழும் ஆபிரிக்க மொழிகள்-4



செனகல் நாட்டின் ஒலாப் மொழி தமிழோடு உறவுடையதாய் இருப்பதற்கு மேலும் சில சான்றுகளை முந்தைய தொடர் ஒட்டி இங்கு காண்போம்.

| தமிழ் | ஒலாப் |
|---|---|
| ஒன்று (ஒண்ணு) | enn'one' |
| இரு (இரண்டு) | yar-'two' |
| நான்கு | nen-t-'four' |
| ஐ(கை) | jvy 'five' |
| பத்து | fukk 'ten' |
| நாழி (அளவுப்பெயர்) | nak to 'measure' |
| முடிவு | muc'end' |
| கட்டை | gatt- ai-'shortness of stature' |
| கண்டன் (கந்தன்) (வலிமையானவன்) | ngand-at 'storng male person' |
| நொய்(மெல்லியது) | noy 'soft' |
| குட்டம் (ஆழமான நீர்நிலை) | Khotai 'depth' |
| சவலை (இளைத்தல்) | sew 'emaciated' |
| வாரி (நீளம், மிகுதி) much,many | bari 'to be numerous; |
| சூர் (மிகுதிப் பொருள்) | gurr to be abundant |
| கேணன் (அறிவற்றவன்) | kann-asu 'crazy;to be crazy |
| துவை (தோய்) | toy 'to be or become wet' |
| நெய்(குழைவானது) | ney to be affected by unctousr substance' |
| பேய் | pec 'demoness' (in folk songs) |
| நோன்புக்கயிறு | ndombokhir (a sacred string tied round the upper arm (or the waist) toward off evils (as an amulet) |
| காப்பு நாண் | khapp 'an amulet toward off evils' |
| ஆண்டாண்டு | at-o-at every year' |
| நாகு | nak `cow' |
| பரி | par 'a variety of horse' |
| குட்டி | kut-i-young dog |
| கூண்டு | gun-u- 'hen-coop' used asan archaic plusal) |
| தோகை | dunkhkh;plumage' |
| நீலம் | (black & blue) nul 'black' |
| செய்ய (சிவப்பு) | coyy 'to be red' (Speciffic adverb) |
| புகர் | (Tawny colour) 'brownish:yellow' |
| சங்கிலி | jeng 'chain for tying' |
| பிசு பிசு எனல் | wic wic-al- 'to drizzie' |
| வயல் | bayal 'open space' |
| கன் | kan 'small hole in the ground' |
| பொட்டு | bett 'to hole' |
| பிறை | wer 'moon;cresent moon' |
| சாய் (to die) (சாய்வு-சாவு | say 'to die used for kings' |
| மண் | ban 'clay,mud' |
| புண் | wunn, 'verb used for an old sore which reopen's) |
| வயிறு | bir-belly;pregnancy; interior' |
| மூட்டை (bag) | m bott-a 'leathers bag (small one) |
| தொடு | tot 'to tounh with hands;to catch a thief |
| சீரை (மரப்பட்டை, ஆடை) | ser 'females garment' (generally not sewed) |
| கழுதை | gëdd-e 'donkey' |
| குத்து | khett 'to pierce' |
| குட்டு | khët 'to blow with the plim of the hand |
| கிட்டுதல் | khëcc 'to draw near' |
| ஆதிவாரம் (sunday) | diber |
| ஈனு (to bear) | en-u 'to bear' |
| உண் | onn(a) 'to swallow;to eat' |
| சக்கை (அழகு) | jekk-a- 'handsome' |
| வவ் (barking) | baw 'to bark' |
| விரி | firi 'to unfold;to untie as dresses of a woman |
| விசி (கட்டுதல்) | fic 'to bind,to tie' |
| அங்காத்தல் (வாய்திறத்தல்) | na 'to open the mouth' |
| யானை | nei 'elephant' |
| ஓட்டு | ottu 'to give away; to stap sside' |
| பாரிய | bari 'to be numerous;much' |
| கணை (இரும்புக்கருவி) | gana-ai-any weapon' |
| கன்னம் | kan-am 'face (the two cheeks) |
| மட்டு (அளவு) | mat-a 'a standard of measurement' |
| துப்பல் | tuf-li- 'to spit' |

நூற்றுக்கும் குறையாத சொற்கள் இதுவரை தமிழுக்கும் ஒலாப்மொழிக்கும் பொதுவாய் இருப்பதைச் சென்ற தொடரிலும் இந்தத் தொடரிலும் ஆக இரண்டிலும் கண்டோம். செனகல் நாட்டு முனைவர் சேக் திடனிதியே இந்த ஆய்வின் மூலம் கண்ட முடிவான கொள்கை என்ன? இவர் தமிழரின் பிறந்தகம் என நம்பப்படுகின்ற குமரிக்கண்டக் கொள்கையை ஒத்துக்கொள்கின்றாரா? தமிழும் தமிழினமும் குமரிக் கண்டச் சிதைவின்போது கிழக்கு நோக்கி ஆத்திரேலியாவிற்குள்ளும் மேற்கு நோக்கி ஆபிரிக்காவிற்குள்ளும் சென்று புகுந்தன என்பதை ஆய்வேட்டில் மதிப்பீடு செய்துள்ளாரா. அவ்வாறு ஒரு கருத்து மேற்சொன்ன ஆய்வேட்டின் மூலம் சொல்லப்பட்டிருப்பின் அது தமிழின் முதன்மையைக் கண்டறிந்த பெருமைக்குரியதாகியிருக்கும். ஆபிரிக்காவில் நம் செலவை இன்னும் சிறிது தொடர்வோம்.

*(வளரும்)*

பேரா.கு.அரசேந்திரன்

ஜேர்மனி பொன் (Bonn) நகரில்

யாழ் ரவல்ஸ்

YARL TRAVELS

*Thomas Mann Str 21,53111 Bonn*

உலகின் எப்பாகங்களுக்கும் மலிவு விலையில்

பிரயாணச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்

சிறிலங்கா, இந்தியா, சிங்கப்பூர், கனடா

ஆகிய நாடுகளுக்கு விசேட சலுகைகள்.

தொலைபேசி இலக்கம்: 0228/9652885 – தொலைநகல்: 0228/9652985

GE-Pub.

# நோயற்ற வாழ்வே...

## கவலைப்படுவதே நோய்களின் மூலகாரணி

உடல் நலமும் நல்ல உற்சாகமான மனநிலையும் தேவை என்றால் முதலில் கவலைப்படுவதை நிறுத்திக்கொள்ளுங்கள்.

எப்படிப்பட்ட நோயும் கவலைப்படாமல் அமைதியாக இருந்தால் நமது அமைதியே உடல் அணுக்களில் பரவி நோய்களைக் குணமாக்கிவிடும். பிரச்சினைகளுக்கு எளிதாகத் தீர்வினைக்கொண்டு வந்துவிடும்.

இந்த முறையைப் பின்பற்றினால் எளிதாகக் குணம் பெறலாம். மருந்துகள் மீது உள்ள நம்பிக்கை அதிகமாவதைவிட, நம் உடல் தானாகவே குணப்படுத்திக்கொள்ளும் சக்தியுடையது. அது நன்றாகக் குணமாகிவிடும் என்று மனப்பூர்வமாக ஒரு இம்மியளவுகூட சந்தேகம் இல்லாமல் முழுமையாக நம்பினால் முற்றிலும் குணமாகிவிடும். எனவே, மகிழ்ச்சியாக வாழுங்கள்.

இந்த உண்மைகளை ஆஸ்திரிய மனோதத்துவ வைத்தியரான ஆல்பிரட் ஆட்லர் கண்டுபிடித்து நிரூபித்தும் காட்டினார். கவலையினால் இதயநோய், புற்றுநோய் மட்டுமல்ல மூட்டுவலி, தலைவலி, இளமையிலேயே முதுமை, வயிற்றுக்கோளாறுகள் முதலியன வருகின்றனவாம்.

உங்களுக்கு எப்படிப்பட்ட பிரச்சினைகள் இருந்தாலும் கவலைப்படாதீர்கள். நம்பிக்கையுடன் அனைத்தும் சரியாகிவிடும் என்று நம்புங்கள். கஷ்டங்கள் அகலும் என்றும் நம்புங்கள்.

இத்துடன் உங்கள் நோயையும் அகற்றும் மனதையும் அமைதிப்படுத்தும் சில உணவு மருந்துகளையும் பின்பற்றுங்கள்.

பாண் காலையில் சாப்பிடுங்கள். இல்லையெனில் கைக்குத்தல் அரிசி, கோதுமை உப்புமா சாப்பிடுங்கள், டிரைப்டோபன் என்ற அமினோ அமிலம் மூளைக்குப் படுவேகமாகச் செல்லவும் செய்தி சொல்லவும் தவிடு நீங்காத இந்த தானிய உணவுகள் உதவுகின்றன. இதனால் மூளையும் மனமும் அமைதியடைகின்றன. நோய் தானாகக் குணமாக உடலில் சூழ்நிலைகள் உருவாகின்றன.

தோடம்பழம் தவறாமல் சாப்பிடவும். இதில் உள்ள பொட்டாசியம் உப்பு, அடிக்கடி மூளைக்குக் கண்ட கண்டக்கவலைகளையும் தெரிவிக்கும் மின் ஆற்றல் போன்ற தடிப்புகள் கொண்ட நரம்புகளைக் கட்டுப்படுத்தி, மனதை எப்போதும் சாந்தமாக வைத்திருக்கும்.

இதே நன்மைகளை வாழைப்பழம், பாற்கட்டி, பால், வேர்க்கடலை மற்றும் பருப்பு வகைகளும் செய்கின்றன. குறிப்பாக வாழைப்பழமும் பாலும் தினமும் சாப்பிட்டு, மூளைக்குக் கவலைகளைத் தெரிவிக்கும் நரம்புகளைக் கட்டுப்படுத்துங்கள்.

சட்டென்று குணம் மாறி 'வள் வள்' என்று விழுதல் என்பது, கவலையான பின்னணியின் வெளிப்பாடே. விட்டமின் பி(B) குறைந்தாலும் எளிதில் கோபம் கொள்ளுதல் அதிகரிக்கும். இதனால் நரம்புகள் பலவீனமாகும். கவலைகளால் புதிய நோய்கள் உண்டாகும். எனவே இவர்கள் உருளைக் கிழங்கைத் தவறாமல் உணவில் சேர்க்கவேண்டும். அசைவம் எனில் மீன் நல்லது. இந்த விட்டமின் மீனின் மூலம் நன்கு கிடைக்கும்.

உணர்ச்சிக் கொந்தளிப்பால் உடலும் மனமும் சோர்வடையும் சிலருக்கு மூளைக்காய்ச்சல் கூட வரலாம். தயாமின் என்ற பி விட்டமினை அதிகமுள்ள அரிசி, மீன், அவரை, சூரியகாந்தி விதைகள் மற்றும் விட்டமின்களும் தாது உப்புக்களும் நன்கு சேர்த்துப் பலப்படுத்த, அவரை மாவு வகைகளையும் ரொட்டி வகைகளையும் உணவில் சேர்க்கவும்.

மக்னீசியம் குறைந்தால் உடலும் மனமும் கடும் சோதனையில் இருக்கின்றன என்று பொருள். இவர்கள் வைத்தியர்களையும் மாற்றுவார்கள். இவர்கள் சோயா மொச்சையையும் வாழைப்பழத்தையும் தவறாமல் உணவில் சேர்க்கவேண்டும். மதியம் பசலைக்கீரை அல்லது தண்டுக்கீரை சேர்க்கவேண்டும். இவற்றில் இருந்து கிடைக்கும் மக்னீசியம் உணர்வுகளைச் சமநிலைப்படுத்தும். இதனால் நோய்களும் குணமாகும்.

தினமும் மூளையுடன் தொடர்புள்ள இரண்டு கட்டை விரல்களையும் சரியாக 5 நிமிடங்கள் பிடித்துவிடுங்கள். பிறகு 15 அல்லது 20 நிமிடங்கள் கண்களைமூடி அமைதியாக இருங்கள். கடல் என்றோ அமைதி என்றோ மனதுக்குள் சொல்லிக்கொள்ளலாம். இந்த இரண்டு அம்சங்களாலும் மனம் உண்மையில் அமைதியடையும். கவலையை முறியடிக்கும் உணவுகளும் தினமும் சேர மன அமைதி தொடர்ந்து கிடைக்கும். இதனால் பல்வேறு நோய்களும் குணமாகும். பிரச்சினைகளுக்கும் நல்ல முடிவுகள் தோன்றும்.

# மாவீரர் நாள் - 99




**பிரான்ஸ்**

காலம்: 28.11.1999 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: பிற்பகல் 3.00 மணி
இடம்: L.S.C.
144/146, Avenue du Prèsident Wilson,
93210 La Plaine St. Denis.
M°: Porte de la Chapelle
RER-B: La Plaine - Stade de France.
*மேலதிகத் தொடர்புகளுக்கு: 01 43 58 11 42*

**டென்மார்க்**

காலம்: 27.11.99 சனிக்கிழமை
நேரம்: மாலை 4.30 மணி
இடம்: Kongrescenter
7400 Herning.

**சுவிஸ்**

காலம்: 04.12.1999 சனிக்கிழமை
நேரம்: பிற்பகல் 2.00 மணி
இடம்: BEA EXPO - HALLE 12, 3000 BERN.
Wangdorf, Ausfahrt *எடுத்து* Zentrum *நோக்கி வரவும்* Wangdorf *செல்லும் 9-ம் இலக்க* Tram *இல் கடைசித் தரிப்பிடம்*

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

# றக்பி உலகக்கிண்ணத்தை சுவீகரிக்க அவுஸ்திரேலியா, பிரான்ஸ் இறுதிப்போட்டியில்



தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் 4-வது றக்பி (Rugby) உலகக் கிண்ணப் போட்டிகள் பிரித்தானியாவை அலங்கரித்துக்கொண்டிருக்க 6.11.99 இறுதிப்போட்டியும் நெருங்கிவிட்டது. அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, நியூசிலாந்து வேல்ஸ், இங்கிலாந்து முக்கிய அணிகளாக கருதப்பட்டபோது பிரான்ஸ் ஒரு பலம் குன்றிய அணியாகவே பார்க்கப்பட்டது.

ஆனால் குறிப்பிட்ட முக்கிய அணிகளில் அவுஸ்திரேலியா தவிர ஏனையவை மண்கவ்வி விட்டபோதும் பிரான்ஸ் எதிர்பார்ப்புக்களை முறியடித்து இறுதிக்கு நுழைந்திருக்கிறது. 30.10.99 நடைபெற்ற முதலாவது அரையிறுதியில் முக்கிய நாடுகளான அவுஸ்திரேலியாவும் தென்னாபிரிக்காவும் மிகக் கடுமையாக மோதி முடிவுகாணத் துடித்தபோதும் அவுஸ்திரேலியாவின் வெற்றி தடுக்கமுடியாததாகிவிட்டது. இவ்வருட கோடை காலத்தில் பிரித்தானியாவில் நடைபெற்ற கிரிக்கட் கலகக்கிண்ணத்திலும் அவுஸ்திரேலியாவிடமே தென்னாபிரிக்கா அரையிறுதி ஆட்டமொன்றில் பரிதாபகரமான தோல்வியைக் கண்டது. அவுஸ்திரேலியா 27:21 என தென்னாபிரிக்காவை வென்ற அதேவேளை 31.11.99 நடைபெற்ற இரண்டாவது அரையிறுதியில் சிறப்பாக விளையாடி பிரான்ஸ் தடைகள் பெரிதாக இன்றி நியூசிலாந்தை 43:31 என ஓரங்கட்டியது. வேல்ஸ் தலைநகர் கர்டிப் (Cardiff) 6.11.99 இறுதிப்போட்டிக்காகக் காத்திருக்கிறது. கிரிக்கட் உலகசம்பியன் அவுஸ்திரேலியாவுக்கா? உதைபந்தாட்ட உலக சம்பியன் பிரான்சுக்கா? றக்பி உலகக் கிண்ணம் போகப் போகிறது?

# உலகசாதனை 'விக்கட்' காப்பாளர் ஓய்வெடுத்து ஒதுங்குகின்றார்



கிரிக்கட் விளையாட்டில் பல உலக சாதனைகளைப் படைத்த பெருமை அவுஸ்திரேலியர்களுக்கு நிறையவே உண்டு. 1988-ம் ஆண்டு குயின்ஸ்லாந்து மாநில அணியில் விளையாடிய 24 வயது இளைஞனை பாகிஸ்தானுக்கெதிரான 'விக்கட்' காப்பாளராக டெஸ்ட்போட்டி ஒன்றில் அறிமுகமாக்கியது அவுஸ்திரேலியா. அந்த 'விக்கட்' காப்பாளரே 10 ஆண்டுகளுக்குப் பின் உலகசாதனை கொட்டிய இயன் கிலி (Ian Healy) என்று பிரபலியமாகிக்கொண்டார். 100 டெஸ்ட்போட்டிகளுக்கு மேல் விளையாடிய 5 ஆவது அவுஸ்திரேலியரான இவர், 119 டெஸ்ட் போட்டிகளில் 366 'காச்சுகளைப்' பிடித்ததோடு 29 'ஸ்ரம்புகளையும்' செய்து 395 ஆட்டமிழப்புகளுக்குக் காரணமானார். இம் 395 ஆனது உலக சாதனை எண்ணாகவே உள்ளது. பந்து காப்பதில் வல்லவர் மட்டுமன்றி பந்தை அடிப்பதிலும் படுசூரன் என்பதை அவர் அடித்த 4356 ஓட்டங்கள் சான்றாக்கிறது. அவுஸ்திரேலியர்கள் வரிசையில் கூடிய ஓட்டம் பெற்ற 15 ஆவது வீரராக இருப்பினும் விக்கட் காப்பாளர் என்றவகையில் உலகின் இரண்டாவது இடம் இயன் கிலிக்குக் கிட்டுகின்றது. இங்கிலாந்தின் அலன் நொட் (Alan knott) கிலியைவிட 33 ஓட்டங்களால் முன்னுக்கு உள்ளார்.

டெஸ்ட் போட்டிகளில் மட்டுமன்றி ஒருநாள் போட்டிகளிலும் இயன்கிலி சாதனையாளராகவே இருக்கின்றார். 168 போட்டிகளை விளையாடிய இவர் 195 காச்சுகள், 39 ஸ்ரம்புகள் சேர்த்து 234 ஆட்டமிழப்புகளை ஆக்கியிருக்கிறார்.

35 வயதை எட்டியிருக்கும் இயன்கிலி அண்மைக்காலங்களில் டெஸ்ட் போட்டிகளுக்கு மட்டுமே அணியில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றார். அத்தோடு விளையாடும் டெஸ்ட் போட்டிகளில் அவரின் பந்துகாப்பு திருப்திகரமாக இருந்தாலும் துடுப்பாட்டம் சோர்வை அடைந்திருக்கிறது இந்நிலையில் அணியிலிருந்து முற்றாகவே தூக்குவதற்குள் தானாக ஒதுங்குவது புத்திசாலித்தனம் என்று கருதினாரோ, அன்றி வரவிருக்கும் போட்டிகள் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் எதிராக அமைவதால் அதற்குள் ஓடித்தப்பிவிடலாம் என எண்ணினாரோ என்னவோ தனது கிரிக்கட் ஓய்வை 28.10.99 இயன் கிலி அறிவித்து ஒதுங்கிக்கொள்கின்றார்.

# ஹக்கினன் மீண்டும் கார்ஓட்ட சம்பியன்




உலக கார்ஓட்ட சம்பியன் (Formula 1) தெரிவுக்கான இறுதிப்போட்டி ஜப்பான் நகர் Suzuka இல் 31.10.99 நடந்தேறியது. மக்லேறன் முக்கிய ஓட்டுநரும் உலக சம்பியனுமான ஹக்கினனுக்கும், ஃபறாறி ஓட்டுநர் ஈர்வீனுக்கும் இடையே கடுமையான போட்டி நிலவியது. இதற்கிடையில் உலக சம்பியன் வாய்ப்புகள் இல்லாத நிலையிலும் ஃபறாறியின் முக்கிய ஓட்டுநர் சூமாக்கரும் ஹக்கினனுக்கு பெருத்த சவாலாகத் தோன்றினார். கடுமையான இச்சோதனைக்களத்திலிருந்து ஹக்கினனின் வெற்றியைத் தடுக்க ஃபறாறி ஓட்டுநர்களால் முடியவில்லை. ஈற்றில் ஹக்கினன் முதலாம் இடத்தையும் பறாறி ஓட்டுநர்கள் சூமாக்கர் இரண்டாம் இடத்தையும், ஈர்வின் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர். ஃபறாறி ஓட்டுநர் ஈர்வின் தனது உலக சம்பியன் பட்டத்தைக் கைநழுவ விட்டபோதும் கார்களின் தர நிலையில் ஃபறாறியின் முதல் நிலையை மக்லேறனால் அசைக்க முடியவில்லை. ஜப்பானில் பெறப்பட்ட இம்முடிவுகளால் மக்லேறன், ஃபறாறி இரண்டுமே ஆறுதல் படத்தக்க வகையில் அமைந்துள்ளது.

### ஜப்பான் கார்ஓட்ட முடிவுக்கு பின் நிலமை

| ஓட்டுநர் | புள்ளி | கார் | புள்ளி |
|---|---|---|---|
| 1. ஹக்கினன் | 76 | 1. ஃபறாறி | 128 |
| 2. ஈர்வின் | 74 | 2. மக்லேறன் | 124 |
| 3. பிரன்ஷன் | 54 | 3. யோர்டன் | 61 |
| 4. குல்தாட் | 48 | 4. ஸ்ரிவாட் | 36 |
| 5. சூமாக்கர்.M | 44 | 5. வில்லியம்ஸ் | 35 |

1983க்குப் பின் 16 வருடங்களால் ஃபறாறிக்கு உலக தரத்தில் முதன்மைநிலை கிடைத்துள்ளது. இருமுறை சம்பியனான ஹக்கினன் இதுவரை 14 போட்டிகளில் வென்றுள்ளார்.

# சிம்பாவேயை இனிங்சால் வென்றது தென்னாபிரிக்கா



தென்னாபிரிக்கா, சிம்பாவே அணிகளுக்கிடையில் நடைபெற்ற முதலாவது டெஸ்டில் முதலில் துடுப்பாடிய சிம்பாவே ஆரம்பத்தில் மளமளவென்று விக்கட்டுகளை இழந்து 79/6 என்ற கீழ்நிலையில் இருந்தபோது பின்வரிசை வீரர்கள் சாமர்த்தியமாகத் தென்னாபிரிக்கரின் வீச்சை எதிர்கொண்டு ஓரளவுக்காவது நிலமையை மாற்றினர். ஆனாலும் 192க்கு மேல் சிம்பாவேயால் எட்ட முடியவில்லை. விக்கட்மட்டும் அரைச்சதமாக 85 ஐ எடுத்தார் தென்னாபிரிக்க பந்துவீச்சில் வேகப்பந்து வீச்சாளர் பெலக் 5 விக்கட்டுகளை வீழ்த்தினர். பதிலுக்காடிய தென்னாபிரிக்கா ஆரம்பத்தில் மந்தநிலையை அடைந்திருந்தாலும் இடைநிலை மட்டையாளர்கள் சிறப்பாக ஆடி ஓட்டங்களைக் குவித்ததால் 417 என்னும் ஓங்கிய பலத்தைப் பெற்றது. கலிஸ் 64, கொங்ஜே 64, நோடஸ் 70, வுச்சர் 55 பெற்றதும் குறிப்பிடத்தக்கது. இனிங்ஸ் தோல்வியிலிருந்து மீளவேண்டிய நிலையில் திரும்பவும் ஆடிய சிம்பாவேயால் பெரிதாக ஏதும் சாதிக்க தென்னாபிரிக்க வீச்சாளர்கள் விட்டுவிடவில்லை. முதல் இனிங்சுக்கு ஒப்பான ஒரு ஆட்டத்தை ஆடிய சிம்பாவேக்கு 212 ஓட்டங்களே தேறியது. இம்முறையும் விக்டல் மட்டும் அரைச்சதமாக 51 ஐ அடித்தார். தென்னாபிரிக்க பந்துவீச்சில் கலிஸ், அடம்ஸ் தலா 4 விக்கட்டுகளை வீழ்த்தினர். 3 1/2 நாட்களில் நிறைவுற்ற இவ்வாட்டத்தில் தென்னாபிரிக்கா இனிங்ஸ் 13 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. முதலும் 3 விக்கட்டுகளைச் சாய்த்து 64 ஓட்டங்களையும் அடித்து கலிஸ் இவ்வாட்டத்தின் நாயகனாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

லாச்சப்பல் ஷாலினி உணவகம் ஆதரவில்
ஈழத்தமிழர் உதைபந்தாட்டச் சம்மேளனம் - பிரான்ஸ்
தமிழர் புனர்வாழ்வுக் கழக
'சிறுவர் மேம்பாட்டு நிதி'க்காக நடாத்தும்
14 வயதிற்குட்பட்டோருக்கான
உள்ளரங்க
உதைபந்தாட்டசுற்றுப்போட்டி
மேலதிக தொடர்புகட்கு: 01 40 38 30 74 / 01 43 94 19 05 (ரொனி)

காலம்:
07.11.1999
காலை
9.00 மணி
CENTRE SPORTIF DES FILLETTES
54bis, Bld Ney,
75018 Paris.
Métro: Porte de la Chapelle

# புகலிட நிகழ்வுகள்

## அரங்கேற்றத்தில் தமிழிசைப் பாடல்கள் அவசியம்

செல்வி துர்க்கா கோபால கிருஷ்ணனின் பரத நாட்டிய அரங்கேற்றம் கடந்த 16.10.99 சனிக்கிழமையன்று டென் மார்க் நாட்டில் பரடேசியா நகரின் பரடேசியா தியேட்டரின் அழகிய அரங்கில் நடைபெற்றது. இவர் திருமதி கௌரி



வசந்தி தயாராஜனின் மாணவியாவார். நடன நிகழ்வுகளுக்கான பின்னணிப் பாடலை இலண்டனில் இருந்து வருகை தந்திருந்த திருமதி. மாதினி சிறீஸ்காந்தராஜா வழங்கியிருந்தார். வயலின் - திரு.ம. தேவராஜா, மிருதங்கம் - திரு. எஸ். வி.கிரிதர், தபேலா - செல்வன். அ. ஜெயசீலன், புல்லாங்குழல் - திருமதி புனிதா வழங்கியிருந்தனர். அரங்கேற்றத்தின் பிரதம விருந்தினராக இலண்டனிலிருந்து சட்டத்தரணி திரு. செ. சிறீஸ்காந்தராஜாவும், சிறப்பு விருந்தினராக திருமதி ராகினி இராஜகோபாலும் வருகை தந்திருந்தனர்.

துர்க்கா கோபாலகிருஷ்ணனின் பரதநாட்டிய அரங்கேற்றம் மிகவும் சிறப்பாக அமைவு பெற்றிருந்தது. வழங்கப்பட்ட பதின்மூன்று உருப்படிகளையும் ஆழ்ந்து, அனுபவித்து, பொருள் உணர்ந்து அரங்கப்படுத்தியதில் அவரின் சிறப்பு பெரிதும் பாராட்டக்கூடியதாக இருந்தது. 'வந்தனைக்குரியதம்மா நமது நிலம்' என்னும் தாயக உணர்வுப் பாடலும் சேர்க்கப்பட்டிருந்தது நிகழ்ச்சியின் தரத்தை மேலும் ஒரு படி உயர்த்தியது. பிரதம விருந்தினர் தமது பேச்சில் தமிழிசைப்பாடல்கள் இடம்பெற வேண்டியது அவசியமென வலியுறுத்தினார். எமது தாயகத்தை மறந்துபோகாத தொடர்பு பேணப்படவேண்டும் என்று வலியுறுத்தினார். திருமதி ராகினி ராஜகோபால் சிறந்த நடன ஆசிரியையும், சிறந்த மாணவியும் இணையும்போது தான் தரமான படைப்பு வாய்க்கும்! இன்று அதை நேரடியாகக் கண்டேன் என்று வாழ்த்தினார். திரு.எஸ்.ரி. அருள் போராட்ட உணர்வை வலியுறுத்திப் பேசினார். நிகழ்ச்சிகளை எஸ்.கே. ராஜன், கோமதி ஆகியோர் தொகுத்து வழங்கினர்.

## மலேசியாவில் செந்தமிழ்ச் சிலப்பதிகார உலகளாவிய மகாநாடு

உலகத் தமிழ்பண்பாட்டு இயக்கத்தின் மலேசியாக்கிளை செந்தமிழ்ச் சிலப்பதிகார மாநாட்டை உலகளாவிய நிலையில் நடாத்தவுள்ளது. மலேசிய தமிழ் கலாச்சார நிலையத்தில் டிசம்பர் மாதம் 11, 12 ம் திகதிகளில் இம்மகாநாடு நடைபெறும்.

சிலம்பு காட்டும் தமிழர் நாகரிகம், கலைகள், பண்பாட்டியல், அரசியல்வணிகம் மற்றும் தமிழியல் தொடர்பான விழிப்புணர்வை உலகத் தமிழரிடையே உருவாக்கிடவும், கடலுக்குள் மூழ்கிக்கிடக்கும் பூம்புகாரின் சிறப்புத் தன்மையை அகழாய்வு செய்து உலகிற்கு உணர்த்திட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தமிழக அரசினையும் இந்திய அரசினையும் தீர்மானம் மூலமாகவலியுறுத்தவும் யுனெஸ்கோவின் பார்வையை பூம்புகாரை நோக்கி ஈர்த்திடவும் நோக்கமாகக்கொண்டு இம் மாநாடு நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு உலகத் தமிழ் அறிஞர்கள் பலரும் அழைக்கப்பட்டுள்ளனர். உலகத் தமிழ்பண்பாட்டு இயக்கத்திற்கு உலகளாவிய 42 நாடுகளில் கிளைகள் உள்ளன. இக் கிளைகளுக்கூடாக உலகத்தமிழர்களுக்கு இம்மாநாடு தொடர்பான விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.


உங்கள் இல்லங்களில் நடைபெறும்
மங்கலகரமான நிகழ்ச்சிகள், மற்றும் மேடை
நிகழ்ச்சிகள் அனைத்திலும் இசைமழையில்
நனைந்திட ஐரோப்பா புகழ்

* ஈழநிலா *

தொடர்புகட்கு:
இயக்குநர் எஸ்.எஸ். தில்லைச்சிவம்
Tel: 01 40 37 56 69


'குழல் இனிது யாழ் இனிது என்போர்—தம் மக்கள் மழலைத்தமிழ் கேளாதோர்'

## பாரிஸ் "தமிழ்ச்சோலை மாலை"

கடந்த 17.10.99 அன்று பாரிஸ் நகரின் வடக்கில் அமைந்த Salle Jeanne d'Arc மண்டபத்தில் தமிழர்களால் அமைதியாகத் திருவிழா நடந்தேறியது. பெரிய



அளவிலான விளம்பரங்களோ, பரபரப்பான எடுப்புகளோ இல்லாமல் மிகச் சாதாரணமாக ஒரு நிகழ்வை அரங்கம் காணவைத்துள்ளார்கள் தமிழ்ச்சோலை அமைப்பினர்.

புகலிட மண்ணின் வளரும் சந்ததியினரின் தாய்மொழி அறிவூட்டலை அடியொற்றி தம் கலை—கலாச்சார, வரலாற்றை கற்றுக்கொடுக்கும் மையங்களாக இப்பள்ளிகள் உருவாக்கப்பட்டு வருவதையும், தமிழர்களின் வாழ்வியல் ஓட்டத்தில் காலம்காலமாக கைமாற்றப்படும் 'மூல வேர்த் தடியை' முறையாக அடுத்த தலைமுறையினருக்கு வழங்கும் உன்னதச் செயலையும் இவர்களின் வெளிப்பாடுகளின் ஆழத்தில் காண முடிந்தது.

நம் சிறார்களால் முழுமையாக அரங்கம் ஆளுமைக்குள்ளாகியிருந்தது. குறிப்பிட்ட நேரத்தில்




மங்கல விளக்கேற்றி அமைதி வணக்கம், பள்ளிக் கீதத்துடன் ஆரம்பமாகிய நிகழ்வினை ஒரு வரவேற்பு நடனத்துடன் அரங்கத்தை உசாராக்கினர். தமிழ்ச் சோலை தலைமை அமைப்பின் தலைவரின் சுருக்கமான வரவேற்புரையை தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமாகின. தமிழிலும்-பிரெஞ்சிலும் செல்வி சுகந்தினி நிகழ்ச்சிகளைத் தொகுத்தளித்திருந்தார்.

30 பள்ளிகளை நடாத்தும் இந்த அமைப்பின் முதல் முயற்சியில் சுமார் 19 பள்ளிகளின் நிகழ்வுகளை ஒரே அரங்கத்தினுள் சாதாரணமாகத் தொகுத்துத் தந்துள்ளனர். இவர்களால் விநியோகிக்கப்பட்ட நல்வாய்ப்புக் குலுக்கல் இறுதி நேரத்தில் கணினித் தொழில்நுட்பத்தில் பளீரென வெளிப்படுத்தப்பட்டது. தமிழர்களால் பாரிசில் அரங்கம் காணப்பட்ட மேடை நிகழ்வை அப்படியே கணினி தொழில் நுட்பத்துடன் வீடியோ வழியாக குறுந்திரையில் காட்டும் நிகழ்வை முதல் தடவையாக செய்தமை பலரையும் கவர்ந்திழுத்தது.

அரங்கம் நிறைந்த பார்வையாளர்கள் மத்தியில் போதிய அளவில் ஒலி அமைப்பில்லாத குறை அனைவரையும் வேதனைப்படவைத்தது.

நம் சிறார்களின், பாடல்கள், பேச்சுக்கள், குழுப்பாடல்கள், கோலாட்டம், வில்லுப்பாட்டு, காவடியாட்டம், அபிநயப் பாடல், பொம்மை நடனம், தாளலயம், 'தமிழ்ப்பெரியோர்




அறிமுக அரங்கம்; கர்நாடக இசைப்பாடல்கள், நடனம், நாடகமென பல்வேறு வெளிப்பாடுகள் மனதைக் கவர்ந்தன.

இதில் பாரிஸ்-17. ஓபே வில்லியே, புவாசி சென் அந்துவான், வில்தானூஸ். பாரிஸ்-18, செல், ஒல்னே சூ—புவா, வில் நெவ் சென் ஜோர்ஜ், நொய்யி சூ மார், நுவசி லூ குறோன், ஜியான், வில்லியே லூ பெல், இவ்றி சூர் செய்ன், சார்சல், மொந்றொய், கிளிச்சி சூ புவா, சேர்ஜி, சவினி லூ தெம்பிள்.



குசன்வில் ஆகிய பள்ளிகள் பங்கேற்றிருந்தன.

விழாவின் சிறப்பு விருந்தினர் தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துலகச் செயலகப் பொறுப்பாளர், தான் பார்த்த மேடை நிகழ்வுகளில் தன் மனதைத்தொட்ட நிகழ்வாக இது இருப்பதாகக் கூறி மனப்பூர்வமாக வாழ்த்தினார். அவர் தொடர்ந்து பேசுகையில், தமிழின் தொன்மை, அதன் சிறப்பு பற்றிக் கூறியதுடன் நம் புகலிட தமிழ்ச் சந்ததியினர் தமிழ்மொழி கலை பண்பாடு பற்றி கற்றுக் கொள்ளத் தோற்றுவிக்கப்பட்டிருக்கும் தமிழ்ச்சோலைப்பள்ளிகள் மேன்மேலும் பல வளர்ச்சிப்படிகளில் செல்லவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

தமிழ்ச்சோலை தலைமைப் பணியகப் பணிப்பாளர் தமிழ்ச் சோலை அமைப்பினை அறிமுகம் செய்து வைத்ததுடன் புகலிடத்தில் வாழத் தலைப்பட்டுள்ள பெற்றோர்களாகிய நாங்கள் நம் சிறார்களின் மனோநிலை புரிந்தவர்களாக வாழவேண்டிய அவசியம், பிள்ளைகளின் எண்ணங்களை பகிர்ந்துகொண்டு அவர்களை உன்னதமானவர்களாக வளர்த்தெடுக்கும் முயற்சியில் கவனம் கொள்ளல் பற்றியும் சிறிய உரை வழங்கினார்.

இந்நிகழ்வின் இறுதியில் சவனி லூ தெம்பிள் சிறார்களின் 'ஐரோப்பாவில் தமிழ்த்தாய் நாடகம், சேர்ஜி பொம்மை நடனம், வித்தானுஸ் வில்லுப்பாட்டு, நொய்லி சூமார்ன் காவடி, பாடல்கள் அன்புள்ள அம்மம்மாவுக்கு, 'சொந்தமண்', 'மாங்கிளியும்' குழுப்பாடல்களாக அமைந்த 'விடுதலைபோல்...' 'ஜீவிதப் படகு' என... எல்லாமே நன்றாக அமைந்திருந்தன. தமிழ்ச் சோலை அமைப்பின் செயலாளர், இந் நிகழ்வைச் சிறப்பிக்க ஒத்துழைப்பு வழங்கிய அனைவரையும் சுட்டிய நன்றியுரையை வழங்கினார்.

தமிழ்மொழி வாழ்த்துடன் மாலை 19.30 இற்கு நிகழ்வுகள் நிறைவுற அமைதியாகக்கூட்டம் கலைகிறது.

ஒருவாறு மண்ணுக்குள் புகுந்து மின்னட்டையில் இடம்பிடித்து உட்கார அட்டை ஊர்கிறது. ஒவ்வொரு காட்சிகள்... நல்லதொரு மாலைப்பொழுது, பிள்ளைகளின் புறத்தோற்ற வெளிப்பாடுகள் கொஞ்சம் தூக்கலாக அதிகூடிய கவனத்துடன் இருக்க, மொழிசார்ந்த திறன் வெளிப்பாடுகளின் கவனமெடுப்பில் கொஞ்சம் கவலயீனமோ?... இல்லை... இது எம் பிள்ளைகளின் நிகழ்வு-நன்றாகவே இருக்கிறது. அவர்கள் ஊக்கம் பெற அனைவரும் கைகொடுக்கட்டும்!

- அநாமி

# 'கலைமாலை - 99'

'காலத்தை கலை அழகு படுத்துகிறது. அதை நாம் வருணிப்போம்' என்றார் ஓர் அறிஞர். நமது நாட்டுக் கலைகள் தேசியத்திற்குப் பயனுடையதாக இருப்பது மிகவும் நல்லது. கலைகள் மூலம் நாட்டுப் பற்றினையும், தேசவிடுதலையையும் தூண்டிவிடலாம். அந்த உணர்வு புகலிடத்துத் தமிழர்களிடம் மிகையாகக் காணக்கூடியதாக நிமிர்ந்து நிற்கிறது உண்மையே! அந்த வகையில் 'பிரான்ஸ் வவுனியா எவர்கிறீன் சங்கம் நடத்திய கலை மாலை-99 நிகழ்வுகளைக் கண்டேன். 12.09.1999 ஞாயிறு 4 மணிக்கு Amorc மண்டபத்தில் இடம்பெற்றது. திரு. வே.குணரத்தினம் அவர்கள் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். அதனைத் தொடர்ந்து சங்கத்தின் தலைவர் திரு.சி.விஜயகுமார் வரவேற்புரை நிகழ்த்தினார். விழாவுக்கு குமார் ஸ்தாபன அதிபர் திரு. சந்திரகுமார் பிரதம விருந்தினராக மதிப்பளிக்கப்பட்டிருந்தார். சிறப்பு விருந்தினர்களாக- திரு. எஸ்,றொனி, திரு. எஸ். பாலச்சந்தின், திரு.வே. குணரத்தினம் ஆகியோரும் பங்கேற்றனர். தொடர்ந்து சொற்பொழிவினை டாக்டர் குணசேகரன் (பாண்டிச்சேரி பல்கலைக்கழகம் கலாச்சார துணைத்தலைவர்) நிகழ்த்தினார்.

இதனைத்தொடர்ந்து மண்ணையும், மக்களையும் நினைவுறுத்தும் கலை நிகழ்வுகள். தமிழ்ச்சோலை மாணவிகளின் கும்மி நடனம் சிறந்து மிளிர்ந்தது. பரத நாட்டியம் பரதத்தின் பாவங்களை காலமுணர்ந்து பிரதிபலித்தனர். இசை, இளையநிலாவின் இசைமழை விடுதலையின் கீதங்களாக அமைந்திருந்தன. இந்த விழாவின் இறுதி நிகழ்வாக உரம் சேர்த்தது நாடகம்—தமிழீழ மண்ணின் உரிமை காத்திடும் உறுதிபூண்டு வீரம்காட்டிப் போராடி எதிர்கால வாழ்வின் வரைவிலக்கணத்தையும், விழுமிய உண்மையையும், உயிர்த் துடிப்புடனும், நிமிர்வுடனும் தன்னையே மண்ணிற்குத் தியாகம் செய்த 'மாவீரன் பண்டார வன்னியன்' நாடகம். அந்த வீர காவியத்தை ஒன்றரை மணி நேரத்திற்குள் சுருக்கியிருந்ததால் அக்காவியம் முழுமை பெறவில்லை. இந்நாடகத்தை எழுதி இயக்கியவர்- திரு. சின்னராஜா கணேஸ். இவரது முழு முயற்சிக்கும் விமர்சனம் தூண்டுகோலாக அமையவேண்டும் என்பதால் நாடகத்தில் உள்ள தவறுகளைக் களைந்து முயற்சியின் முன்னெடுப்புக்குள் புகுந்துகொள்வோம். நாடகத்தில் ஏழு பாத்திரங்கள் பேசப்பட்டன. எந்தப் பெரிய வரலாற்றையும் நாடக பாத்திரங்களால் சுருக்கியும், இறுக்கியும் மக்கள் மனதில் இடம்பெறவைப்பதில் நாடகத்திற்கு வலிமையும், வாய்ப்பும் உள்ளது. பண்டார வன்னியனாக நடித்தவர்—முன்னாள் உதைபந்தாட்ட வீரரான திரு. கொன்சாலியூஸ் அவர்கள். அவரது உயரம் மன்னனுக்கும், மேடைக்கும் உகந்தனவாக இருந்ததா? இருந்தாலும் கம்பீரமாக நடந்து பாத்திரத்தை உணர்ந்து நடித்திருந்தார். வசனம் பேசுவதிலும், பாவ அங்க அசைவுகளிலும் நன்றாக மிளிர்ந்தார். தளபதியாக நடித்தவர் திரு.சிவலிங்கம் இவருக்கு மன்னனை மிஞ்சிடலாம் என்ற துடிப்பு. அந்த அந்தரிப்பால் பாத்திரத்தோடும் சக நடிகரோடும் ஒன்றித்து நடிக்கத் தவறியிருந்தார். பறங்கி டேவிற்சன்- இப்பாத்திரத்தை ஈழத்தில் பிரபல்யமான திரைப்பட இயக்குநரும், நடிகரும், நாடகக் கலையை நன்குணர்ந்தவருமான—திரு. ஏ.ரகுநாதன் அவர்கள் ஏற்றிருந்தார். அவரது சிறிது நேர நடிப்பை மிகைப்படுத்திச் சொல்லாத வகையில் கச்சிதமாக மனதில் மறையாது பகிர்ந்திட மிளிர்ந்தார். இந்த நாடகத்தின் நயவஞ்சகன், நச்சுச் சிந்தனைச் சிரழிவான் 'காக்கை வன்னி'. இந்தக் காக்கைகள் தமிழீழத்தின் முதல் மன்னன் சங்கிலியன் காலம் தொட்டு இன்று மேதகு தலைவர் பிரபாகரன் காலம்வரை வளர்ந்துகொண்டே இருப்பது தமிழினத்தின் மத்தியில் விளைந்த சாபக்கேடாகும். அத்தகைய துரோக, இழிந்த பாத்திரத்தை இந்த நாடகம் மூலமாக இன்றைய தலைமுறைக்குப் புரிய வைப்பதில் அதிக கவனம் செலுத்தவில்லை. இருந்தாலும் பணம், பதவி, பட்டம் பெற மானத்தை அடகுவைக்கும் ஈனப் பிறவிகள் இன்றும் நம் தமிழீழத்தில், 'அன்றைய காக்கைகளை மிஞ்சி' உலவுகின்றார்கள். அதனை இந்நாடகத்தின் மூலம் புரிய வைத்துள்ளார், இப்பாத்திரத்தை ஏற்று நடித்த திரு.சி.கணேஸ். இவரே இந்த நாடகத்தின் ஆசிரியருமாவார். நாடகத்தின் ஆரம்பத்தில் பரதக் கலைக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தது போற்றுதலுக்குரியது. அக்கலையைச் சிறந்தமுறையில் சித்திரை நிலவு போல் முத்திரை பதித்திருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது....

மன்னன் முன் இப்பரத் நடனத்தை ஆடியவர்-செல்வி. துர்க்காசினி சிவலிங்கம். மற்றும் ராஜகுருவாக திரு. கனகராஜாவும், அமைச்சராக திரு. பேடினன்ட் அவர்களும், போராளியாக திரு.அகஸ்தின் அவர்களும் தங்களது பாத்திரத்தைத் திறம்பட நகர்த்தி, நாடகத்தை உயிர் பெற வைத்தார்கள். மொத்தத்தில் நாடகம் காட்சிக்குக் காட்சி தொய்வற்றதாகத் தொடர்ந்தமை பாராட்டுக்குரியது. இருந்தாலும் நம்முடைய காலம் விடுதலைப்போராட்டம் நிகழும் காலமாகும். அந்த நிலையில் நாடகங்களை எழுச்சி, சோகம், வீரம் போன்ற உணர்ச்சிகளைச் சொல் நயம், பொருள் நயம் ததும்ப வடிக்கவேண்டும். ஒரு சமுதாயத்தின் கடந்த காலத்தையும், நிகழ் காலத்தையும், தனக்குள் அடக்கிக்கொண்டு எதிர் காலத்தைப் பாதுகாத்துத் தருவதில் பெரும் பங்கு நாடகக் கலைக்குண்டு. அந்த வகையில் மிகவும் சக்திவாய்ந்த ஒன்றாகும். படித்தும், நடித்தும் சுவைப்பதற்குரிய நாடகக் கலை காட்சிகளை கண்முன் நேரில் நிறுத்துவதால் தனது உடனடிப் பயனை விளைவித்து நீண்ட காலம் நெஞ்சில் நிலைத்து ஆளுமை செய்யக் கூடியது. இதனை உணர்ந்து வரலாற்று நாடகங்களை மேடையேற்றும்போது, அந்நாடகங்கள் சமுதாயத்திற்கு நல்ல படிப்பினையையும், உணர்ச்சி வேகத்தையும் தந்து, ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபட, இளந்தலைமுறையினரைத் தூண்டி, நல்வழிப்படுத்தும் கருவியாக அமைய வேண்டும். இந்தவகையில் சின்னராஜா கணேஸின் முயற்சி மேலும் வளர்ச்சிபெற வாழ்த்துவோம்.

- நெய்தல் மகன்.



# மாலதி ஞாபகார்த்த 12வது எழுச்சி விழா

(சுவிஸ்)

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் பெண்களின் எழுச்சியும் போரர்ட்ட உணர்வும் பரிணாமம் பெற்றிருப்பதற்கு ஆணிவேராகத் திகழ்பவர் 2-ம் லெப்டினன்ட் மாலதி என்றால் மிகையாகாது. இந்திய பேரரசுக்கெதிராக வீரமுடன் களமாடி விதையான முதல் பெண் புலியான இவர், 10.10.87 இல் புதிய அத்தியாயத்தை உருவாக்கிச் சென்றார். இவரின் 12-வது ஆண்டு நினைவை ஒட்டி சுவிஸ் கிறபுண்டன் மாநில தலைநகர் கூரில் 16.10.99 அன்று பெண்கள் எழுச்சிவிழா கொண்டாடப் பட்டது.

மலரப்போகும் தமிழீழத்தின் தேசியக்கொடியை சுவிஸ் பணியக மகளிர் அமைப்புத்தலைவி ஏற்றிவைக்க, தாயக விடுதலைப் போரில் வீரகாவியம் படைத்த தேசிய மாவீரர்களுக்கும் பொது மக்களுக்குமான அமைதி வணக்கம் செலுத்தப்பட்டு, சுடரேற்றலுடன் திரண்டிருந்த மக்கள் அனைவரும் மாலதி உருவப் படத்திற்கு மலர்தூவி வணங்கிச் சென்றனர்.

கலை நிகழ்வுகளுடன் ஆரம்பமான விழாவில் கிறபுண்டன் தமிழ் வித்தியாலய மாணவிகள் எழுச்சி நடனங்களை நன்றாக வெளிப்படுத்தியிருந்தார்கள். குறிப்பாக 'கரும்புலிகள் கௌத்துவம்' கலையின் நவீன தன்மையை உணர்த்தியிருக்கின்றது. கலை மக்களுக்காக மக்களால் படைக்கப்படுவது எனவே படைப்புக்கான காலத்தைக் கருத்தில்கொண்டு படைக்கும் போதுதான் கலை நீண்டு வளரும். பழமையை மாற்றமுடியாது புதுமை உள்நுழையும்போது கலை சீரழிந்துவிடும் என்று கங்கணம் கட்டி மல்லுக்கு வருபவர்கள் 'புரியும்படியாக' இந்த கரும்புலிகள் கௌத்துவம் அமைகிறது. பழைய கௌத்துவம், சப்தம், பதம், அலாரிப்பு என்ற நடனங்களை காலத்திற்கு இசைவாக ஏன் நவீனப்படுத்த முடியாது? ஒரு அறிமுக நிகழ்ச்சியாக, அறிவியல் அரங்கம் என்று பெண்களின் மறுமணம் பற்றிய கருத்துப் பரிமாற்றத்தில், ஒருவர் தனது சொந்தக்கருத்தாக ஒன்றை முன்வைக்கலாம் என்பதை நீக்கி, கூறப்படும் சொந்த கருத்துக்களுக்கும் மற்றவர்களும் விமர்சனம் செய்யலாம் என்பது போல் அமைத்திருந்தால் மேலும் கருத்துக்கள் குவிந்திருக்கும். இவ்விழா ஒழுங்கு செய்த மகளிர் அமைப்பினர் புதிய தேடலில் கிடைக்கும் அனுபவங்களை வைத்து, எதிர்காலத்தில் சிறப்பான நிகழ்ச்சிகளை முன்னெடுக்கலாம்.

'மாலதி காட்டிய வழியில் புலம்பெயர் நாடுகளிலும் உள்ள பெண்கள் விடுதலையுடன் இணையவேண்டிய அவசியத்தை எடுத்துக்கூறி, போராட்ட சூழ்நிலையால் கணவனை இழந்த பெண்களுக்கு நல்ல எதிர்காலத்தைக் காட்டுவதற்காக அனைவரையும் ஒன்று திரண்டு கொள்ளுமாறு மகளிர் அமைப்புத் தலைவி கேட்டுக்கொண்டார். மிகவும் உணர்ச்சி பூர்வமாக மேடையில் பேசிய கலைபண்பாட்டுப் பொறுப்பாளர், தமது உரையில் 'நீண்ட காலமாக அடிமைப்பட்ட இனத்தை சுதந்திரத்துடன் வாழ வைப்பதற்காக, பெண்களும் களமாடிச் சாதிக்கலாம் என்பதைத் தோற்றுவித்தவர் மாலதி எனவும், 21-ம் நூற்றாண்டில் உலகப்பந்தில் தமிழீழம் அமையப்போவது திண்ணம். எனவே மூட நம்பிக்கைகளை முறியடித்து மாவீரர் எழுச்சிப் பங்களிப்பில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும்' கேட்டுக்கொண்டார்.

புரட்சிப் பாடல்களை வயலின் மூலம் மீட்டினா, நிறோஷா தயாழினி. மகளிர் அமைப்பைச் சேர்ந்தவர்களும் கவிதைகளைப் பாடி நிகழ்ச்சியை மேலும் மெருகூட்டினர். தொய்வின்றிச் சென்ற நிகழ்ச்சிகளின் இறுதியில் கலை பண்பாட்டு கழகத்தினரின் விடுதலைக்கானங்கள் இடம் பெற்று அமைதியான கொடியிறக்கத்துடன் விழா நிறைவடைந்தது.

# டென்மார்க்கில் பரத நாட்டிய அரங்கேற்றம்

செல்வி ஜனனி பரமேஸ்வரனின் பரத நாட்டிய அரங்கேற்றம் கடந்த 21.08.99 அன்று டென்மார்க்கிலுள்ள கோர்னிங் நகரில் வெகு சிறப்பாக நடந்தேறியது. திருமதி சுமித்திரா சுகேந்திரா, இலண்டன் பாரதீய வித்தியாபவன் ஆசிரியர் திருபிரகாஸ் ஆகியோரிடம் முறைப்படி பரதக் கலையைப் பயின்று இந் நடன அரங்கேற்றத்தை நிகழ்த்தினார். ஆரம்பத்திலிருந்து இறுதிவரை ஒவ்வொரு உருப்படிகளிலும் மிகக் கூடுதலான கவனமெடுத்து, இவ் அரங்கேற்றம் தயாரிக்கப் பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. சங்கீத ரத்தினம் திருமதி சிவசக்தி சிவனேசன் பாடல்களை இசைத்தார், பவானி சங்கர் - மிருதங்கம், வயலின் - சிவசங்கர், வீணைஇசை செல்விகள் சுகிர்தா, சுகன்யா ஆகியோரால் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியின் பிரதம விருந்தினராக இங்கிலாந்தில் இருந்து ஜோன் மார்க் கலந்து கொண்டார். ஆங்கிலேயரான இவர் தமிழ், பரதநாட்டியம், சங்கீதம் போன்றவற்றைத் தமிழகத்தில் போர் வீரராக வாழ்ந்த காலத்திலேயே விரும்பிக் கற்றுக்கொண்டவர். தமிழில் அவ்வப்போது பேசியும் ஜனனி, ஜனனி என்ற தமிழ்ப்பாடலை முழுமையாக இசைத்தார். புலம்பெயர் சூழலில் கலைகளை வளர்ப்பதில் தமிழ் மக்கள் கொண்டுள்ள ஆர்வத்தையும், கலைகளே வாழ்வாகிவிட்ட சூழலையும் தனது அவதானிப்புக்களையும் எடுத்துரைத்தார்.

சங்கீதத்திலும், பரதத்திலும் சிறுவயது முதலே ஆர்வத்துடன் ஈடுபட்டு வரும் ஜனனியின் பரத நாட்டிய அரங்கேற்றத்தில் புஸ்பாஞ்சலியில் இருந்து தில்லானா வரை பத்துவகையான நடனங்கள் இடம்பெற்றிருந்தன. புலம் பெயர் சூழலில் இத்தனை விடயங்களையும், உள்வாங்கி



பொறுஸ்மயுடன் கற்று அரங்கப்படுத்தியதில் ஜனனியின் திறமை பாராட்டும்படியாக இருந்தது. சான்றிதழ் வழங்கியபோது ஏற்பட்ட அரங்கு நிறைந்த கரவோசை அதையே விளக்குவதாயிருந்தது.


€ur calling card
Cartes téléphoniques
ECC
TELEPHONEZ A PRIX REDUITS
EN TOUTE SECURITE.
€ur calling card
ECC
100 F
160 Unités
80 Unités
50 F
calling card
100 F
160 Unités
TÉNOR
QUALI
முக்கிய குறிப்பு!
Qualite Tenor என்பது
இது அரசாங்கத்தால்
அங்கீகரிக்கப்பட்ட
முத்திரையாகும்.
அதாவது
நம்பிக்கையானது,
உறுதியானது,
உத்தரவாதமானது,
பாதுகாப்பானது என்பதை
உள்ளடக்கியதோகும்.
குறுகிய காலவேலையைவிட நீண்ட
கால வேலையே எமது நோக்கம்.
வாடிக்கையாளர்களுக்கு விசேட கழிவு
வசதி செய்து கொடுக்கப்படும்.
மேலும் எமது சேவையில் குறைகள், குற்றம்
இருப்பின் சட்டபூர்வமாக நடவடிக்கை
எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.
மிக விரைவில் ஜேர்மனி, இங்கிலாந்து
ஆகிய நாடுகளில் எமது சேவைகள்
ஆரம்பமாக இருக்கின்றன என்பதை
உங்களுக்கு அன்புடன்
அறியத்தருகின்றோம்.
குறிப்பிட்ட நாட்டிற்கு உரிய முகவர்கள்
எம்முடன் தொடர்புகொள்ளவும்.
Organisation professionnelle de télécommunications
ECC Securité à la charte QUALITE TENOR

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

## தொண்டமானின்........

வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். தொண்டமானின் குடும்பத்தினர் மேலதிக சிகிச்சைக்காக அவரைச் சென்னைக்குக் கொண்டுசெல்ல முயற்சிகள் எடுத்தபோதும் வைத்தியர்கள் அதற்கு உடன்படாததால் அம் முயற்சி பயனளிக்கவில்லை. இதனையடுத்து இரவு 8.15 மணியளவில் தொண்டமான் மரணமடைந்தார்.

ஆரம்பத்தில் இலங்கை இந்திய காங்கிரசில் ஒரு உறுப்பினராக இணைந்துகொண்ட தொண்டமான் 1939ம் ஆண்டு அதன் தலைவரானார். அதன் பின்னர் 47ம் ஆண்டு நுவரெலியா தொகுதியில் போட்டியிட்டு சிறீலங்கா பாராளுமன்றத்திற்கு சென்றார். 1948ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இலங்கை குடியுரிமைச் சட்டத்தினை கடுமையாக எதிர்த்த தொண்டமான், அதன் பின்னர் மலையக அரசியலில் பிரபலமாகத் தொடங்கினார். அதன் பின்னர் இறக்கும் வரை நான்கு அமைச்சரவையில் 22 ஆண்டுகளாக அமைச்சராகப் பதவி வகித்தார்.

தொண்டமானின் அரசியல் நடவடிக்கைகள் பற்றி அவ்வப்போது விமர்சனங்களும் எழுந்ததுண்டு. வடக்கு கிழக்கு இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டுமானால், வடக்கு கிழக்கு பிராந்தியங்களை விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தில் ஐந்து வருடங்களுக்கு ஒப்படைக்க வேண்டும் என இவர் அடிக்கடி குறிப்பிட்டாலும் சிறீலங்காவின் அவசரகால சட்ட நீடிப்பிற்கான வாக்களிப்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அரசிற்கு ஆதரவாக வாக்களித்து வந்ததும் குறிப்பிடத்தக்கது. தற்பொழுது இலங்கை தொழிலாளர் காங்கிரசில் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் இவரது பேரனான ஆறுமுகம் தொண்டமான், தொழிலாளர் காங்கிரசின் தலைமைத்துவத்தை பொறுப்பேற்கலாம் எனக் கருதப்படுகின்ற போதிலும் கட்சிக்குள்ளே இவர் தலைமைப்பதவி வகிப்பதற்கு எதிர்ப்புகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

## தொண்டமானுக்கு.....

லங்கா அரசு அறிவித்துள்ளது. தற்பொழுது மலையகப் பகுதிகளில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும் இவரது பூதவுடல், சிறீலங்கா பாராளுமன்றத்தில் 3ம் திகதி அஞ்சலிக்கு வைக்கப்பட்டு மறுநாள் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைமையலுவலகத்தில் வைக்கப்பட்டு அங்கிருந்து சுதந்திரச்சதுக்கத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என சிறீலங்கா அரசின் செய்திக்குறிப்பு தெரிவித்துள்ளது.

# மூன்று இளைஞர்களின் சடலங்கள் ஒப்படைப்பு

மூதூர் வைத்தியசாலையில் சிறீலங்கா படையினரால் சூட்டுக்காயங்களுடன் மூன்று சடலங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. 01.11.99 பிற்பகல் 4.30 மணியளவில் மூதூர் வைத்தியசாலையில் இச் சடலங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவர்கள் யார், எவ்வாறு கொல்லப்பட்டார்கள் என்பதை வைத்தியசாலையிடம் தெரிவிக்க மறுத்த படையினர் அவற்றை சவக்காலையில் வைக்குமாறு பணித்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. கொல்லப்பட்டுள்ள மூவரும் 35 வயதிற்கு உட்பட்டவர்களாகவே இருக்கலாம் என வைத்தியசாலைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# வடக்குக் கிழக்குத் தேர்தல் சாத்தியம் குறித்து கொழும்பில் மாநாடு

சிறீலங்கா ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்களிப்பினை வடக்குக் கிழக்கில் நடாத்துவது குறித்து ஆராய்வதற்காக வடக்குக் கிழக்கின் தேர்தல் அதிகாரிகள் கொழும்பிற்கு விரைவில் அழைக்கப்படவுள்ளனர். இவர்களுக்கான மாநாடொன்று விரைவில் நடைபெற இருப்பதாகத் தெரியவருகிறது. வடக்குக் கிழக்கிலுள்ள வாக்காளர்கள். தேர்தலில் வாக்களிப்பதற்கு ஏற்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பாதுகாப்பு உயர் அதிகாரிகளுக்கு ஏற்கனவே உத்தரவு விடுக்கப்பட்டுள்ளதாக பொதுஜனஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஜயரத்னா தெரிவித்துள்ளார்.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

## நால்வரதும்........

மரண தண்டனை நிறைவேற்றப்படும் என வேலூர்ச் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்ட கருணை மனுவில் மரணதண்டனைக் கைதிகளில் ஒருவரான நளினியின் நிலை குறித்து விரிவாக விளக்கப்பட்டுள்ளது. பிரபல வழக்கறிஞரான வதேரா இம் மனுவினை தயாரித்துள்ளார். ஒரு குழந்தையின் தாய் நளினி என்பதையும் அவரது குழந்தைக்கு கருணை செலுத்த வேண்டியதன் அடிப்படையில் பெற்றோருக்கு மரண தண்டனை அளிக்கப்படக் கூடாது எனவும் அவ் அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளது.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

## ரோந்து அணி........

புலிகள் பீரங்கித் தாக்குதலை நடாத்தினர் என இராணுவ தரப்பு செய்திகள் தெரிவித்துள்ளன.

விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலால் ஆத்திரமடைந்த படையினர் ஓட்டுமாவடி கிராமப்பகுதி நோக்கி கடுமையான துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்துள்ளனர். இதன் போது ஒரு குழந்தை உட்பட மூவர் காயமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

## புனர்வாழ்வுக்கு தமிழ்ச்சோலைகள் வழங்கிய நிதி

தமிழர் புனர்வாழ்வுக் கழக சிறுவர் மேம்பாட்டு நிதிக்காக சார்சேல் தமிழ்ச்சோலை, வில்லியே லூ பெல் தமிழ்ச்சோலை, குசன்வில் தமிழ்ச்சோலை, வில்தனுஸ் தமிழ்ச்சோலை ஆகிய பாடசாலைகளின் சார்பில் இரண்டாயிரம் பிரெஞ் பிராங்குகள் (2000F) தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரிடம் கையளிக்கப்பட்டது.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

## ஈழத்தில்........

ஆகியனவும் மரண தண்டனை விலக்கப்பட வேண்டும் என குரல் கொடுத்துள்ளன.

இதேவேளை சென்னை சட்டக்கல்லூரி மாணவர்கள் இந்நால்வரின் மரண தண்டனைக்கு எதிராக கடந்த வெள்ளியன்று சென்னை அரசினர் இல்லத்திற்கு முன்னதாக உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர். இந்த உண்ணாவிரத போராட்டத்தின்போது, இந்திய இராணுவம் ஈழமக்களுக்கு செய்த அட்டுழியங்களுக்கு என்ன தண்டனை வழங்குவது எனவும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

புகலிட நாடுகளிலும் மரண தண்டனைக்கு எதிரான போராட்டங்கள் வலுத்துள்ளன. ஜெனிவாவில் உள்ள ஐநா அலுவலகத்திற்கு முன்னால் கடந்த செவ்வாயன்று 200ற்கு மேற்பட்ட மக்கள் கூடி தமது எதிர்ப்பினை தெரிவித்துக் கொண்டார்கள். இவர்கள் தமது தலையினை கறுப்புத் துண்டினால் மூடியபடி கழுத்தை சுற்றிய கயிற்றுடன் நின்றது, அனைவரதும் கவனத்தையும் ஈர்த்துள்ளது. அத்துடன் 5000ற்கும் மேற்பட்டவர்களால் கையொப்பம் இடப்பட்ட கருணை மனுவொன்று ஐ.நாவின் இந்தியப் பிரதிநிதி ஊடாக இந்தியாவிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

# மன்னார் அரச அதிபர் விடுதலை

(01.11.99)

கடந்த செப்டெம்பர் மாதம் 4ம் திகதி சிறீலங்கா பொலிசாரினால் கைது செய்யப்பட்ட மன்னார் அரச அதிபர் எம். குருசினை சிறீலங்காவின் உயர் நீதிமன்றம் விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டுள்ளது. தனது கைதும், தடுத்து வைப்பும் சட்ட விரோதமானது எனக்கோரி இவர் தாக்கல் செய்த அடிப்படை மனித உரிமைகள் மனுவின் மீதான விசாரணையின் போதே நீதிமன்றம் அவரை விடுவித்துள்ளது.

தற்பொழுது குரூஸ் கல்கிசை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். கடந்த இருமாதகாலமாக இவர் தடுத்து வைக்கப்பட்டிருந்த போதிலும் இவருக்கு எதிரான குற்றப்பத்திரிகையை பொலிசார் தயார் செய்யாமையை சுட்டிக்காட்டிய நீதிபதிகள் அதன் அடிப்படையில் இவரை விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டுள்ளனர்.


## அம்பாள் வாகன சேவை
## AMBAL TRANSPORT

பொருட்களை ஏற்றி இறக்கவும், மங்கள வைபவங்கள், ஸ்தல யாத்திரைகள், சுற்றுலாக்கள், ஐரோப்பிய நாடுகளுக்கான 9 இருக்கைகள் கொண்ட வாகனசேவைகளுக்கு

**ஜெயம்:**



26, Rue Perdonnet, 75010 Paris.
Mo: La Chapelle
Tel: 06 09 58 55 48 / 06 10 38 44 92 / 06 13 31 32 35


# முதலாம் ஆண்டு சிரார்த்த தினம்

## பூசைப்பலி ஒப்புக்கொடுத்தல்

கிளிநொச்சி-ஸ்கந்தபுரத்தைச் சேர்ந்த சமாதான நீதவான் திரு.ஞா.அந்தோனிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், விவேகானந் (போராளி இளங்கோ), தேவானந் (போராளி குணாளன்), ஞானானந் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாருமான அந்தோனிப்பிள்ளை தேவியம்மா அவர்களின் முதலாவது சிரார்த்ததினத்தை நினைவு கூருமுகமாக 05.11.99-ல் ஒபேவில்லியே தேவாலயத்தில் காலை 9 மணிக்குப் பூசைப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவ்வண்ணம்
நண்பர்கள்.

Pub.


புதிய நூற்றாண்டின் உதயத்தில் எங்கள் உறவுகளும் பலமாகட்டும். அறுகுபோல் வேரூண்டிய உங்கள் இதழ், இன்று ஆல்போல் தளைக்கிறது. அதன் விழுதுகள் உங்கள் வாசல்தேடி வருகிறது. அதைப்பற்றி, விருட்சத்தைப் பலப்படுத்துங்கள்.

## 'ஈழமுரசு வாசகர் குடும்பம்'

**இக்குடும்பம் இனி எங்கள் பெருங் குடும்பமாகட்டும்!**

**புதிதாய்ப் பிறக்கும் இதில் இணைவது உங்கள் உரிமை!!**

தயாராகுங்கள். மேலதிக விபரங்களுடன் விரைவில் சந்திப்போம்....

ஈழமுரசு
Eelamurasu Weekly

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

மேற்கு லண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
Nº: 199, The Broadway, Southall, Middx. T.P: 0181/813 91 26
Pub

# ஈழத்தில் அழிவுசெய்த இந்தியப்படைக்கு யார் தண்டனை கொடுப்பது?

## மரணதண்டனைக்கு எதிராக இந்தியாவில் வலுக்கும் குரல்கள்

(01.11.99)

ராஜீவ் காந்தி கொலைவழக்கில் மரணதண்டனயை எதிர்நோக்கியிருக்கும் நான்கு பேரினதும் தண்டனையை விலக்கிக் கொள்ளுமாறு இந்தியாவில் குரல்கள் வலுக்கத் தொடங்கியுள்ளன. மரண தண்டனைக்கு எதிரான மனுவினை தற்போதைய இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டசின் சமதா கட்சி, சமாஜ்நவாய கட்சி ஆகியன அனுப்பி வைத்துள்ளன. இதனைவிட அகாலி தளத்தின் மான் பிரிவும் தூக்குத் தண்டனையை விலக்குமாறு அவசர வேண்டுகோளை விடுத்துள்ளது. இக் கட்சியின் தலைவர் சிம்ரஞ்சித்சிங் மான் இதுபற்றி தெரிவிக்கையில், மனித உரிமை கண்ணியத்திற்கு தூக்குத் தண்டனை எதிரானது எனவும் குறிப்பிட்டுள்ளார். முன்னதாக தமிழக முதலமைச்சர் கருணாநிதி, பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் ராமதாஸ், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழக பொது செயலாளர் வைகோ, விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பு

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# தொண்டமானின் மரணத்தால் இ.தொ.கா பிளவுபடுமா?

(01.11.99)

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவரும், சிறீலங்காவின் தோட்டத் தொழிற்துறை அமைச்சருமான தொண்டமான் நேற்று முன்தினம் இரவு காலமானார். இறக்கும்போது அவருக்கு வயது 86. தொடர்ந்து 22 ஆண்டுகளாக அமைச்சர் பதவியையும், நான்கு பிரதம மந்திரிகளின் அமைச்சரவையிலும் இடம் பெற்ற தொண்டமானின் மரணத்தின் பின்னர், இலங்கை தொழிலாளர் காங்கிரசில் பிளவுகள் ஏற்படும் அறிகுறிகள் தென்படுவதாக கொழும்பு அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக நுவரெலியாவில் உள்ள விடுதியொன்றில் இந்திய வம்சாவழி மக்கள் பேரணியில் கூட்டம் ஒன்று நடைபெற்ற வேளை அதில் கலந்துகொண்டிருந்த தொண்டமானுக்கு இருதயத்தாக்கு (மாரடைப்பு) ஏற்பட்டது. அதனையடுத்து அவர் அவசரமாக நுவரெலியா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். ஆயினும் தொண்டமானின் உடல்நிலை மேலும் மோசமடையவே உலங்குவானூர்தி மூலம் அவர் கொழும்பு ஜெயவர்த்தனபுர

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## தொண்டமானுக்கு அரச மரியாதை

மரணமடைந்த தொண்டமானுக்கு சிறீலங்கா அரச மரியாதையுடன் எதிர்வரும் வியாழனன்று இறுதிச்சடங்குகள் நடக்க ஏற்பாடாகியுள்ளன. சுதந்திரச் சதுக்கத்தில் இவரது தகனக்கிரியைகள் நடைபெறும் என சிறீ

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## ரோந்து அணிமீது பீரங்கித் தாக்குதல் 7 படையினர் பலி ஒருவர் படுகாயம்

(01.11.99)

மட்டு. வாழச்சேனைக்கு அருகில் உள்ள கிண்ணயடி இராணுவ முகாமில் இருந்து ரோந்து சென்ற படையினர் மீது விடுதலைப்புலிகள் நடாத்திய பீரங்கித் தாக்குதலில் 7 படையினர் கொல்லப்பட்டதுடன் ஒருவர் படுகாயமும் அடைந்துள்ளார்.

வழமைபோல் மாலைவேளையில் ரோந்து செல்லும் படையினரை கண்காணித்தே குறிப்பிட்ட நேரத்தில் அப்பகுதி மீது இலக்குத் தவறாது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தி படையினருக்கு இழப்பை ஏற்படுத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. தமது கட்டுப்பாட்டு பகுதியில் இருந்தே விடுதலைப்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)



## நால்வரதும் கருணை மனு ஆளுனரால் நிராகரிப்பு

### ஜனாதிபதியின் இறுதி முடிவு என்ன?

(01.11.99)

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் உச்ச நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்ட நான்கு பேரதும் கருணை மனுவினை தமிழக ஆளுனர் பாத்திமா பீபி நிராகரித்ததை அடுத்து தற்பொழுது இறுதி முயற்சியாக இந்திய ஜனாதிபதிக்கு கருணை மனு நான்கு பேர் சார்பாகவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதியும் கருணை மனுவினை நிராகரிப்பாரேயானால் அவர் நிராகரித்த தினத்தில் இருந்து ஏழு நாட்களுக்குள்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## ஒரிசாவில் 3000ற்கு மேல் மரணம்

ஒரிசாவில் ஏற்பட்ட சூறாவளியினால் 3000ற்கும் மேற்பட்டவர்கள் இறந்திருக்கலாம் என செய்திகள் தெரிவிக்கின்றன. இச் சூறாவளியினால் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட வீடுகள் அழிக்கப்பட்டுள்ளது எனவும் பத்துக்கு மேற்பட்ட மாவட்டங்கள் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது. மீட்புப்பணிகளும் நிவாரண உதவிகளும் உதவி நிறுவனங்களாலும் இராணுவ தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது பற்றிய மேலதிகச் செய்திகள் இந்திய செய்திப் பக்கத்தில்.

K.R.S. ENTERPRISES
கே.ஆர்.எஸ். என்ரபிறைசெஸ்
537 High Road,
Wembley
Middlesey, Hao 2 Dj,
Tel: 0181- 9024590
நிர்வாகி: G.சதீஸ்
Pub



★ Leela அரிசிமா - 89P ல் இருந்து
★ Kingfish- 2.59 ல் இருந்து
★ நீலக்கால் [துப்பரவு செய்த] நண்டு £3.89 ல் இருந்து
★ 20 Kg Broken Basmath £7.99 இலிருந்து
★ CD 2.99 இல் இருந்து
★ Audio 99 இல் இருந்து
★ நல்லெண்ணை £3.49; 1/2 போத்தல் £1.79
★ ஞானம்காட் 10% விலைக் கழிவில்
£20 இற்கு மேல் கொள்வனவு செய்தால் 1 Kg லீலா அரிசிமா இலவசம்!
லீலாவின் அனைத்துத் தயாரிப்புக்களும் மலிவு விலையில்!!